# அறிவுத்தேடல்

# வர்த்தகப்பிரிவு

க.பொ.த (உ/த) - வர்த்தகப்பிரிவு சார்ந்த மாதாந்த சஞ்சிகை

பல்கலைக்கழக பேராசிரியர்கள், கலாநிதிகள், சிரேஷ்ட்ட விரிவுரையாளர்களின் ஆக்கங்களை உள்ளடக்கி வெளிவரும் இலங்கையின் முதல் மாதாந்த வணிக சஞ்சிகை



The MCQ Quiz Bank
இம்முறை
170 வினாக்கள்

Maximum Reatail Price Rs. 95/=
ISSN-2012-6336

அறிவு பதிப்பகம்

21 இதழ்
2012 மார்ச்
ISSN-2012-6336

ACCA

CIMA

தேடல் @ உலா

Current Affairs Cafe

உயர்தர வணிக கற்கையின் தேசிய ஊடகம்

## இவ்விதழில் உள்ளே...

**வணிகக்கல்வித் தேடல்**

அணிகளின் செயற்பாடு
- பேராசிரியர் ஜகத் பண்டாரநாயக்க

ஆசிரியர் தேடல்

**பொருளியல் தேடல்**

நேரடி கலந்துரையாடல்
- பேராசிரியர் டேனி அத்தப்பத்து


ECON BITZ

**கணக்கீட்டுத் தேடல்**

நேர்காணல்
- சிரேஷ்ட்ட விரிவுரையாளர் தயானந்த அம்பலாங்கொட
- சிரேஷ்ட்ட விரிவுரையாளர் அனில் பர்னாந்து

ec way

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2012ம்

## ஆண்டு பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களே 150 நாள் வேலைத்திட்டத்துக்கு தயாரா?

2012ம் ஆண்டு பரீட்சைக்கு எஞ்சியிருப்பது ஏறக்குறைய 5 மாதங்கள் மாத்திரமே, எஞ்சியிருக்கும் காலப்பகுதியினை சிறப்பாகவும், ஒழுங்காகவும் பயன்படுத்தாவிடின் எமது பெறுபேறுகளில் வீழ்ச்சி ஏற்படுவது நிதர்சனம். இதனை தவிர்த்துக்கொள்ள நாம் எஞ்சியிருக்கும் 150 நாள் காலப்பகுதியினை மிகச்சிறப்பாக பயன்படுத்த வேண்டிய கட்டுப்பாடு காணப்படுகின்றது. இதன்படி எஞ்சியிருக்கும் 150 நாட்களை சிறப்பாக பயன்படுத்துவதற்கான ஒரு வேலைத்திட்டத்தை எமக்குள்ளே உருவாக்கி கொள்ளுதல் வேண்டும். மூன்று பாடங்களையும் சமனாக பயில தக்கதான முறைமையொன்றை அனுகுதல் வேண்டும். கணக்கீடு பாடம் சவாலாக அமையும் என்ற எதிர்வு கூறக்கூடிய நிலை உங்களிடம் காணப்படுதல் வேண்டும். ஆகவே கணக்கீட்டு பாடத்தில் ஒரு நாளைக்கு குறைந்தது 3 வினாக்களையேனும் பயிற்சி செய்ய தவற வேண்டாம். மேலும் வணிகக்கல்வி, பொருளியல் ஆகிய இரு பாடங்களையும் சமனான வகையில் பயில வேண்டும். இதற்கானதொரு வேலைத்திட்டத்தை உருவாக்க தவற வேண்டாம்.

ஒவ்வொரு நாளும்,

| | | |
|---|---|---|
| கணக்கீடு | - | 2 மணி 30 நிமிடம் |
| வணிகக்கல்வி | - | 2 மணி 30 நிமிடம் |
| பொருளியல் | - | 2 மணி 30 நிமிடம் |

உங்களுக்கு இது கடினமான ஒன்றாக புலப்படக்கூடும். ஆயினும் இது மிக மிக இலகுவானதொன்றே ஆகும். காரணம் 7½ மணித்தியாலம் பயில வேண்டும் என்றாலும், இந்த நடவடிக்கையை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டியதில்லை. ஒரு நாளில் 24 மணிநேரத்தில் இந் நடவடிக்கையை பகுதி பகுதியாக மேற்கொள்ள முடியும். எனவே 2012ன் மாணவர்களே வெற்றி இலக்கை எட்டிப் பிடிக்க கடினமாக உழையுங்கள்.

'கல்வி வாழ்க்கைக்கு'

இதழாசிரியர்,
பா.பானுசந்தர்

### தவிர்க்க முடியாத காரணத்தால்...

நாட்டின் பல்வேறு வகைகளிலும் விலையேற்றம் ஏற்பட்டு கொண்டிருக்கின்ற நிலையில் அனைத்து விதமான கிரயங்களும் அதிகரித்துள்ளன. அச்சிடல் கிரயம், பக்க வடிவமைப்பு கிரயம் என்பன அதிகரித்த நிலையில் எமது விலையினை ரூ. 10/-வால் அதிகரிக்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே அடுத்த இதழின் விலை ரூ. 105/- வாக அதிகரிக்கின்றது என்பதை தெரிவிக்கின்றோம்.

Editorial

- இதழாசிரியர்
  பா. பானுசந்தர்
  0719 494 227
- பிரதம பதிப்பாசிரியர்
  ச. சிவபாஸ்கரன்
  0777 747 245
- திட்ட ஆலோசகர்
  இரா. பிரவிந்த்
- பதிப்பகம்
  அறிவுப்பதிப்பகம்
  இல.3, செனு. கில்டாஸ் ஒழுங்கை,
  கொழும்பு - 03.
  0114 515 253
- கணனி வடிவமைப்பு
  M. சுகந்த
  0773 914 995
- புத்தக வடிவமைப்பு
  ADAH CREATIVE
  # 17/1, Singhe Rd, Mabola, Wattala.
  web : www.adahcreative.com
  Shan : 0773 926 306
  Suga : 0773 914 995
- அச்சகம்
  வீமாஸ் அச்சகம்
  இல. 82, ஸ்ரீ ரட்ணஜோதி
  மாவத்தை, கொழும்பு - 13.
  தொ.இல. 0112 431 588

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழுவாக, குழுவுக்குள் கருமமாற்றுதல் (Working in Teams)

பேராசிரியர் ஜகத்பண்டார நாயக்க
Visiting Professor
Scholl of Business Studies
Algonquin College - Canada



கிடையான கட்டளை சங்கிலியில் (Vertical - Chain of Command) தீர்மானங்களை மேற்கொள்ளும் உரிமை பெரும்பாலும் முகாமை மட்டங்களில் உயர் முகாமை மட்டங்களையே சாரும். இத்தகைய கிடையான ஒழுங்கமைப்பை கொண்ட நிறுவனங்களில் மாற்றங்கள் என்பது மிக மந்த கதியிலேயே இடம்பெறும். இங்கு ஊழியர்களின் சில பயன்மிக்க கருத்துக்களை மேல்மட்ட முகாமையாளர்கள் கருத்திற் கொள்ள மாட்டார்கள். தீர்மானமெடுத்தலின் போது ஊழியர்களை ஒருபோதும் புறக்கணிக்க கூடாது. இவர்களது கருத்துக்கள் பயன்மிக்கதாகவும், வினைத்திறனுடையதெனவும் நடைமுறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் பல்வேறு நிறுவனங்களும் தமது அன்றாட செயற்பாடுகளை குழு முறையில் மேற்கொள்கின்றன. குழு முறையில பல்வேறு நன்மைகள் காணப்பட்ட போதிலும், இம்முறைக்கு நிறுவனம் தனது நிறுவன கலாசாரத்தை மாற்ற வேண்டி ஏற்படும். முக்கியமாக முகாமையாளர்கள் குழுவினை சிறப்பாக வழிநடாத்துவதோடு, அக்குழுக்களுக்கு தீர்மானமெடுத்தல் தொடர்பில் அதிகார பகிர்வினையும் செய்தல் வேண்டும். அதே போன்று குறித்த குழுவுக்கு குறித்ததொரு இலக்கு வழங்கப்படுதல் வேண்டும். குழுவின் உறுப்பினர்களை தெளிவாக இணங்கானுதல் வேண்டும். குழுவின் உறுப்பினர்களுக்கு சரியான பயிற்சியினை வழங்குதல் வேண்டும். அவர்களின் காரிய சாதனைக்கு ஏற்றவாரு கொடுப்பனவை பெற்றுக்கொடுக்க வேண்டும். இங்கு இலாபப்பங்கு, மேலதிக கொடுப்பனவு, ஊக்குவிப்பு கொடுப்பனவு என்பவற்றை வழங்கமுடியும்.

### அணி (Team) என்றால் என்ன?

இலக்கொன்றை அடைந்து கொள்வதற்காக ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கும் ஒற்றுமையுடனும், பொறுப்புடனும் செயற்படும் இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்களின் கூட்டு அணி ஆகும். **(A Unit of two or more people who share a mission and collective responsibility as they work together to achieve a goal.)** குழுவிலிருந்து (Group) அணி (Team) என்பது வேறுபடுகின்றது.

### வேலைக் குழு (Work Group)

தகவல்களை பரிமாற்றிக்கொண்டு ஒவ்வொருவரது கருமங்களை சிறப்பாக செய்ய நபர்களுக்கிடையில் உதவிக்கொள்வர். வேலைக்குழுவானது குழு அங்கத்தவர் ஒவ்வொருவரதும் பங்களிப்பாகும். வேலைக் குழுவானது ஏதேனும் கருமம் தொடர்பில் செயற்படுவதோடு, அக்கருமம் தொடர்பில் கூட்டமாக பதிலளிக்க வேண்டிய பொறுப்பு உண்டு. அது மட்டுமின்றி குழு உறுப்பினர் ஒவ்வொருவரது எண்ணங்களை சரியாக பயன்படுத்தி சிறந்த பெறுபேறு பெறப்படும். தனித்தனியாக செயற்படுவதன் மூலம் பெறுகின்ற பெறுபேற்றை விட உயர் பெறுபேற்றை குழுவொன்றால் பெற முடியும்.

இம்முறை தற்காலத்தில் வணிகங்களில் பிரசித்தி பெற்ற முறையாக காணப்படுகின்றது. இம் முறையின் கீழ் சிறந்த பெறுபேற்றை பெற்றுக்கொள்ள நிறுவனத்தினுள் சிறந்த சூழல் காணப்படல் வேண்டும். குழுக்களுக்கான இலக்குகளை உயர் மட்ட முகாமை நிர்ணயிக்க வேண்டும். இக்குழு அவ் இலக்குகளை நோக்கி சரியான முறையில் பயணிக்க குழுத்தலைவர் வழிகாட்டுதல் வேண்டும்.

### அணியின் வகைகள் (Types of Teams)

அணியின் கட்டமைப்பு, தன்மை, நிறுவனத்தின் உபாய திட்டம், குழு உருவாக்கப்பட்டதன் நோக்கத்தினடிப்படையில் அவற்றை வகைபடுத்த முடியும். இதன்படி பொதுவாக காணக்கூடிய அணிகள் 5 வகைப்படும்.

01. பிரச்சினையை தீர்க்கும் அணி (Problem - Solving Team)
02. சுய முகாமை அணி (Self - Managed Team)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. செயற்பாட்டு அணி (Functional Team)
04. இடை தொழிற்பாட்டு அணி (Cross Functional Team)
05. இணைய அணிகள் / Cyber அணிகள் (Virtual Teams)

**01. பிரச்சினைகளை தீர்க்கும் அணிகள்**

இவ்வணிகளை பரவலாக நிறுவனங்களில் காணமுடியும். இவை தரச்சுற்று வட்டம் (Quality Circle) என அழைக்கப்படும். ஒரே வகுப்பில் அல்லது ஒரே துறையில் கடமையாற்றும் 5-12 ஊழியர்களைக்கொண்டு இக்குழு உருவாக்கப்படுவதோடு, இவர்கள் தாமாகவே முன்வந்து செயற்பாடுகளின் தரத்தை உயர்த்தவும், வினைத்திறனை உயர்த்தவும், வேலைச்சூழலை சிறப்பானதாக மாற்றி அமைக்கவும் தகுந்த உபாயங்களை கண்டறிய செயற்படுவர். குழுவின் கூட்டங்களில் கண்டறியப்படும் விடயங்களை உயர்மட்ட முகாமையாளர்களின் அனுமதியை பெற வழங்குவர்.

**02. சுய முகாமை அணிகள்**

பிரச்சினையை தீர்ப்பதற்கான அணிகளின் உயர் மட்டம் சுய முகாமை அணிகளாகும். இவ் அணிகளை பெயரில் குறிப்பிடுவது போன்று இவ்வணிகள் தமது செயற்பாடுகளை தாமே முகாமை செய்பவன. இங்கு இக்குழுக்களை உயர்மட்ட முகாமை மேலோட்டமாக ஒரு மேற்பார்வையையே செய்யும். இங்கு உண்மையாக அணியின் செயற்பாடுகள் உறுப்பினர்களாலேயே கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் (Control) அணியினுள்ளேயே இடம்பெறும். இங்கு உறுப்பினர்களின் தெரிவும் அணியையே சாரும்.

**03. இடை தொழிற்பாட்டு அணி**

இவற்றை கிடை அணிகள் எனவும் கூறமுடியும். நிறுவனத்தினுள் காணப்படும். வெவ்வேறு துறைகள் / திணைக்களங்கள் கிடையான / சமனான வகையில் தொழிற்படத்தக்கதாக இவ்வணிகள் அமைக்கப்படும். ஒவ்வொரு அணியிலும் சிறப்பறிவு மிக்கவர்களை கொண்டு இவ்வணிகள் அமைக்கப்படும். இவர்கள் நிறுவனத்தின் பல்வேறு செயற்பாடுகள் தொடர்பில் திறன் நிபுணத்துவத்தை கொண்டிருப்பர். வெவ்வேறு துறைகளில் தொழிற்பாடுகளையும் ஆற்றக் கூடிய திறன் அவர்களிடம் காணப்படும். இத்தகைய அணிகளினூடாக பல்வேறு நன்மைகளை பெறமுடியும்.

- அணியின் உறுப்பினரிடையே இலகுவாக தகவல்களை பரிமாறக் கூடியமை.
- அனைத்து துறைகளும் கூட்டமாக கடமையாற்றக்கூடிய தன்மை.
- பல்வேறு எண்ணங்கள் உருவாதல் (New Ideas)
- புதிய கொள்கைகளும், செயன்முறைகளும் உருவாதல்.
- நிறுவனத்தின் பிணக்குகள் தீர்த்தல் இலகுவடைதல்.

**இவ்விடை தொழிற்பாட்டு அணிகள் பல்வேறு வடிவங்களில் காணமுடியும்.**

**உ+ம் :-**

**விஷேட அணி (Task Force)**

ஏதேனும் குறிப்பிட்ட பிரச்சினையை தீர்ப்பதற்காக நிறுவனத்தின் அனைத்து துறைகளிலும் தற்காலிகமாக தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களைக்கொண்டு உருவாக்கப்படும் அணி விஷேட அணி ஆகும். அவர்களது நோக்கம் பிரச்சினை தீர்க்கப்பட்டவுடன் அவ்வணி கலைக்கப்படும். கலைக்கப்பட்ட பின்பு அதன் உறுப்பினர்கள் தமது பழைய கடமைகளை பொறுப்பேற்பர்.

**சிறப்பு நோக்கத்திலான அணி (Special Purpose Teams)**

ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று சிறப்பு அணிகள் போன்று சிறப்பு நோக்கத்திலான அணிகள் ஏதேனும் குறிப்பிட்ட நோக்கத்தில் செயற்படும். சிறப்பு அணிகளிலிருந்து இச் சிறப்பு நோக்கத்திலான அணிகள் வேறுபடுவதற்கான பிரதான காரணம் இவை வெளிவாரியாக ஒரு நிர்வாக கட்டமைப்பு காணப்படும். இவ்வணிக்கான உறுப்பினர்கள் உள்வாரியாக தெரிவு செய்யப்பட்ட போதிலும், இவர்கள் வெளிப்படையான உறுப்பினர்களாக இவர்கள் இயங்குவர். இவர்கள் அறிக்கையிடும் தொழிற்பாட்டை மேற்கொள்வர். இவர்கள் தமது தொழிற்பாடுகள் தொடர்பில் பூரண சுதந்திரம் காணப்படுகின்றது. உற்பத்திகள், புதிய உற்பத்திகளை உருவாக்குதல் தொடர்பில் இக்குழுக்கள் செயற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கமிட்டி / சங்கங்கள் (Committee)**
விஷேட அணிகளோடு ஒப்பிடும்போது சங்கங்களுக்கு நீண்ட ஆயுளுண்டு. அதாவது நிறுவனத்தின் ஒரு பகுதியாக சங்கம் செயற்படும். இது நிறுவனத்தின் காணப்படும் தொழிற்பாடுகள் தொடர்பில் உருவாக்கப்படும். உதாரணமாக ஊழியர் நலன்புரி (Grievance Comittee) இச்சங்கம் நிகழ்காலத்தில் ஊழியர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்க்கும் முகமாக உருவாக்கப்படும் இச்சங்கங்களுக்கு பதவி அடிப்படையிலேயே உறுப்பினர் தெரிவு செய்யப்படுபவர்.

**இணையத்தள அணிகள் (Virtual Teams)**
உலகளாவிய ரீதியில் செயற்படும் ஊழியர்களை ஒன்றிணைக்கும் வகையில் இவ்வணிகள் அமைக்கப்படும். பல்வேறு சேவை நிலையங்களில் பௌதீகரீதியில் தொழிற்படும் ஊழியர்களைக் கொண்டு இவ்வணி உருவாக்கப்படும். தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதனூடாக கலந்துரையாடல்களை மேற்கொண்டு பொது உடன்பாடு தொடர்பில் தீர்மாணம் தீர்மானம் மேற் கொள்ளப்படும். நடைமுறையில் இது தொடர்பில் இணையத்தை சிறப்பாக பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு கிட்டியுள்ளது.

உள்ளக வலையமைப்பு, பரந்த வலையமைப்பு, மின்னஞ்சல், குரல் அஞ்சல், தொலைபேசி, இலத்திரனியல் ஊடகங்கள், இலத்திரனியல் ஒன்றுகூடல்கள் (Electronic Conferrance) போன்றவற்றை குறிப்பிட முடியும். கடந்த காலங்களைப் போலன்றி இன்று உலகளாவிய ரீதியில் அணியாக செயற்படக்கூடிய வாய்ப்பு தகவல் தொழில்நுட்பத்தினூடாக கிட்டியுள்ளது. இவர்கள் பெரும்பாலும் நேருக்கு நேர் பௌதீக ரீதியில் சந்தித்து கொள்ளல் இடம்பெறாவிடினும், சில வேளைகளில் இவர்கள் நேருக்கு நேர் சந்திப்பதுண்டு.

**வேலை அணிகளின் நன்மைகளும், தீமைகளும்**

நிறுவனத்தின் பல்வேறு நோக்கங்களை அடைந்துக் கொள்ளல் தொடர்பில் அணிகள் பயனுடையவையாக இருக்கின்ற போதிலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இது பொருத்தமானதாக அமையாது. ஆகவே அணி முறைமையை நடைமுறைப்படுத்த முன் அதன் நன்மை தீமைகளை ஆராய்வது அவசியமாகும்.

அணி முறையின் பிரதான நன்மை யாதெனில் உறுப்பினர்களின் பல்துறைசார்ந்த அறிவு, ஆற்றலூடாக சிறந்த தீர்மானங்களை மேற்கொள்ளமுடியும். உறுப்பினர்கள் பல்வேறு திறன்கள், அறிவு, அனுபவங்களை சிறந்த வகையில் பயன்படுத்திக்கொள்ள முடியும். தீர்மானங்கள் பெரும்பாலோனோரினால் கலந்தாலோசித்து மேற்கொள்ளப்படுவதால் அனைவராலும் ஏற்றக் கொள்ளப்படும். அணி முறையானது உறுப்பினர்களின் திறன்களையும், புத்தாக்கங்களையும் கண்டறிந்து கொள்ள உதவும். அது மட்டுமின்றி ஊழியர் ஊக்குவிப்பு, வினைத்திறன் அதிகரிப்புக்கு வழிவகுக்கும் ஊழியர்கள் அணிகளை நோக்கத்தை கொண்ட, அன்னியோன்றிய பொறுப்புடைய அலகாக கருதுகின்றனர். அணிகளினால் ஊழியர் மத்தியில் பொறுப்புணர்வு, ஒவ்வொருவருக்கிடையில் மதிப்பு என்பன அதிகரிக்கும். ஊழியர்களின் மன அழுத்தத்தை குறைப்பபதற்கு அணி முறை உதவும். ஊழியர் மத்தியில் ஏற்படுகின்ற பிணக்குகளை குறைப்பதற்கும் இம்முறை உதவும். அணி உறுப்பினர்கள் பல்வேறு திறன்களையும், அனுபவத்தையும் பெற்றிருப்பதால் ஒட்டுமொத்தமாக நிறுவனத்தின் வினைத்திறன் அதிகரிக்கும். ஒட்டுமொத்தமாக ஊழியர்களுக்கு தொழில் திருப்தியை ஏற்படுத்துவதோடு, வேலையின் தரத்தையும் அதிகரித்து, நிறுவனத்தின் நோக்கத்தை சரியாக அடைந்துகொள்ள அணிமுறை வழிவகுக்கும்.

மேற்கூறிய வகையில் பல்வேறு நன்மைகள் காணப்பட்ட போதிலும், அணி முறையில் சில தீமைகளும் இருக்கவே செய்கின்றன. பிரதானமாக முகாமையாளர்களின் சில அதிகாரங்கள் அணிகளுக்கு வழங்கப் படுவதால் முகாமையாளர்கள் அதிருப்தியுறுவர். அணி முறையில் மேற்பார்வை செய்தல் குறைவாக காணப்படுவதால் இடைமட்ட, கீழ் மட்ட முகாமையாளர்களின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்படுவதால் அவர்களது பங்கு வீழ்ச்சியடையும்.

அணி முறையால் வேலை மாற்றம் ஏற்படுவதால் ஊழியர் மத்தியில் தேவையற்ற பயம் ஏற்படக்கூடும். அதே போன்று அணி முறையில் கூட்டு பொறுப்பு காணப்படுவதால் தனி நபர்களின் பொறுப்பு என்ற விடயம் குறைவடையக்கூடும். அதே போன்று சுயமாக இயங்கக்கூடிய (Free Riders) சந்தர்ப்பம் காணப்படுவதால் பிழையான வழிகளில் செயற்படக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படலாம். அதே போன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பறிவு மிக்க சிந்தனைகளின் (Expert Thinking) அணி முறையால் ஏனைய உறுப்பினர்களால் புறக்கணிக்கப்படலாம். மேலும் அணியை ஒன்றுதிரட்ட, கூட்டங்களை நடாத்த பாரிய கிரயமொன்றை தாங்க வேண்டி ஏற்படலாம்.

**வினைத்திறனான அணி ஒன்றின் பண்புகள்**
**(Characteristics of Effective Teams)**

அணியின் வெற்றிக்கு பிரதான காரணி அதன் அளவு அல்லது அதன் உறுப்பினர் எண்ணிக்கையே ஆகும். அணியொன்று 5-12 பேர்வரை உறுப்பினர்களை கொண்டிருக்க வேண்டும். உறுப்பினர்களின் எண்ணிக்கை 5ஐ விட குறைவாக காணப்படின் அறிவு, திறன் அளவு குறைவாகவே இருக்கும். உறுப்பினர்கள் எண்ணிக்கை 12ஐ விட அதிகமெனின் ஏதேனும் ஒரு விடயத்தில் ஒருமித்த கருத்தை பெறுவது கடினமாகும். அதே போன்று சில உறுப்பினர்களின் கருத்துக்களை கேட்டறியும் சந்தர்ப்பம் கிடைக்காது. அதே உறுப்பினர்களின் கூட்டத்துக்கான வரவின்மையும் அதிகரிக்கும். அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் அணி தலைவரின் பொறுப்பும் கடினமானதாக அமையும். ஆகவே அணிகள் 5-12 உறுப்பினர்களையே கொண்டிருத்தல் சிறந்தது. இவற்றிற்கு மேலதிகமாக பின்வரும் விடயங்களையும் ஒரு அணி கொண்டிருத்தல் வேண்டும்.

01. நோக்கம் தொடர்பான தெளிவான வரையறை
Clear Sense of Purpose

02. வெளிப்படையாகவும், நியாயமாகவும் தொடர்பாடல்
Open & Honest Communication

03. புத்தாக்க சிந்தனை
Creative Thinking

04. பிரதான பிரச்சினை தொடர்பில் கவனஞ் செய்தல்
Focus on Key issues

05. ஒருமைப்பாட்டுடன் தீர்மானமெடுத்தல்
Decision by Consensus

## Current Affairs Cafe

- by Editor -

**இலங்கையில் ஊழியப்படை பங்கு கொள்ளல் வீதத்தின் போக்கு**

ஊழியப்படை பங்கு கொள்ளல் வீதமானது வேலை செய்யும் வயது சனத்தொகையில் எவ் வெண்ணிக்கையானோர் ஊழியப்படையில் உள்ளடங்குவார்கள் என்பதை அடிப்படையாக கொண்டு கணிப்பீடு செய்யப்படுகின்றது. இதன் இலங்கை நிலை பின்வருமாறு.

| ஆண்டு | ஊழியப்படை பங்குகொள்ளும் வீதம் |
|---|---|
| 2004 | 49.6% |
| 2005 | 49.3% |
| 2006 | 51.2% |
| 2007 | 49.8% |
| 2008 | 48.5% |
| 2009 | 48.7% |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவமிக்க ஆசிரியரின் பார்வையில்

# வணிகம் தொடர்பான ஒரு பார்வை

K.K. அரஸ்
சிரேஷ்ட வணிகக்கல்வி ஆசிரியர்
மட்டு அம்பாறை




வணிகம் என்பது தொடர்பில் பல்வேறு விதமான வரைவிலக்கணங்கள், முன்வைக்கப்படலாம்.

- இலாப நோக்குடன் அல்லது இலாப நோக்கமில்லாமல் நடாத்தப்படும் எந்தவொரு பொருளாதாரக் கருமமும் வணிகம் ஆகும்.
- பொருட்கள் சேவைகளை வழங்கும் மக்களின் எல்லாப் பணிகளும் வணிகம் ஆகும்.
- மனித தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்வதற்கான எந்தவொரு பொருளாதாரக் கருமமும் வணிகம் ஆகும்.

எவ்வாறெனினும், வணிகம் என்ற பதத்துக்கு பொதுவாக பின்வருமாறு வரைவிலக்கணம் ஒன்றினை முன்வைத்துக் கொள்ளலாம்.

இலாபநோக்குடன் அல்லது இலாப நோக்கமில்லாமல், மனித தேவைகளினையும், விருப்பங்களினையும் பூர்த்தி செய்து கொள்வதற்கான பொருட்கள் மற்றும் சேவைகளினை உற்பத்தி செய்தல், வினியோகித்தல், சந்தைப்படுத்தல் என்பவற்றுடன் இணைந்த எந்தவொரு பொருளாதார நடவடிக்கைகளும் வணிகம் எனப்படும். அனேகமான வணிகத்தின் பின்னணியிலுள்ள பிரதான சக்தி இலாபம் எனக் கூறலாம். எவ்வாறெனினும், அனைத்து வணிகத்தினதும் நோக்கம் இலாபம் பெறுவது மட்டுமல்ல. இலாபத்தை எதிர்பார்க்காத (Not for Profit) வணிகங்களும் உண்டு.



எந்தவொரு வணிகத்தினதும் பிரதான நோக்கம் இலாபம் ஈட்டுதலே ஆகும். என்பதனை ஏற்றுக் கொள்ளமுடியாது. இலாப நோக்குடைய நிறுவனங்கள் மட்டுமல்லாமல் இலாப நோக்கற்ற அதாவது சேவை நோக்குடைய நிறுவனங்களும் காணப்படுகின்றன. எனவே சமூக சேவை தொடர்பான நிறுவனங்களும் காணப்படுவதனால் எந்தவொரு வணிகத்தினதும் நோக்கம் இலாப நோக்கம் என குறிப்பிட முடியாது. உதாரணமாக சமூக சேவை நிறுவனங்கள், செஞ்சிலுவை சங்கங்கள், சர்வோதயம், லயன்ஸ்கழகம் போன்றவைகள் இலாப நோக்கற்ற சேவை நோக்குடைய நிறுவனங்களே.

இவ்வாறு இலாப நோக்கமற்ற வணிகங்கள்கூட வணிகம் என்ற பதத்தினுள் உள்ளடக்கப்பட்டவைகளாகவே காணப்படுகின்றன. இவ் இலாப நோக்கமற்ற நிறுவனங்களானது தமது நாளாந்த செயற்பாடுகளின்போதான நடவடிக்கைகளின்போது ஏற்படக்கூடிய சம்பளங்கள் கூலிக்கொடுப்பனவுகள், மின்சார, தொலைபேசி கட்டணங்களுக்கான செலவினங்களினை மேற்கொள்வதற்காகவேனும் அவை போதுமானளவு நிதியினை, வருமானங்களினை உழைக்கவேண்டிய தேவை காணப்படுகின்றது. இல்லையேல் அவை நிலைத்திருக்க முடியாது போகலாம். அவ்வகையில் இலாபநோக்கமற்ற சேவைநோக்குடைய வணிகங்களானது நிதியினையும், வருமானங்களினையும் பெற்றுக்கொள்ளும் பிரதான மூலங்களாக பின்வருவன காணப்படுகின்றன.

01. அங்கத்துவக் கட்டணங்கள் அல்லது சந்தா
02. நன்கொடைகள்
03. அரசாங்க மானியங்களும், உதவிகளும்
04. உள்நாட்டு வெளிநாட்டு அனுசரணை
05. கலை நிகழ்ச்சிகள், நுழைவுச்சீட்டுக்கள் விற்பனை செய்து நிதி திரட்டும் நடவடிக்கைகள்

உயர்தர வணிகப்பிரிவில் கல்விகற்கும் மாணவனொருவன் இலாபநோக்கம், இலாபநோக்கமற்ற இரு வணிகங்களுக்கும் இடையிலான அறிவினையும் உட்கொண்டு வணிகம் என்ற எண்ணக்கருவினை விளக்குதல் சிறந்தது.

அறிவுத்தேடல் - இதழ் - 13 (பேராசிரியர் ஜகத்பண்டார நாயக்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வணிகம் பற்றிய கல்வி ஏன் அவசியமாகும்.**

- இலாப நோக்கத்துடன் அல்லது இலாபநோக்கமற்ற வகையில் மனித தேவைகளினையும், விருப்பங்களினையும் பூர்த்தி செய்து கொள்வதற்கான பொருட்களையும், சேவைகளையும் உற்பத்தி செய்தல், பங்கிடுதல், சந்தைப்படுத்துதல், துணைச்சேவைகள் என்ற பல்வேறு நடவடிக்கைகளினை உள்ளடக்கிய எந்தவொரு பொருளாதாரக் கருமமும் வணிகம் எனப்படும்.
- இவ்வணிகம் தொடர்பான கற்கை அல்லது கல்வி வணிகக் கல்வி எனப்படும்.

நாம் என்ன வேலையில் ஈடுபட்டிருக்கின்ற போதிலும் நமது சேவையின் கருமங்கள் தொடர்பிலும், நமது வாழ்க்கை தொடர்பிலும் வணிகம் அளப்பரிய பங்காற்றுகிறது. எமது எதிர்பார்ப்பு முகாமையாளராவதா? முயற்சியாளராவதா? அப்படியானால் நாம் ஒரு வணிகத்தை நடாத்தி செல்வது எவ்வாறு என்பது முக்கியமானது. நாம் வைத்தியர், வழக்கறிஞர், பொறியியலாளர், கணக்காளர் போன்ற தொழில்களில் ஒன்றை புரிய எண்ணலாம்.

அவ்வாறானால் நமது வாடிக்கையாளருனும் ஊழியர்களுடனும் சேவையாற்ற வேண்டி ஏற்படும். அப்போது எமது கருமங்களினை செயல்திறனுடன் செய்ய வேண்டிய தேவையேற்படும். நாம் அரச நிறுவனம், தனிப்பட்ட நிறுவனம் அல்லது வணிகமல்லாத நிறுவனமொன்றில் பணி செய்ய எதிர்பார்க்கலாம். அப்போது எமது பணியின் வெற்றிக்கு வணிகம் பற்றிய அறிவு உதவியாக அமையும்.

அது மட்டுமல்லாமல் நாம் நுகர்வோர்களில் ஒருவராக நமது நாளாந்த கருமங்களை செச்சனவே புரிவதற்கும், வணிக உலகைப் பற்றி சிறந்த அறிவுள்ள தர்க்க ரீதியில் சிந்திக்கதக்க அறிவுள்ள பலம் வாய்ந்த நுகர்வோராகவும், நற்பிரஜையாகவும் செயற்படுவதற்குரிய ஆற்றலை பெற்றுக்கொள்ளவும் வணிக கல்வியை கற்று இருத்தல் அவசியமாகும்.

வணிகத்துறையில் பொருளியல், கணக்கீடு, முகாமைத்துவம், முயற்சியாண்மை, உற்பத்தி, சந்தைப்படுத்தல், மானிட வள நடவடிக்கை, நிதி நடவடிக்கை தொடர்பான ஒவ்வொரு துறையில் உருவாகும் தொழில், உயர் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பான அறிவினையும் பெற்றுக் கொள்ள வணிகம், வணிகக்கல்வி அவசியமாகும்.
இப்பொழுது ஒரு வணிகத்தில் சேவை செய்பவராக இருப்பினும் அவ்வாறில்லாவிடின் எதிர்காலத்தில் சேவை செய்வதற்கு எண்ணுபவராக இருப்பினும் வணிகக் கல்வியை அத்தகைய எல்லோரும் கற்றிருத்தல் முக்கியமானது. நாம் விஞ்ஞான பாடத்தை அல்லது கணித பாடத்தை அல்லது வணிக பாடத்தை கற்ற போதிலும் எதிர்காலத்தில் ஏதாவது ஒரு வணிகத்தில் சேவையாற்ற வேண்டியேற்படும். அந்த வணிகம் இலாபமாக எதிர்பார்க்கும் வணிகமாகவோ அல்லது இலாபம் எதிர்பார்க்காத வணிகமாகவோ இருக்க முடியும். ஆனால் எந்த வகை வணிகமாக இருந்த போதிலும் ஒரே விதமான தத்துவங்களை அடிப்படையாக கொண்டு காணப்படுவதனால் வணிகம், வணிக கல்வி பற்றி கற்றிருத்தல் முக்கியம்னதாகவே அமைகின்றது.

சுருங்க கூறின் வணிகக்கல்வி தொடர்பான அறிவை ஒருவர் பெற்றுக்கொள்வதன் மூலம்

- தாமே வணிகமொன்றை ஆரம்பிக்கவும் அதனை கொண்டு நடாத்துவதற்கான ஆற்றலைப் பெற்றுக் கொள்ளலாம்.
- வேலை ஒன்றில் ஈடுபடுவதற்கான அறிவை பெற்றுக்கொள்ளலாம்.
- வணிக உலகை பற்றி சிறந்த அறிவுள்ள பலம் வாய்ந்த தர்க்க ரீதியில் சிந்திக்கத்தக்க நுகர்வோராகவும், நற்பிரஜையாகவும் செயற்படுவதற்கான ஆற்றலை பெற்றுக்கொள்ளமுடியும் என்பதனால் வணிகக்கல்வி பாடம் முக்கியமானதாகவும் அவசியமானதாகவும் காணப்படுகின்றது.

**வணிகக்கல்வி வினாத்தாள் அமைப்புகள்**
**(பழைய பாடத்திட்ட வினா அமைப்பு)**

**வினாத்தாள் - I - அமைப்பு**


01. ஒரு சமுதாயத்தின் விருப்பங்கள் தேவைகளை நிறைவு செய்வதற்கு பொருட்களையும், சேவைகளையும் வழங்குகின்ற அதேவேளை இலாபத்தை உருவாக்குகின்ற பதத்தை தெரிவு செய்க.
    1. முதன் நிலைக் கைத்தொழில்
    2. இரண்டாம் நிலைக் கைத்தொழில்
    3. மூன்றாம் நிலைக் கைத்தொழில்
    4. வணிகம்
    5. வியாபாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. நிறுவனமொன்று பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் இலாபத்தை உழைப்பதற்கு விரும்புகின்றது. இக்கூற்று தொடர்பாக மிகவும் பொருத்தமான பதம் யாது?
1. தனியார் கம்பனி
2. பங்குடமை
3. வணிகம்
4. கூட்டுத்தாபனம்
5. பொதுக்கம்பனி

**வினாத்தாள் - II - அமைப்பு**

01. “வணிகமொன்று” என்பதால் கருதப்படுவது யாது?
இலாப நோக்கத்துடன் அல்லது இலாபநோக்கமற்ற வகையில் மனித தேவைகளினையும், விருப்பங்களினையும் பூர்த்தி செய்து கொள்வதற்கான பொருட்களையும், சேவைகளையும் உற்பத்தி செய்தல், பங்கிடுதல், சந்தைப்படுத்துதல், துணைச்சேவைகள் என்ற பல்வேறு நடவடிக்கைகளினை உள்ளடக்கிய எந்தவொரு பொருளாதாரக் கருமமும் வணிகம் எனப்படும்.





**வணிகக்கல்வி வினாத்தாள் அமைப்புகள்**
**(புதிய பாடத்திட்ட வினா அமைப்பு)**

**வினாத்தாள் - I - அமைப்பு**

01. வணிகம் என்ற எண்ணக்கரு தொடர்புடைய வினாவுக்கு ஐந்து மாணவர்களால் தரப்பட்ட விடைகள் கீழே தரப்பட்டுள்ளன.
(a) விலைக்கு வாங்குதலுடனும் விற்றலுடனும் சம்பந்தப்பட்ட எல்லாப் பணிகளும் வணிகமாகும்
(b) இலாப நோக்குடன் அல்லது இலாப நோக்கமில்லாமல் நடாத்தப்படும் எந்த ஒரு பொருளாதாரக் கருமமும் வணிகமாகும்
(c) பொருள் சேவைகளை வழங்கும் மக்களின் எல்லாப் பணிகளும் வணிகமாகும்
(d) மனித தேவையையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்வதற்கான எந்த ஒரு பொருளாதாரக் கருமமும் வணிகமாகும்.
(e) பண்டங்களினதும் சேவைகளினதும் பரிமாற்றத்துடன் சம்பந்தப்பட்ட எந்த ஒரு பணியும் வணிகமாகும்
மேலுள்ள விடைகளில் மிகச் சரியான விடைகளை உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க
1) a, c. d 2) a, c, e 3) b, c, d 4) b, d, e 5) c, d, e
(.............)

02. வணிகத்தின் பிரதான பகுதிகளை காட்டும் வரைபடம் கீழே தரப்படுகின்றது. வரைபடத்தில் உள்ள வெற்றுப் பெட்டிக்குள் சரியான சொற்களை இடுவதன் மூலம் நிரப்புக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினாத்தாள் - II - அமைப்பு**

01. எந்தவொரு வணிகத்தினதும் பிரதான நோக்கம் இலாபம் ஈட்டுதலாகும்" மேற்குறித்த கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

- உடன்படவில்லை 1 புள்ளி

3 புள்ளி

02. "வணிகம்" என்ற பதத்துக்கு வழங்கப்பட்ட ஒரு விரிவான வரைவிலக்கணம் பின்வரும்
"இலாப அல்லது இலாப நோக்கற்ற முறையில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு பொருளாதார நடவடிக்கையும் வணிகம் எனப்படும்."

இவ்வரைவிலக்கணத்தின் பிரகாரம் இலாப நோக்கற்ற வணிகங்கள் கூட இதனுள்ளே அடங்குகின்றனவாயின், இலாபத்தை ஈட்டாமல் ஒரு வணிகம் எவ்வாறு நிலைத்திருக்க முடியும்? விளக்குக.

4 புள்ளி

## Current Affairs Cafe

- by Editor -

**இம்முறை அகில இலங்கைரீதியில் முதல் 10 இடங்களைப்பெற்ற மாணவர்களின் விபரம்.**

| பெயர் | பாடசாலை | மாவட்டம் |
|---|---|---|
| 01. இசாரா டில்ஹானி | தெபரவெவ தேசிய பாடசாலை | அம்பாந்தோட்டை |
| 02. ரவிந்து சுபுன் லியனகே | ரிச்மன் கல்லூரி | காலி |
| 03. ஒசடி லக்ஷனா அமரசிங்க | விசாகா கல்லூரி | கொழும்பு |
| 04. அமில சந்தறுவன் | பண்டாரநாயக்க கல்லூரி | கம்பஹா |
| 05. சஹாப் மொஹமட் நுஸ்லான் | டி. எஸ். சேனாநாயக்க கல்லூரி | கொழும்பு |
| 06. திலினி தாரகா அமரசிங்க | புனித தோமஸ் மகளீர் கல்லூரி | மாத்தறை |
| 07. பாக்யா புரொமொதினி | பண்டாரநாயக்க கல்லூரி | கம்பஹா |
| 08. புரொபுத்த வினிசுரு கம்லத் | புனித பீட்டர் கல்லூரி | கொழும்பு |
| 09. புத்திகா சேனாநாயக்க | தேவி மகளீர் கல்லூரி | கொழும்பு |
| 10. டயஸ் சனுக சதுரங்க | றோயல் கல்லூரி | கொழும்பு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



K.K. அரஸ்
சிரேஷ்ட வணிகக்கல்வி ஆசிரியர்
மட்டு அம்பாறை

The MCQ
Quiz Bank

01. நிதி முகாமையின் இரண்டு பிரதான தொழில் பாடுகள் எவை?
i. ..........................................................................
ii. ..........................................................................

02. நிறுவனமொன்றிற்கு ஏன் மூலதனம் தேவைப்படுகின்றது. இரண்டு பிரதான காரணங்களைத் தருக?
i. ..........................................................................
ii. ..........................................................................

03. உடமை அடிப்படையில் நிறுவனமொன்றின் மூலதனமானது எங்ஙனம் இரண்டு வகுதிகளாக பிரிக்கலாம்.?
i. ..........................................................................
ii. ..........................................................................

04. a) எவ்வகையான சொத்துக்கள் நிறுவனமொன்றின் நிலையான மூலதனத்தை வழமையாக எடுத்துக் காட்டும்?
..........................................................................

b) சுற்று முதல் (சுழல் மூலதனம்) என்பதன் கருத்தென்ன?
..........................................................................
..........................................................................
..........................................................................

05. a) மிகையாக மூலதனமிடப்பட்ட வியாபாரம் ஒன்றின் முக்கிய இயல்பு யாது?
..........................................................................

b) ஒரு நிறுவனத்தின் நிதி நிலமையை மிகை வியாபாரம் எவ்வாறு பாதிக்கின்றது?
..........................................................................

06. உயர் மூலதனக்கட்டமைப்பு எனப்படுவது
1. கடன் மூலதனமானது உரிமை மூலதனத்தைவிட உயர்வானது
2. உரிமை மூலதனமானது கடன் மூலதனத்தைவிட உயர்வானது.
3. நிறுத்திவைக்கப்படும் உழைப்புக்கள் பங்கு மூலதனத்தைவிட உயர்வானது.
4. நீண்ட தவணை மூலதனம் குறும் தவணை மூலதனத்தைவிட உயர்வானது.
5. நிலையான மூலதனம் தொழிற்படு மூலதனத்தைவிட உயர்வானது.

07. குறைவிணைப்பு மூலதன அமைப்பு என்பதன் கருத்தென்ன?
..........................................................................
..........................................................................

08. பின்வருவனவற்றுள் எது ஒரு நேரில் நிதி மூலமாகும்?
1) வங்கி மேலதிகப்பற்று
2) சாதாரண பங்குகளை வழங்குதல்
3) முன்னுரிமைப் பங்குகளை வழங்குதல்
4) தீபெஞ்சர்களை வழங்குதல்
5) நிறுத்திவைத்த உழைப்புக்கள்

09. பின்வருவனவற்றுள் எது காரணமாக ஒரு வணிகத்தில் காசு வெளிப்பாய்ச்சல் நிகழ்வதில்லை?
1) சொத்துக்களின் கொள்வனவு
2) சம்பளங்களும் கூலிகளும்
3) கடன் தவணைக் கட்டணங்கள்
4) முதலீடுகள் மீதான வட்டி
5) பங்கிலாபங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. நிதி முகாமையின் இரண்டு பிரதான தொழில் பாடுகள் எவை?
i. ..........................................................................
ii. ..........................................................................

02. நிறுவனமொன்றிற்கு ஏன் மூலதனம் தேவைப்படுகின்றது. இரண்டு பிரதான காரணங்களைத் தருக?
i. ..........................................................................
ii. ..........................................................................

03. உடமை அடிப்படையில் நிறுவனமொன்றின் மூலதனமானது எங்ஙனம் இரண்டு வகுதிகளாக பிரிக்கலாம்.?
i. ..........................................................................
ii. ..........................................................................

04. a) எவ்வகையான சொத்துக்கள் நிறுவனமொன்றின் நிலையான மூலதனத்தை வழமையாக எடுத்துக் காட்டும்?
..........................................................................

b) சுற்று முதல் (சுழல் மூலதனம்) என்பதன் கருத்தென்ன?
..........................................................................
..........................................................................
..........................................................................

05. a) மிகையாக மூலதனமிடப்பட்ட வியாபாரம் ஒன்றின் முக்கிய இயல்பு யாது?
..........................................................................

b) ஒரு நிறுவனத்தின் நிதி நிலமையை மிகை வியாபாரம் எவ்வாறு பாதிக்கின்றது?
..........................................................................

06. உயர் மூலதனக்கட்டமைப்பு எனப்படுவது
1. கடன் மூலதனமானது உரிமை மூலதனத்தைவிட உயர்வானது
2. உரிமை மூலதனமானது கடன் மூலதனத்தைவிட உயர்வானது.
3. நிறுத்திவைக்கப்படும் உழைப்புக்கள் பங்கு மூலதனத்தைவிட உயர்வானது.
4. நீண்ட தவணை மூலதனம் குறும் தவணை மூலதனத்தைவிட உயர்வானது.
5. நிலையான மூலதனம் தொழிற்படு மூலதனத்தைவிட உயர்வானது.

07. குறைவிணைப்பு மூலதன அமைப்பு என்பதன் கருத்தென்ன?
..........................................................................
..........................................................................

08. பின்வருவனவற்றுள் எது ஒரு நேரில் நிதி மூலமாகும்?
1) வங்கி மேலதிகப்பற்று
2) சாதாரண பங்குகளை வழங்குதல்
3) முன்னுரிமைப் பங்குகளை வழங்குதல்
4) தீபெஞ்சர்களை வழங்குதல்
5) நிறுத்திவைத்த உழைப்புக்கள்

09. பின்வருவனவற்றுள் எது காரணமாக ஒரு வணிகத்தில் காசு வெளிப்பாய்ச்சல் நிகழ்வதில்லை?
1) சொத்துக்களின் கொள்வனவு
2) சம்பளங்களும் கூலிகளும்
3) கடன் தவணைக் கட்டணங்கள்
4) முதலீடுகள் மீதான வட்டி
5) பங்கிலாபங்கள்

10. பின்வருவனவற்றுள் உள்ளக நிதி மூலமாக அமைவது?
1) தொகுதிக்கடன் வழங்கல்
2) முன்னுரிமைப் பங்கு வழங்கல்
3) நீண்டகாலக் கடன்
4) சாதரண பங்கு வழங்கல்
5) மேற்குறிப்பிட்ட எவையும் அல்ல

11. நிறுவனமொன்றிலே தொடர்ச்சியாகக் காசு மிகையொன்றைப் பேணிவருவது சாதகமற்றதாவதேன்?
i. ..........................................................................
ii. ..........................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. நிதி முகாமையின் இரண்டு பிரதான தொழில் பாடுகள் எவை?
i. ..........................................................................
ii. ..........................................................................

02. நிறுவனமொன்றிற்கு ஏன் மூலதனம் தேவைப்படுகின்றது. இரண்டு பிரதான காரணங்களைத் தருக?
i. ..........................................................................
ii. ..........................................................................

03. உடமை அடிப்படையில் நிறுவனமொன்றின் மூலதனமானது எங்ஙனம் இரண்டு வகுதிகளாக பிரிக்கலாம்.?
i. ..........................................................................
ii. ..........................................................................

04. a) எவ்வகையான சொத்துக்கள் நிறுவனமொன்றின் நிலையான மூலதனத்தை வழமையாக எடுத்துக் காட்டும்?
..........................................................................

b) சுற்று முதல் (சுழல் மூலதனம்) என்பதன் கருத்தென்ன?
..........................................................................
..........................................................................
..........................................................................

05. a) மிகையாக மூலதனமிடப்பட்ட வியாபாரம் ஒ்ன்றின் முக்கிய இயல்பு யாது?
..........................................................................

b) ஒரு நிறுவனத்தின் நிதி நிலமையை மிகை வியாபாரம் எவ்வாறு பாதிக்கின்றது?
..........................................................................

06. உயர் மூலதனக்கட்டமைப்பு எனப்படுவது
1. கடன் மூலதனமானது உரிமை மூலதனத்தைவிட உயர்வானது
2. உரிமை மூலதனமானது கடன் மூலதனத்தைவிட உயர்வானது.
3. நிறுத்திவைக்கப்படும் உழைப்புக்கள் பங்கு மூலதனத்தைவிட உயர்வானது.
4. நீண்ட தவணை மூலதனம் குறும் தவணை மூலதனத்தைவிட உயர்வானது.
5. நிலையான மூலதனம் தொழிற்படு மூலதனத்தைவிட உயர்வானது.

07. குறைவிணைப்பு மூலதன அமைப்பு என்பதன் கருத்தென்ன?
..........................................................................
..........................................................................

08. பின்வருவனவற்றுள் எது ஒரு நேரில் நிதி மூலமாகும்?
1) வங்கி மேலதிகப்பற்று
2) சாதாரண பங்குகளை வழங்குதல்
3) முன்னுரிமைப் பங்குகளை வழங்குதல்
4) தீபெஞ்சர்களை வழங்குதல்
5) நிறுத்திவைத்த உழைப்புக்கள்

09. பின்வருவனவற்றுள் எது காரணமாக ஒரு வணிகத்தில் காசு வெளிப்பாய்ச்சல் நிகழ்வதில்லை?
1) சொத்துக்களின் கொள்வனவு
2) சம்பளங்களும் கூலிகளும்
3) கடன் தவணைக் கட்டணங்கள்
4) முதலீடுகள் மீதான வட்டி
5) பங்கிலாபங்கள்

10. பின்வருவனவற்றுள் உள்ளக நிதி மூலமாக அமைவது?
1) தொகுதிக்கடன் வழங்கல்
2) முன்னுரிமைப் பங்கு வழங்கல்
3) நீண்டகாலக் கடன்
4) சாதரண பங்கு வழங்கல்
5) மேற்குறிப்பிட்ட எவையும் அல்ல

11. நிறுவனமொன்றிலே தொடர்ச்சியாகக் காசு மிகையொன்றைப் பேணிவருவது சாதகமற்றதாவதேன்?
i. ..........................................................................
ii. ..........................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இம்முறை தமிழ் மொழி மூல மாணவர்களின் அகில இலங்கைரீதியில் முதலாமிடம் பெற்ற மாணவனுக்கு அறிவுத்தேடலின் பாராட்டுக்கள்....

**Index No : 2379279**



**THEVATHAS JANAKAN**

**G.C.E A/L EXAMINATION 2011**

| Subjcts | Grade |
| --- | --- |
| ECONOMICS | A |
| BUSINESS STUDIES | A |
| ACCOUNTING | A |
| GENERAL ENGLISH | S |
| COMMON GENERAL TEST | 070 |

**Summary**

| | |
| --- | --- |
| District Rank | 1 |
| Island Rank | 12 |
| Z-Score | 2.8451 |

CIMA தொழில்சார் கற்கை நெறியானது, அன்றாடம் உலக வியாபாரம் சூழலில் ஏற்படும் மாற்றங்களையும், புதிய போக்கினையும் தேவைகளையும் காலத்திற்கு காலம் தன்னுள் உள்வாங்கி, காலத்தின் தேவைக்கு பொருத்தமானதொரு கற்கை நெறியாக தன்னை நிலைநிறுத்தியுள்ளது. உலக பொருளாதாரத்திற்கு பொருத்தமான, புதிய சவால்களை முகம்கொடுக்கக்கூடிய தொழில் தகைமையை உடைய முகாமைத்துவ கணக்காளர்களை உருவாக்கும் செயற்பாட்டில் CIMA நிறுவனமானது தன்னை அர்ப்பணித்து உள்ளத்துடன் தொழில்சார் முகாமையாளர்களின் தொழிற்றிறனை விருத்தி செய்ய சிறந்த வழிகாட்டியாக உள்ளது.

CIMA-CBA (Certificate in Business Accounting) எனும் சான்றிதழ் பிரிவில் அமர்வதற்கு உங்களிற்கு மாற்று வழிகள் உருவாக்கப்பட்டுள்ளன. பரீட்சை தாளிற்கு பதிலாக நீங்கள் முகம்கொடுக்கப்போவது கணிணியை அடிப்படையாக கொண்ட கணிப்பீட்டு முறையிலான Computer based Assessment Methodology ஆகும். கணிணியை பயன்படுத்துவதற்கான வசதிகளை உங்களிற்கு CIMA நிறுவனம் வழங்கும்.

### CIMA opens career doors

- ✓ Management Accountant
- ✓ Financial Manager
- ✓ Financial Analyst
- ✓ Financial Controller
- ✓ Finance Director
- ✓ CFO
- ✓ Project Specialist
- ✓ Investment Accountant
- ✓ IT Director
- ✓ Management Consultant
- ✓ CEO
- ✓ Chairman

### CIMA ல் பதிவு பெற்ற கணக்காளர்கள்.

உலக அங்கீகாரமொன்றினை நீங்கள் பெற்றுக்கொள்வதனூடாக உலகின் எந்தவொரு நாட்டிலும் அரச, அரச சார்பற்ற, தனியார் நிறுவனமொன்றில் தொழில் ஒன்றினை உறுதி செய்து கொள்ளலாம். இன்று உலகின் சகல பகுதிகளிலும், இலங்கையிலும் CIMA வினை ஒரு பாடநெறியாக பின்பற்றும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்கின்றது. ஏனெனில் உலகில் சகல இடங்களிலும் CIMAற்கான அங்கீகாரமும், கேள்வியும் உயர்வானதாக காணப்படுவதேயாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு மாவட்டத்தில் சாதித்த 2011ம் ஆண்டு மாணவர்கள் சிலர்...


N.Fathima Najitha
R.H.L.C


M.A.Dhivaharan
Wesley College


S.Amirtha
H.L.C


A.Chubana
Methodist College


S.Senora
Good Shepherd G.M.V


S.Suganthini
R.H.L.C

இம் மாணவர்கள் தங்களுடைய கற்றலுக்குரிய வெற்றியில் அறிவுத்தேடல் சஞ்சிகைக்கும் நன்றி தெரிவிக்கின்றனர்.

இவர்கள் வணிகக்கல்வியின் சிரேஷ்ட்ட ஆசிரியரான S.K. சோதிலிங்கம் அவர்களின் பூரண வழிகாட்டலுடன் இப் பெறுபேறுகளை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. 2011ல் இடம்பெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையில் பொதுவாக வணிகக்கல்வி பாடத்தில் குறைவான பெறுபேறுகள் காணப்பட்ட போதிலும், இவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற்றமைக்கு அறிவுத்தேடல் தமது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் தேடல்

S.K.சோதிலிங்கம்
B.B.A(Hon) Dip.in.Edu
சிரேஷ்ட்ட வணிகக்கல்வி ஆசிரியர்
றோயல் கல்லூரி கொழும்பு 07



## சந்தைப்படுத்தல் கலவை (Marketing Mix)

சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் நுகர்வோரது தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்து நிறுவனம் எதிர்பார்க்கும் இலக்கினையும், குறிக்கோளையும் அடைந்து கொள்வதற்காக கையாளப்படுகின்ற சந்தைப்படுத்தல் உபாயங்களின் சேர்மானம் சந்தைப்படுத்தல் கலவை என அழைக்கப்படும்.

இச் சந்தைப்படுத்தல் கலவை மாறிகளை வணிகரின் பார்வையில் கீழ்வருமாறு நான்காக அடையாளப்படுத்தலாம். அவை 4P,S என சுருக்கமாக கூறமுடியும். இது பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருக்கும்.

| பொருள் (பொருட்கலவை) Product | விலை (விலைக்கலவை) Price |
|---|---|
| • உற்பத்தி வகை<br>• தரம்<br>• அளவு<br>• நிறை, நிறம்<br>• பொதி<br>• குறிகள் | • பட்டியல் விலை<br>• கழிவுகள்<br>• கழிவு விலை<br>• கடன் நிபந்தனைகள் |
| **இடம் (இடர்கலவை) Place** | **மேம்படுத்தல் (மேம்படுத்தல்கலவை) Promotion** |
| • விநியோக வழிகள்<br>• போக்குவரத்து முறைகள்<br>• விற்பனைப் பிரதேசம்<br>• விநியோக கலவை | • விளம்பரப்படுத்தல்<br>• விற்பனை மேம்படுத்தல்<br>• நேரடி விற்பனை<br>• நேராள் விற்பனை<br>• பொது உறவுகள் |

இச் சந்தைப்படுத்தல் கலவை மாறிகளை பொருள் சார்பாக நோக்கும் போது 4P,S என அமைவதாகவும், சேவை தொடர்பாக நோக்கும் போது மேலும் மூன்று மாறிகள் உள்ளடக்கப்பட்டு 7P,S எனக் கருதப்படுகிறது. அவை பின்வருமாறு.

## மக்கள் / விற்பனைப்படை (People)

சந்தைப்படுத்தும் நிறுவனமானது திறமை, அனுபவம், ஆற்றல் மிக்க விற்பனைப் படையினையும், பிரதிநிதிகளையும் கொண்டிருக்க வேண்டும் என்பதாகும். இது உருவமற்ற சேவைகளை சந்தைப்படுத்துவதற்கு மிகவும் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்முறைப்படுத்தல் (Process)

சேவையினை நுகர்வோருக்கு வழங்குவதற்கான சரியான நெறிப்படுத்தல், ஒப்படைத்தல், பின்னரான சேவைகளை பொருத்தமான முறையில் ஒழுங்குபடுத்திக் கொள்ளுதலாகும்.

## பௌதீகச் சூழல் / சான்று / ஆதாரம் (Physical Evidence)

சேவையினை நுகர்வோருக்கு மிகச் சிறந்த ஒரு பெறுமானத்தினை அடையக்கூடிய வகையில் சேவை வழங்கும் இடத்தின் சூழலை சிறப்பாக உருவாக்கிக்கொள்ளுதலாகும். சந்தைப்படுத்தல் கலவை மாறிகள் தொடர்பாக நுகர்வோருடைய பார்வையில் நோக்கும் போது அதனை 4C,S அல்லது "SIVA MODL" எனக் குறிப்பிடமுடியும்.

| 4 P,S | 4 C,S |
|---|---|
| உற்பத்தி (Product) | நுகர்வோர் தேவைகள் விருப்பங்கள் / தீர்வு (Consumer Needs & Wants / Solution) |
| விலை (Price) | கிரயம் (Cost) / செலவு (Value) |
| இடம் (Place) | (Convenience) வசதி (Access) |
| மேம்படுத்தல் (Promotion) | (Communicating) தொடர்பாடல் (Information) |

பொருட் சந்தைப்படுத்தலில் நுகர்வோர் தமக்குக்கிடைக்கின்ற பொருள் தமது தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு தீர்வாகவும், நியாயமான பெறுமதி / விலையுடையதாகவும், வசதியான நுகர்வினை மேற்கொள்ளக்கூடியதாகவும், மேம்படுத்தலானது உண்மையான தொடர்பாடலை மேற்கொள்ளக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என நோக்குவதே 4C,S அல்லது "SIVA" மாதிரி எனக் கருதப்படுகிறது.

**_Reference_**

***"Marketing Management"***

*P. Kotler and K. L. Keller*

எமது இதழ்கள் தொடர்பிலும், எமது புதிய முயற்சிகள் தொடர்பிலும் உங்களது காத்திரமான விமர்சனங்களை எமக்கு அனுப்பலாம்.

**அனுப்ப வேண்டிய முகவரி,**

தபாலில் : இல 03, சென் கில்டாஸ் வீதி, கொழும்பு 03.
மின்னஞ்சலில் : arivu.editor@gmail.com
தொலைபேசியில் : இதழாசிரியர் - 0719494227

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



S.K.சோதிலிங்கம்
B.B.A(Hon) Dip.in.Edu
சிரேஷ்ட்ட வணிகக்கல்வி ஆசிரியர்
றோயல் கல்லூரி கொழும்பு 07

The MCQ Quiz Bank

01. A. தொழிற்பகுப்பு ஏற்படுவதற்கு பிரதான காரணமாக .................................... உம், அதன் பிரதான அனுகூலம் .................................... உம் காணப்படுகிறது.

B. வணிகமொன்று தொழிற்பாட்டினூடாக அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற மிகப் பிரதான குறிக்கோள் (i) ....................................................................... (ii) ....................................................................... என்பனவாகும்.

02. A. ................................................ என்பது ஆரம்ப, இரண்டாந்தர, சேவைத்துறை சார்ந்த வணிகங்களிற்கிடையிலான பரஸ்பர தொடர்பினைக் குறிக்கிறது.

B. உணவுப்பதார்த்தங்களைத் தரமாக தயாரித்து வழங்கும் நிறுவனங்களிற்கு ........................................... எனும் சான்று இலங்கைக் கட்டளைகள் நிறுவனம் மூலமாக வழங்கப்படுகிறது.

03. A. (a) .................................. , (b) .................................. , (c) .......................... (d) ........................................ என்பவை ஐக்கிய நாடுகள் சபையின் மூலம் வலியுறுத்தப்படுகின்ற மிகப் பிரதான உரிமைகளாக அமைகிறது.

B. சமூகப் பொறுப்புக்கள் தொடர்பான மூன்று பிரதான விடயங்களாக (a) .................................. , (b) .................................. , (c) .......................... என்பவை காணப்படுகிறது.

C. ஊழியர்களை மதித்தல், நியாயமான சம்பளம் வழங்குதல் என்பன ............................................. சார்ந்த ஒழுக்கக் கோவையாக கருதப்படும்.

04. A. ............................................... மூலமாக இலங்கையின் பணக் கொள்கை வகுத்து, அமுலாக்கம் செய்யப்படுகின்றது.

B. தண்டப்பணம், முத்திரைக் கட்டணம், அனுமதிப் பத்திரக் கட்டணம் என்பவை அரச வரவு செலவுத் திட்டத்தில் ................................................ எனும் பகுதியினுள் உள்ளடக்கப்படும்.

C. உணவுப் பொருட்களின் தரம், சுகாதாரம், தொடர்பாக பிரதான சட்டமாக ............................... என்பதும், சர்வதேச நியமத்தரமாக ...................................... என்பதும் காணப்படுகிறது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. A. வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியொன்று பங்குகளை ஆரம்பச் சந்தையில் வழங்கக் கூடிய இரு முறைகளாக (a) ............................................................ (b) ............................................................ என்பவை காணப்படுகிறது.

B. வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியொன்று மூலதனம் திரட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற குறுகிய கால, நீண்ட கால கடன் பத்திரங்கள் முறையே (a) ........................................................ (b) ........................................................ என்பனவாகும்.

06. A. ஒரு வணிக முயற்சியாளன் முயற்சியொன்றில் ஈடுபடுகின்ற போது கருத்தில் கொள்ள வேண்டிய பிரதான காரணிகள் (a) ........................................................ (b) ................................... (c) ................................ (d) ................................... (e) ................................... (f) ................................ என்பனவாகும்.

B. வணிக எண்ணங்களும், சந்தர்ப்பங்களும் தோன்றுவதற்குப் பிரதான காரணம் ........................................ என்பதாகும்.

C. ஒவ்வொரு முயற்சியாளனும் தனது கடமைகளையும், பணிகளையும் வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும் என்ற எண்ணம் ............................................ என அழைக்கப்படும்.

07. A. சொத்தொன்று பல நிறுவனங்களின் பகிர்ந்து காப்புறுதி செய்யும் நிலையிலான நட்டக் கொடுப்பனவு நிலை ........................................ எனவும், ஒரு காப்புறுதி செய்யப்பட்ட சொத்து காப்புறுதி நிறுவனத்தினால் வேறு நிறுவனத்தில் காப்புறுதி செய்யப்படுவது ............................................ எனவும் கருதப்படும்.

B. Ram Food Product Hd நிறுவனம் சிறுவர்களுக்கான சிற்றுண்டிப் பண்டங்களை உற்பத்தி செய்து வழங்குகிறது. இந்நிறுவனம் ............................................... எனும் காப்புறுதிப் பூட்கையினை உணவுச் சட்டப்படி கட்டாயம் மேற்கொண்டிருக்க வேண்டும்.

08. A. இலத்திரனியல் அஞ்சலின் பிரதான நன்மை ...................................... என்பதுடன், அது ஒரு .................................................. சாதனமாகவும் கருதப்படும்.

B. உள்ளகத் தேவைகருதி உருவாக்கப்பட்டுள்ள ஒரு நிறுவன வலையமைப்பினுள்ளே சில வெளி நிறுவனங்களின் பிரவேச வாய்ப்பு .................................................. என அழைப்பர்.

09. (a) ................................................ , (b) ................................................ என்பன செய்தியை தயாரித்தல், அதனைப் புரிந்து கொள்ளுதல் தொடர்பான நுட்பங்களாக கருதப்படும்.

10. ஒரு மொத்த வியாபாரி தனக்கு நிதி நலன் கருதி செயற்படும் போது ............................ எனவும், தனது முதல்வருக்கு நிதி நலன் கருதி செயற்படும் போது ................................ எனவும் அழைக்கப்படுவோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. இலங்கையில் சூழல் பாதுகாப்புத் தொடர்பாக கீழ்வரும் விடயங்களை எழுதுக.
   (a) ........................................ எனும் வரி வசூலிக்கப்படும்.
   (b) ........................................ எனும் நிறுவனம் பொறுப்புடையது.
   (c) ........................................ எனும் சர்வதேச தரச்சான்று வழங்கப்படும்.
   (d) ........................................ எனும் விரய முகாமை எண்ணக்கரு பிரயோகிக்கப்படும்.

12. A. ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள உலக சூழல் பாதுகாப்பு நிறுவனமும், ஒப்பந்தமும் எவை?
   ..........................................................................................................
   ..........................................................................................................

   B. வணிகமொன்றின் மூலம் அதன் தொழிற்பாட்டினூடாக அடைந்து கொள்ள எதிர்ப்பார்க்கின்ற நீண்டகால, குறுகிய கால அடைவு நிலைகள் எவை?
   ..........................................................................................................
   ..........................................................................................................

13. பொதுத்துறை சார்ந்த நிறுவனங்களை தனியாருக்கு உடமையாக்கக் கூடிய இரு பிரதான முறைகள் எவை?
   ..........................................................................................................
   ..........................................................................................................

14. கூட்டுறவு வணிகமொன்றின் அடிப்படையான பொதுப் பண்புகள் 04 தருக.
   ..........................................................................................................
   ..........................................................................................................

15. A. முயற்சியாண்மை தொடர்பான சமூகக் காரணிகளாக கருதப்படக் கூடியவை 04 தருக.
   ..........................................................................................................
   ..........................................................................................................

   B. கிராமிய இளைஞர், யுவதிகளின் சுயதொழிலை அபிவிருத்தி செய்யும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இரு நிதி வசதியளிக்கும் திட்டங்கள் எவை?
   ..........................................................................................................
   ..........................................................................................................

16. A. ஆயுட் காப்புறுதியின் ஒப்பந்தமொன்று ஏற்படுத்தப்படுகின்ற போது கடைப்பிடிக்க வேண்டிய பிரதான இரு தத்துவங்களைக் குறிப்பிடுக.
   ..........................................................................................................
   ..........................................................................................................

   B. தீ அபாயக் காப்புறுதியின் கீழ் தீ அபாயம் தவிர்ந்த வேறு எந்த வகையான இடர்களுக்கு காப்புறுதி செய்ய முடியும் எனக் குறிப்பிடுக.
   ..........................................................................................................
   ..........................................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. சர்வதேச வியாபாரம் தொடர்பாக கீழ்வரும் ஆவணங்கள், நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நிறுவனங்களை இனங்காண்க.

(a) தீர்வை அறவீடு ..................................................

(b) ஏற்றுமதி அனுமதிப்பங்கு ..................................................

(c) செலாவாணி அனுமதி ..................................................

(d) ஏற்றுமதிக் காப்புறுதி ..................................................

18. இலங்கையில் அண்மைக்காலத்தில் வியாபாரத்தில் மதிகவும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ள பிரதான ஒப்பந்தங்கள் இரண்டு தருக.

..................................................

..................................................

19. சர்வதேச ரீதியாக பிராந்திய ரீதியான முறையில் நாடுகளுக்கிடையிலான வர்த்தக ரீதியான தடைகளை அகற்றுவதற்கான கட்டமைப்புக்கள் 04 தருக.

..................................................

..................................................

..................................................

..................................................

20. சர்வதேச வர்த்தகத்தின் மீது பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய இயற்கையான தடைகள் (Natural Barriers) 02 தருக.

..................................................

..................................................

**அறிவுத் தேடல் இதழ் 20ற்கான சிரேஷ்ட்ட வணிகக்கல்வி ஆசிரியர் S.K. சோதிலிங்கம் அவர்களின் MCQ தொகுப்பின் விடைகள்**

| வினா இலக்கம் | விடை | வினா இலக்கம் | விடை | வினா இலக்கம் | விடை |
|---|---|---|---|---|---|
| 01 | 4 | 11 | 4 | 21 | 4 |
| 02 | 3 | 12 | 3 | 22 | 5 |
| 03 | 3 | 13 | 5 | 23 | 2 |
| 04 | 4 | 14 | 5 | 24 | 5 |
| 05 | 4 | 15 | 3 | 25 | 5 |
| 06 | 3 | 16 | 5 | | |
| 07 | 4 | 17 | 4 | | |
| 08 | 2 | 18 | 2 | | |
| 09 | 5 | 19 | 3 | | |
| 10 | 4 | 20 | 5 | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் நேர்க்காணல்



சிரேஷ்ட்ட விரிவுரையாளர்
பேராசிரியர் டெனி அத்தபத்து
பொருளியல்துறை,
றுகுணு பல்கலைக்கழகம்

தொகுப்பு:- பா. பானுசந்தர்

**வினா:-**

**பணக்கேள்வியை தீர்மானிக்கும் காரணிகளாக மாணவர்கள் எக்காரணிகளை குறிப்பிட வேண்டும்?**

கீழ்வரும் 3 காரணிகள் இனங்காணப்படல் வேண்டும்.

01. கொடுக்கல் வாங்கல் நோக்கம்.
02. பாதுகாப்பு நோக்கம்.
03. ஊகக நோக்கம்.

இத்தகைய கேள்விகளுக்காக பணத்தை வைத்திருப்பதற்கான நிலையினை பின்வரும் காரணிகள் தீர்மானிக்கின்றன.

- வருமான மட்டம்
- வட்டி வீதம்
- தொழில்நுட்ப மாற்றம் (தொழில்நுட்ப மாற்றமும் பணக்கேள்வியை தீர்மானிக்கிறது)

**வினா:-**

**2012 ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் நாணய மதிப்பிறக்கமொன்று செய்யப்பட்டுள்ளது. மிதக்கும் நாணய மாற்று வீதம் நிலவும் நாட்டில் ஏன் நாணய மதிப்பிறக்கம் செய்யப்பட்டது?**

இங்கு மிதக்கும் நாணய மாற்று வீதம் நாட்டில் காணப்படுகின்றது என அரசாங்கம் குறிப்பிட்ட பட்சத்தில் நாணய மதிப்பிறக்கம் மேற்கொள்ள முடியாது. நாணய மதிப்பிறக்கம் என்பது நிலையான நாணய மாற்று வீதம் அமுலில் இருக்கும் போதே செய்யப்பட முடியும். ஆகவே இவ்வாறான நிலையான நாணய மாற்று வீதத்தை உருவாக்கயே மத்திய வங்கி இத்தகைய நடைமுறையை பின்பற்றியுள்ளது. ஏற்கனவே மத்திய வங்கி இத்தகை மதிப்பிறக்கங்களை பாதகமான சூழ்நிலைகளிலேயே பயன்படுத்தி உள்ளது.

இலங்கயில் கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ள வர்த்தக கணக்கின் பாரிய பற்றாக்குறையின் காரணமாக, இதனை நிவர்த்திக்கும் நோக்கில் மத்திய வங்கி டொலர் ஒன்றினை 110/- என்ற நிலையில் நிலையாக பேண முடிவு செய்துள்ளது. இதன்போது வெளிநாட்டு கடன்பணம், ஒதுக்கு டொலர்களை கேட்டவர்களுக்கு வழங்குவதூடாக ரூபாவின் பெறுமதியை நிலையாக பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக பாரியளவில் டொலரினை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்பதாலும், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் இடைநிறுத்தப்படும் போன்ற நிலைகள் காணப்படுவதால் ஒதுக்கு பணத்தை மாற்றீடு செய்வது சாத்தியமற்ற விடயம் ஆகும். ஆகவே தான் நாணய மதிப்பிறக்கம் செய்யப்படல் வேண்டும் என்ற முடிவு ஏற்கப்பட்டுள்ளது.

**வினா:-**

**மாணவர்களை சமூகமயமான சந்தைப் பொருளாதாரம் தொடர்பில் ஏன் அறிந்திருத்தல் அவசியம்.**

இது ஒரு சிறப்பான எண்ணக்கருவாகும். சந்தை முறையானது கலப்பு, திட்டமிடல், சந்தைப் பொருளாதாரம் என்ற வகையில் வகைப்படுத்தப்படுகின்றது. கலப்பு பொருளாதார முறைமையின் கீழ் சமூகமான சந்தைப்பொருளாதார முறைமையை விளங்கி கொள்ளுதல் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினா:-**

**இலங்கையில் மூலதன கணக்கை திறந்து விடுதல் பொருளாதாரத்திற்கு நன்மை பயக்குமா?**

மூலதன கணக்கை திறந்துவிடுதல் என்பது சென்மதி நிலுவையில் மூலதனக் கணக்கில் கொடுக்கல் வாங்கல்களை எவ்வித தடையுமின்றி சுதந்திரமாக மேற்கொள்ளுதல் ஆகும். இதன் மூலம் இலங்கைக்கு முதலீடுகள் உள்வருவதற்கும், இலங்கையிலிருந்து முதலீடுகள் வெளியேறுவதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. பிள்ளை பொருளாதாரமொன்றே இந்நிலையை தாங்கி கொள்ளும். ஆயினும் இலங்கையின் வர்த்தக நிலுவை பாதகமானது என்பதன் இலங்கை தொடர்பில் இது பிரயோகமற்ற செயற்பாடே ஆகும். மூலதன கணக்கில் நேரடி மற்றும் நேரில் முதலீடுகள் காணப்படுகின்றன. நேரில் முதலீடுகள் சிறு பிரச்சினைகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள கூடியது ஆகும். அரசியல் மாற்றம், நாணய மாற்ற வீதத்தில் சிறு மாற்றம் ஏற்படினும், நேரில் முதலீடுகள் தாக்கத்துக்குள்ளாகும். வெளிநாட்டவர் நாட்டில் வைத்திருக்கின்ற உண்டியல்கள், முறிகள், பங்குகள் என்பவற்றை மீள் விற்பனை செய்து நாணய மாற்று தமது நாட்டிற்கு எடுத்து செல்வர். இத்தகைய பாரிய நாணய மாற்று வீத வெளியேற்றத்தை மத்திய வங்கியால் தாங்கி கொள்ள முடியாது. ஆகவே இலங்கை போன்ற நாடொன்றில் மூலதன கணக்கினை திறந்துவிட முடியாது. ஆசிய நிதி பிரச்சினை நிலவிய போது (1998) தாய்லாந்து, மலேஷியா, இந்தோனேஷியா போன்ற நாடுகள் மூலதன கணக்கினை திறந்து வைத்திருந்தமையால் பாரிய பிரச்சினையை எதிர்நோக்கின. ஆகவே இலங்கை இத்தகை நடவடிக்கை மேற்கொள்ளல் பொருத்தமற்றது. ஆகவே சில வரையறைகள் அவசியமே.

**வினா:-**

**பண நிரம்பலோடு தொடர்புடைய காரணிகள் $M_1$, $M_2$, $M_{2b}$, $M_4$ என்பவற்றில் மாத்திரமா உள்ளடக்கப்படும்? பண நிரம்பலுக்கு, பண நிரம்பலோடு தொடர்புடைய அனைத்து காரணிகள் உள்ளடக்கப்படுமா?**

இவ்விரு வினாக்களுக்குமான விடையை மிகச் சுருக்கமாக கூறிவிட முடியும்.
என்பன பண நிரம்பல் கட்டமைப்பு ஆகும்.

$M_1, M_2, M_{2b}, M_4$ பண நிரம்பலை தீர்மானிக்கும் காரணிகள்

- தனியார் துறைக்கு வழங்கப்படும் கடன்கள்.
- அரச துறைக்கு வழங்கப்படும் கடன்கள்.
- வெளிநாட்டு ஒதுக்குகள்.

**வினா:-**

**இழிவு பண்டம், தீய பண்டம் இரண்டும் வெவ்வேறானதா?**

இரண்டும் வெவ்வேறான பொருட்களாகும். இழிவு பண்டத்தில் குறிப்பிட்ட பயன்பாடு காணப்படும். அதே வேளை தீய பண்டமானது பயன்பாட்டிற்கு உகந்ததல்ல. தீய பண்டங்களினால் எவருக்கும் நல்ல பலன்கள் ஏற்படுவதில்லை.

---

**சப்ரகமுவ மாகாணத்தின் பொருளியல் ஆசிரியர்களுக்காக இடம்பெற்ற கருத்தரங்கில் பேராசிரியர் டேனி அத்தப்பத்து அவர்கள் தந்துள்ள சில விஷேட குறிப்புகள்.**

## உற்பத்தி வினைத்திறன்

- உற்பத்தி வினைத்திறன் என்பது மொத்த உற்பத்தியில் உச்சளவு பங்களிப்பு செய்யக்கூடிய வகையில் வளங்களை பயன்படுத்தல் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இதனை பெற்றுக்கொள்ள வழங்கப்பட்ட சந்தர்ப்பமொன்றில் உச்ச வெளியீட்டை பெற்றுக் கொள்ளும் வகையில் வளங்களை பயன்படுத்துதல் வேண்டும்.

- அல்லது குறைந்த வளங்களை பயன்படுத்தி குறித்த பொருளை உற்பத்தி செய்தல் ஆகும்.

- உற்பத்தி வினைத்திறன் தொடர்பான இரு முக்கிய தேவைப்பாடுகள் காணப்படுகின்றன.

01. நிறைத்தொழில் மட்டம் (Full Employment)
02. பூரண உற்பத்தி (Full Production)

தொகுப்பு
இதழாசிரியர்.

**உயர்தரக் கற்கையின் பின் பல்கலைக்கழகப் பட்டம் ஒன்றினையும் தொழில்சார் தகைமை யொன்றினையும் பெற்றுக்கொள்வது எவ்வாறு?**

க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தயாராகிக்கொண்டிருக்கும் நீங்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகுவீர்கள் எனில் பல்கலைக்கழகத்தில் மூன்று அல்லது நான்கு வருடக் கற்கை நெறியினை பூர்த்திசெய்வதோடு இது முகாமைத்துவம் தொடர்பான ஏதேனும் கற்கை நெறியாக அமையலாம்.

கணக்கீடு, வணிக முகாமைத்துவம், சுற்றுலா முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், முயற்சியாண்மை முகாமைத்துவம், வணிகத் தகவல் தொழில்நுட்பம், நிதி முகாமைத்துவம் போன்ற பல்வேறு துறைகளில் ஏதேனும் ஒரு பட்டத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கு ஈடான தொழில்சார் கற்கைநெறியினை தெரிவுசெய்யும் போது ACCA பற்றிச் சிந்தித்துள்ளீர்களா? ACCA தகமையானது ஐக்கிய இராஜ்ஜியத்தில் பட்டயம் பெற்ற கணக்கீட்டு நிறுவனத்தினூடாக வழங்கப்படுகின்றது. இதுவரை உலகளாவிய ரீதியில் 404 000 மாணவர்கள் ACCA யினைத் தமது தொழில்சார் கற்கையாக தெரிவு செய்துள்ளனர்.

இக்கற்கை நெறியின் விசேடம் யாதெனில், இக்கற்கை நெறியின் முதற்பகுதியைப் பூர்த்தி செய்வதுடன், இரண்டாவது பகுதியைப் பயிலும் போதே ஐக்கிய இராஜ்ஜியத்தின் Oxford brookes பல்கலைக்கழகத்தில் BSc Applied Accounting Hons பட்டத்தினையும் பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கையில் பல்கலைக்கழக அனுமதியைப்பெற்ற, பெற்றிராத மாணவர்கள் தம்மை ஒரு சிறந்த கணக்காய்வாளராக ஆக்கிக்கொள்ள ACCA சிறந்த பாடநெறி ஆகும்.

ACCA இலங்கை -
இல 424,
R.A.D மெல் மாவத்தை,
கொழும்பு 03.
T.P : 011 2301920, 011 2301923

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ECON BITZ

V. பரமேஸ்வரன்
B.B.A (Hons), MA (Econ)
சிரேஷ்ட்ட பொருளியல் ஆசிரியர்
சென். ஜோசப் கல்லூரி கொழும்பு.

01. **சந்தை சமநிலை என்பதனை வரையறுத்து அதன் இயல்புகளைக் கூறுக.**

- போட்டிச் சந்தையொன்றில் கேள்வி, நிரம்பல் ஆகிய இரு முரண்பட்ட சந்தை சக்திகள் சந்திப்பதன் மூலம் உண்டாகும் ஒரு தலம்பலற்ற நிலை சந்தை சமநிலை எனப்படும்.
- குறிப்பிட்ட பொருள் தொடர்பாக உச்சபயனை நோக்காகக் கொண்ட நுகர்வோரின் தீர்மானமும் அல்லது நுகர்வோரின் கொள்வனவுத்திட்டமும் உச்ச இலாபத்தை நோக்காகக் கொண்ட உற்பத்தியாளரின் தீர்மானமும் அல்லது வழங்குனரின் விற்பனைத் திட்டமும் பொருத்தமுற்றிருக்கும் நிலையினை இது குறிக்கும்.

**இயல்புகள்**

1. நுகர்வோரின் கொள்வனவுத் திட்டமும் உற்பத்தியாளரின் விற்பனைத் திட்டமும் பொருத்தமுற்றிருக்கும்.
2. கேள்வித் தொகையும் நிரம்பல் தொகையும் சமனாகக் காணப்படும்.
3. கேள்வி விலையும் நிரம்பல் விலையும் சமனாகக் காணப்படும்.
4. மிகைக் கேள்வித் தொகை, மிகை நிரம்பல் தொகை என்பன பூச்சியமாகக் காணப்படும்.
5. மிகைக் கேள்வி விலை, மிகை நிரம்பல் விலை என்பன பூச்சியமாகக் காணப்படும்.

02. **சந்தைத் தீர்வுவிலை** (Marker Clearing Price) என்றால் என்ன?

.......................................................................................................................
.......................................................................................................................
.......................................................................................................................
.......................................................................................................................

03. மிகைக் கேள்வித் தொகை, மிகை நிரம்பல் தொகை ஆகியவற்றை வேறுபடுத்துக.

சந்தையொன்றில் குறிப்பிட்ட பொருளுக்கு குறித்த விலையில் நிலவும் சந்தைக்கேள்வி அளவுக்கும் அவ்விலையில் நிலவும் சந்தை நிரம்பல் அளவுக்கும் இடையிலான வித்தியாசம் மிகைக்கேள்வி அல்லது மிகைக் கேள்வித் தொகை எனப்படும்.

கேள்வித் தொகையிலிருந்து நிரம்பல் தொகை கழிப்பதன் மூலம் மிகைக் கேள்வியைக் கணிப்பிடலாம்.

**மிகைக் கேள்வி = கேள்வித் தொகை - நிரம்பல் தொகை**

சமநிலை விலையைவிட குறைந்த விலைகளில் மிகைக்கேள்வி நிலவும். சந்தையில் மிகைக் கேள்வி ஏற்படும் போது சமநிலை விலையானது மேல்நோக்கி தள்ளப்படும் அல்லது அதிகரிக்கும்.

04. **பொருளாதாரமிகை** (Economic Surplus) என்றால் என்ன?

- சந்தை சமநிலையின்போது சமநிலை விலையில் பொருளொன்றை கொள்வனவு செய்தவனாலும் நுகர்வோரும் உற்பத்தியாளரும் பெறும் மேலதிக நன்மைகள் பொருளாதார மிகை எனப்படும்.
- இப்பொருளாதார மிகையானது சுதந்திர சந்தைப்பொருளாதாரத்தின் செயற்றிறனை காட்டும் ஒரு அளவீடாகக் காணப்படும்.
- நுகர்வோரும் உற்பத்தியாளரும் பொருளை பரிமாற்றும்பொழுது சமூகத்துக் கிடைக்கும் நலன் எனவும் இதனைக் குறிப்பிடலாம்.
- இதில் பின்வரும் இரு விடயங்கள் உள்ளடங்கும்.

1. நுகர்வோன் மிகை 2. உற்பத்தியாளன் மிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நுகர்வோன் மிகை**

- சந்தையொன்றில் குறிப்பிட்ட பொருளை நுகர்வோன் கொள்வனவு செய்யத் தயாராக இருந்த விலைக்கும் அப்பொருளை உண்மையில் நுகர்வோன் கொள்வனவு செய்த விலைக்கும் இடையிலான வித்தியாசம் நுகர்வோன் மிகை எனப்படும்.
- சந்தை சமநிலை விலையில் பொருளை கொள்வனவு செய்வதனால் நுகர்வோன் அடையும் மேலதிக நன்மையாக இது காணப்படும்.

$$\text{நுகர்வோன் மிகை} = \frac{(\text{ஆகக்கூடிய கேள்வி விலை - சமநிலை}) \times \text{சமநிலைத்தொகை}}{2}$$

**உற்பத்தியாளன் மிகை**

- சந்தையொன்றில் குறிப்பிட்ட பொருளை உற்பத்தியாளன் விற்பனை செய்த விலைக்கும் அப்பொருளை விற்பனை செய்த்த தயாராகவிருந்த விலைக்கும் இடையிலான வித்தியாசம் உற்பத்தியாளன் மிகை எனப்படும்.

- ஒரு பொருளின் சந்தை விலைக்கும் ஆகக் குறைந்த நிரம்பல் விலையாகிய எல்லைச் செலவுக்கம் இடையிலான வித்தியாசத்தை இது குறிக்கும்.

- சந்தை சமநிலை விலையில் பொருளொன்றை விற்பனை செய்வதனால் உற்பத்தியாளன் பெறும் மேலதிக நன்மையாக இது காணப்படும்

$$\text{உற்பத்தியாளன் மிகை} = \frac{(\text{சமநிலை விலை - ஆகக்குறைந்த நிரம்பல் நிலை}) \times \text{சமநிலைத்தொகை}}{2}$$

05. **கட்டுப்பாட்டு விலைக்கொள்கை** என்பதனால் கருதப்படுவது யாது?

- சந்தைப் பொருளாதாரத்தில் கேள்வி நிரம்பல் ஆகியவற்றினால் தீர்மானிக்கப்படும் சமநிலை விலையானது சமூகத்திற்கு தீங்கு விளைவிப்பதாக அரசாங்கம் கருதும்போது அரசு சந்தையில் தலையிட்டு அமுல்படுத்தும் விலைத்திட்டம் கட்டுப்பாட்டு விலைக் கொள்கை எனப்படும்.

- சந்தையில் கேள்வி நிரம்பல் ஆகியவற்றினால் நிர்ணயிக்கப்படும் சமநிலை விலையானது சில வேளைகளில் நுகர்வோரைப் பாதிப்பதாக அல்லது உற்பத்தியாளரைப் பாதிப்பதாக அமையும் போது நுகர்வோரின் அல்லது உற்பத்தியாளரின் நலன் பேணும் நோக்குடன் அரசினால் அமுல்படுத்தப்படும் விலைத் திட்டங்களாக கட்டுப்பாட்டு விலைகள் காணப்படும்.

கட்டுப்பாட்டு விலைகள் பின்வரும் இரண்டு வகையாகக் காணப்படும்.

1. உச்சவிலை / உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலை
2. இழிவுவிலை / குறைந்தபட்ச கட்டுப்பாட்டு விலை

06. **உச்சவிலை** (Price Ceiling) என்றால் என்ன?

- சந்தையொன்றில் கேள்வி நிரம்பல் ஆகியவற்றினால் நிர்ணயிக்கப்படும் சமநிலை விலையானது சிலவேளைகளில் நுகர்வோரின் நலனைப் பாதிப்பதாக அமையும் போது நுகர்வோரின் நலன் பேணும் நோக்குடன் அரசினால் அமுல்படுத்தப்படும் ஒரு கட்டுப்பாட்டு விலைத்திட்டம் உச்சவிலையாகும்.

- குறித்த பொருளை விற்பனை செய்யக்கூடிய ஆகக்கூடிய விற்பனை விலையினை அரசு விதிப்பதனை இது குறிக்கும்.

07. உச்சவிலை விதிக்கபடுவதனால் சந்தையில் ஏற்படும் பொருளாதார விளைவுகள் யாவை?

1. உச்சவிலையில் கேள்வித் தொகை கூடுதலாகவும் நிரம்பல்தொகை குறைவாகவும் காணப்பட்டு சந்தையில் பொருட்தட்டுப்பாடு ஏற்படல் (மிகைக்கேள்வி ஏற்படல்)
2. முறைசார்ந்த, முறைசாராத பங்கீட்டு முறைகள் உருவாகுதல்
3. கறுப்புச்சந்தைவிலை தோன்றுதல்
4. பொருளாதார செயற்றிறனின்மை ஏற்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. உச்சவிலைக் கொள்கையை செயற்றிறனாக்க மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் யாவை?
1. பங்கீட்டு முறையில் பொருட்களை விநியோகித்தல்
2. மிகைக் கேள்வியை இறக்குமதி செய்து விநியோகித்தல்
3. பொருட்தட்டுப்பாட்டை நீக்க உற்பத்தியை ஊக்குவித்தல்
4. கட்டுப்பாட்டு விலையில் பொருட்களை விநியோகிக்கக்கூடியவாறு உற்பத்தியாளருக்கு அரசு மானியம் வழங்குதல்

09. உச்சவிலைக் கொள்கையை செயற்றிறனாக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் விலையில்லாத பங்கீட்டு முறைகள் யாவை?
1. வரிசைமுறை
2. குடும்ப அட்டைகளை வழங்குதல்
3. இலஞ்சம் பெற்று வழங்குதல்
4. வேறு பொருட்களுடன் இணைத்து வழங்குதல்

10. **தளவிலை** (Floor Price) அல்லது **இழிவு விலை** என்பதனால் கருதப்படுவது யாது?
- சந்தையில் உற்பத்தியாளருக்கும் காரணி உரிமையாளருக்கும் உயர் விலையொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காக சமநிலைவிலைக்கு மேலான விலையொன்றை நிர்ணயித்தல் இழிவுவிலை எனப்படும்.

- சந்தையில் கேள்வி நிரம்பல் ஆகியவற்றினால் நிர்ணயிக்கப்படும் சமநிலை விலையானது சிலவேளைகளில் உற்பத்தியாளரை அல்லது காரணி உரிமையாளரைப் பாதிப்பதாக அமையும் போது உற்பத்தியாளரின் அல்லது காரணி உரிமையாளரின் நலன் பேணும் நோக்குடன் அரசினால் அமுல்படுத்தப்படும் விலைத்திட்டம் இதுவாகும்.

11. இழிவு விலை விதிக்கப்படுவதனால் சந்தையில் ஏற்படும் பொருளாதார விளைவுகள் யாவை?
- இழிவு விலையில் சந்தையில் கேள்வித் தொகை குறைவாகவும் நிரம்பல் தொகை கூடுதலாகவும் காணப்பட்டு மிகை நிரம்பல் தோன்றும். எனவே மேலதிக உற்பத்தி சந்தையில் குவிவதனால் வளங்கள் வீண்விரயம் செய்யப்படுதல்.

- பொருளுக்குப் பதிலாக சேவையொன்று மிகை நிரம்பலாகக் காணப்படுமாயின் அதனை நீக்குவது சிரமமாக அமையும்.

- ஊழியச் சந்தையில் குறைந்தபட்ச கூலி அல்லது இழிவுக் கூலி நிர்ணயிக்கப்படுவதால் ஊழிய வேலையின்மை ஏற்படும். இதனால் வேலையற்ற ஊழியத்தை வேலை நீக்கம் செய்வது சிரமமாதல்.

- சட்டத்திலிருந்து தப்புதவற்காக குறைந்த பட்ச விலையை பெயரளவு விலையாக வைத்துக்கொண்டு கழிவுகளை வழங்குதல்.

- மிகை முதலீட்டு நிலையொன்று உருவாகலாம். அதாவது விலை அதிகமாக உள்ளதால் அப்பொருளின் உற்பத்தியை நோக்கி வள ஒதுக்கீடுகள் இடம்பெறும்.

12. இழிவு விலைக்கொள்கையை செயற்றிறனாக்க மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் யாவை?
- மிகை நிரம்பலை வேறு சந்தைகளுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல். அல்லது மிகை நிரம்பலை களஞ்சியப்படுத்துதல்.

- எல்லா உற்பத்தியாளரும் சேர்ந்து நிரம்பலை குறைப்பதற்கான தீர்மானத்தை மேற்கொள்ளல்.

- மிகை நிரம்பலை இணை உற்பத்திகளுக்குப் (By Products) பயன்படுத்துதல்.

- மிகை நிரம்பலை விற்பனை செய்தவற்கான மேம்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் அல்லது கேள்வியை அதிகரித்தல். (உதாரணம் : கூட்டு விளம்பரங்களை மேற்கொள்ளல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுத்தேடல்

ACCA

# அறிவுத்தேடல் சஞ்சிகை ACCAஉடன் இணைந்து வழங்கும் கணக்கீட்டு பல்தேர்வு வினாத்தொகுப்பு

# The MCQ
## Quiz Bank

அறிவுத்தேடல் சஞ்சிகைக்கென ACCA அனுசரணையில் கணக்கீட்டு கல்வியில் அனுபவமிக்க ஆசிரியர்களான D. Sam, S. K. பிரபாகரன் மற்றும் A. நீவின் ஆகியோரின் வினாத்தொகுப்பு இம்முறை இலவச இணைப்பில் இடம்பெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிக்கான உங்களது பாதையில் உங்களது எதிர்காலத்தைச் சிறப்பிக்கும் கற்கைதனைத் தெரிவுசெய்தல் வேண்டுமல்லவா?

வெற்றிக்கான உங்களது பாதையில் உங்களது எதிர்காலத்தைச் சிறப்பிக்கும் கற்கைதனைத் தெரிவுசெய்தல் வேண்டுமல்லவா? பாடசாலைக் கல்வியினைப் பதின்மூன்று வருடங்களாக கற்ற நீங்கள் கற்கை நிறைவடைந்த பின்னர் ஒரு கட்டமைப்பிலிருந்து சடுதியாக ஒரு சுயாதீனமான பரப்பினுள் நுளைகின்றீர்கள்.

ஏதிர்காலம் பற்றிய எண்ணற்ற கனவுகள் உங்களுள் தோன்றுகின்றது. உண்மையில் உங்களது கனவுகள் இன்றைய உலகிற்கு பொருத்தமானதாக இருக்கவேண்டும். எஞ்சியிருக்கும் உங்களது எதிர்கால வாழ்க்கையினை சிறந்த முறையில் திட்டமிட்டுக் கொள்ளவேண்டும். ஒரு கட்டிடத்திற்கு அத்திவாரமானது அவசியமானதோ அதே போன்று உங்களது எஞ்சியிருக்கும் வாழ்க்கை சிறப்பாக்கி கொள்ள நீங்கள் இரண்டு மூன்று வருடங்களில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் முக்கியமானதாகும். இத்தகைய தீர்மானங்களை மேற்கொள்ளும் போது இன்றைய உலகில் காணப்படும் மிகப்பெரிய சவால் யாதெனில் உங்களுக்கு தொழில்சார் கற்கைநெறிகள் சந்தையில் கொட்டிக்கிடக்கின்றன. ஆனால் இத்தகைய தொழில்சார் கற்கைகளின் தெரிவு உங்களது எதிர்காலத்தில் தாக்கம் செலுத்தும் என்பதனை கருத்தில் கொள்ள வேண்டும். ஆகவே உங்களது வாழ்க்கை தரத்தை உயர்த்துகின்ற உயர்ந்த சம்பளத்தை பெற்றுத் தருகின்ற சமூக அந்தஸ்துடைய சூழல் பாங்கிற்கு ஈடு கொடுக்கக்கூடிய கற்கை நெறியை தெரிவு செய்ய வேண்டும்.

கணக்கீட்டுத் துறையானது இன்றைய உலகில் பல்வேறு வாய்ப்புக்களை ஏற்படுத்துகின்றது. கணக்காளர்கள் நிறுவனத்தின் செயற்பாட்டில் பிரதான இடத்தை வகிக்கின்றனர். வெற்றிகரமான முயற்சியாளர்களை உற்று நோக்கினால் அவர்கள் சிறந்த கணக்காளர்களாக இருப்பதனை அவதானிக்க முடியும். இன்று பல்வேறு நிறுவனங்களிலும் கணக்கீட்டுத் துறையிலும் மனித வளங்களை மிகப்பொருத்தமான வகையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான உந்துதல் காணப்படுகின்றது. ஆகவே இவ்வனைத்து தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்யக்கூடிய கற்கை நெறியை தெரிவு செய்ய வேண்டும். இன்றைய உலகில் பல்வேறு நிறுவனங்களில் ஆட்சேர்ப்பு செய்யும்போது அவ்வூழியத்தின் கணக்கீட்டு அறிவு பரீட்சிக்கப்படுகினறது. ஆகவே இத்தகைய சவால்களை நிவர்த்திக்கும் கற்கை நெறியொன்றை பின்பற்ற வேண்டுமல்லவா?

ACCA கற்கை நெறியானது கணக்கீட்டுத்துறையில் இருக்கும் திறமையானவர்களுக்கு சரியான தளத்தினை ஏற்படுத்துகிறது. உலகளாவிய ரீதியில் கணக்கீட்டுத் துறையென்றால் ACCA என்ற நிலை உருவாகியுள்ளது. ஒருவர் எந்த பின்னணியில் இருந்தாலும் அக்கற்கை நெறியானது அவர்களை சிறந்த கணக்காளர்களாக மிளிரச் செய்கிறது. இத்தகைய கற்கை நெறிதனை தெரிவு செய்யும்போது நீங்கள் பெறுகின் நன்மைகளை எண்ணிப்பாருங்கள். ACCA கற்கை நெறி உங்களை கணக்கியல் துறையில் சிறந்த மனிதர்களாக மாற்றும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

D. Sam
பிரபல கணக்கீட்டு ஆசிரியர்
யாழ்ப்பாணம்.

## 4.2 இணக்கக் கூற்றுக்கள்
## Reconciliation Statements

**விடைகள் :**

MC(4.2.1) 2
MC(4.2.2) 4
MC(4.2.3) 4
MC(4.2.4) 3, 4
MC(4.2.5) 3
MC(4.2.6) 3
MC(4.2.7) 2
MC(4.2.8) 4
MC(4.2.9) 2
MC(4.2.10) 2
MC(4.2.11) 2
MC(4.2.12) 1
MC(4.2.13) 5
MC(4.2.14) 4, 5
MC(4.2.15) 1
MC(4.2.16) 2
MC(4.2.17) விடையில்லை (ரூபா 37 500)
MC(4.2.18) 2
MC(4.2.19) 2
MC(4.2.20) 1

OT(4.2.1) இணக்கக் கூற்றுக்கள்
(1) வங்கி இணக்கக் கூற்று
(2) கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் இணக்கக் கூற்று
(3) இருப்பு இணக்கக் கூற்று

OT(4.2.2)
(1) வைப்புக்களை ஏற்றல்
(2) காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளக்கூடிய வசதி
(3) மேலதிகப்பற்று வசதி
(4) பிரதிகர்த்தா சேவை வழங்கல்
(5) நிலையான கட்டளைக் கொடுப்பனவு செய்தல்

OT(4.2.3)
(1) வங்கியின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த
(2) காசேட்டின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த
(3) வங்கி தொடர்பாக முகாமைத் தீர்மானத்திற்கு உதவ

OT(4.2.4)
(1) வழுக்கள்
(2) விடுபடுதல்கள்
(3) காலவேறுபாடுகள்

OT(4.2.5) நிலையான கட்டளைக் கொடுப்பனவிற்கும் நேர் வரவிற்கும் இடையிலான வேறுபாடுகள்?
(1) நிலையான கட்டளைக் கொடுப்பனவு வங்கியுடன் மட்டும் ஒழுங்கு செய்யப்படும். நேர் வரவு வங்கியுடனும் கொடுப்பனவு செய்யவேண்டிய நிறுவனத்துடனும் ஒழுங்கு செய்யப்படும்.
(2) நிலையான கட்டளைக் கொடுப்பனவு நிலையான தொகை. நேர் வரவு மாறும் தொகை.
(3) நிலையான கட்டளைக் கொடுப்பனவு பழமையான விடயம். நேர் வரவு நவீன விடயம்.

OT(4.2.6) வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கும் முறைகள்?
(1) ..........................................................
(2) ..........................................................
(3) ..........................................................
(4) ..........................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

OT(4.2.7) வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கும் படிமுறைகள்?

(1) காசேட்டு வங்கி மீதியிலிருந்து வங்கிக்கூற்றின்படி மீதிக்குச் செல்லல்.

(2) வங்கிக்கூற்றின்படி மீதியிலிருந்து காசேட்டின்படி மீதிக்குச் செல்லல்.

(3) திருத்திய காசேட்டு வங்கி மீதியிலிருந்து வங்கிக் கூற்றின்படி மீதிக்குச் செல்லல்.

OT(4.2.8)

நிறுவனம் வங்கியிட்ட காசோலை அல்லது நிறுவனம் எழுதிக் கொடுத்து வங்கியிலிட்ட காசோலை வங்கியால் திருப்பி அனுப்பப்படுவது.

OT(4.2.9)

நிறுவனத்தின் வங்கிக் கணக்கிலிருந்து நிறுவன அனுமதியுடன் நேரடியாக வங்கியில் எடுக்கும் முறை.

OT(4.2.10)

நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் நிறுவனத்தின் வாடிக்கையாளர் நேரடியாக பணத்தை இடுவது.

## 4.3 தொங்கல் கணக்கும் பிழை திருத்தமும்
## Supense account & correction of errors

MC(4.3.1) பின்வருவனவற்றுள் எப்பிழை பரீட்சைமீதியில் வெளிப்படுத்தப்படும்?

(1) சி. சிமித்திடம் பெற்ற காசோலை ரூபா 9 500 ஆனது அவரது கணக்கில் ரூபா 5 900 எனப்பட்டது.

(2) விற்பனைச் செலவுகள் விற்பனைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

(3) கடன் விற்பனை ரூபா 3 000 இரு கணக்கிலும் ரூபா 300 எனப்பதியப்பட்டது.

(4) ரூபா 2 500 கொள்வனவு புத்தகங்களில் முழுமையாக விடப்பட்டது.

(5) ஆர். இப்பாலுக்கு விற்பனை ரூபா 56 000, ரூபா 65 000 எனப் பதியப்படல்.

(…………)

MC(4.3.2) பரீட்சை மீதியின் மொத்தம் இணங்கா விட்டால் வித்தியாசம் கட்டாயம் பதியப்படுவது.

(1) இலாப நட்டக்கணக்கு

(2) ஒரு தொங்கல் கணக்கு

(3) பெயருள்ள கணக்கு

(4) மூலதனக்கணக்கு

(5) பற்றுக் கணக்கிற்கு (…………)

MC(4.3.3) தொங்கல் கணக்கு,

(1) ஐந்தொகையில் எழுதப்படுதல்

(2) அடுத்த வருடத்தில் கொண்டு செல்லப்படுதல்.

(3) முடிவுக் கணக்குகள் வெளியிடமுன் வழுக்கள் கண்டு பிடிக்கப்படல்.

(4) தொங்கல் கணக்கு பதிவழிக்கப்பட்டு இலாப நட்டக் கணக்கில் எழுதப்படல்.

(5) உற்பதிக் கணக்கில் எழுதப்படுதல்.

(…………)

MC(4.3.4) பின்வருவனவற்றுள் எது கோட்பாடு வழு ?

(1) விற்பனைப் பட்டியலுக்கான பிழையான தொகை விற்பனை நாளேட்டில் சரியாகப் பதியப்படல்.

(2) கையிருப்பு விநியோகிக்கப்பட்டபோதும் பட்டியல் இன்னும் பெறப்படாமை.

(3) பெறுமானத்தேய்வு கணிப்பீட்டிற்கு பிழையான விகிதம் பயன்படுத்தப்பட்டது.

(4) பிழையான வகையான கணக்கில் பதியப்பட்ட ஓர் விடயம்.

(5) இரட்டைப் பதிவை முற்றாகப் பதியாமை.

(…………)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MC(4.3.5) நிறுவனத்தின் வாகனத்தை "சேவிஸ்" செய்யும் கூலியை மோட்டார் செலவில் பதியாது நிலையான சொத்தில் வரவு வைப்பதால்

(1) மொத்தலாபம் அதிகமாகக் காட்டும்.
(2) தேறிய இலாபம் குறைவாகக் காட்டும்.
(3) செலவு குறைவாகக் காட்டும்.
(4) தேறிய சொத்து குறைவாகக் காட்டும்.
(5) மோத்தலாபம் குறைவாகக் காட்டும். (............)

MC(4.3.6) பிழைகளைத் திருத்த நாட்குறிப்பு பாவிப்பது ஏனெனில்,

(1) பேரேட்டில் பதிவினைவிட விரைவாக நாட்குறிப்பில் திருத்தங்களைப் பதியலாம்.
(2) நாட்குறிப்பில் பதிந்தபின் பேரேட்டில் திருத்தம் பதிவது தேவையற்றுப்போவது.
(3) நாட்குறிப்பில் விளம்பல் இடப்படுவதால் எண்ணத்திற்கான பதிவென விளக்க முடிவதுடன் இரட்டைப்பதிவு புத்தகத்திற்கு கொண்டு செல்ல உதவ முடியும்.
(4) நாட்குறிப்பில் திருத்தங்களைச் செய்வது கட்டுப்பாட்டுக் கணக்கில் செய்வதை விட இலகுவானது
(5) மேற்கூறிய எவையுமல்ல (............)

MC(4.3.7) பரீட்சை நிலுவையின் மீதிகள் எப்போதும் சமப்பட வேண்டும் ?

(1) இல்லை சில சந்தர்ப்பங்களில் பிழைகளுக்கான தகுந்த காரணங்கள் பெறப்படும்.
(2) ஆம் வருட முடிவில் தயாரிக்கப்படும் பரீட்சை மீதி சமனாகும்.
(3) ஆம், எப்போதும்
(4) இல்லை, ஏனெனில் இது ஐந்தொகை அல்ல
(5) ஆம் (............)

MC(4.3.8) பின்வருவனவற்றுள் எது பரீட்சை மீதி சமப்படுவதைப் பாதிக்காது,

(i) ஏ. ஹென்றிக்கு விற்பனை ரூபா 10 600 ஆனது ஹென்றி கணக்கில் பதியப்பட்டது.
(ii) மோட்டார் செலவுகட்கு காசோலைக் கொடுப்பனவு ரூபா 1 340 காசேட்டில் மட்டும் பதியப்பட்டது.
(iii) சி. வுறொனிடம் கொள்வனவு ரூபா 4 400 ஆனது இரண்டு கணக்கிலும் ரூபா 4 040 எனப்பதியப்பட்டது.
(v) கூலிகள் கணக்கு பிழையாகக் கூட்டிக்காட்டியது
மொத்தம் ரூபா 10 000 கூடுதல்.

(1) (i),(iv)
(2) (ii),(iii)
(3) (iii),(iv)
(4) (ii),(iv)
(5) (i) மட்டும் (............)

MC(4.3.9) பின்வருவனவற்றுள் கோட்பாட்டு வழு அற்றது,

(i) மோட்டார் செலவுகள் மோட்டார் கணக்கில் பதிதல்.
(ii) இயந்திரம் கொள்வனவு, கொள்வனவுக் கணக்கில் பதியப்பட்டது.
(iii) சி.பிலிப்ஸ் என்பவருக்கு ரூபா 200 விற்பனை முற்றாக புத்தகங்களில் விடப்பட்டது.
(iv) ஹென்றி கியூட் என்பவருக்கு விற்பனை ஹென்றி கணக்கில் பதியப்பட்டது.

(1) (ii),(iii)
(2) (i),(ii)
(3) (iii),(iv)
(4) (i),(iv)
(5) (i) மட்டும் (............)

MC(4.3.10) வழுக்கள் நாட்குறிப்பின் மூலம் சரிபார்க்கப்படுகின்றன. ஏனெனில்,

(1) இது கணக்குப் பராமரிப்பானது நேரத்தை மீதப்படுத்தும்
(2) இது ஏடுகளில் பதியப்படுவதை பாதுகாக்கும்.
(3) இது செய்வதற்கு மிகவும் இலகுவானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) இரட்டைப் பதிவு முறைக்கு இது சரியான நல்ல விளக்கத்தை அளிக்கும்.
(5) வழமை

(…………)

MC(4.3.11) தொக்கு எடுப்பனவொன்று கணக்குகளில் பதியப்படாமலும், தொக்கு பௌதிக கணக்கெடுப்பு முறையில் கண்டறியப்படும் இருப்பின் இதன் தாக்கம் எத்தகையது
(1) தேறிய இலாபத்தில் அதிகரிப்பு
(2) தேறிய இலாபத்தில் வீழ்ச்சி
(3) தேறிய இலாபத்தில் தாக்கமெதுவும் இல்லை
(4) மொத்தலாபத்தில் மட்டும் அதிகரிப்பு
(5) மொத்தலாபத்தில் மட்டும் வீழ்ச்சி (…………)

MC(4.3.12) கூலியாகச் செலுத்தப்பட்ட ரூபா 2 710 ஆனது பொதுப் பேரேட்டில் தவறுதலாக வாடகைக் கணக்கில் ரூபா 24 170 ஆக வரவுப் பதிவு செய்யப்பட்டிருந்தது. பரீட்சை மீதியில் இவ் தவறின் தாக்கம்
(1) வரவுப்பக்கக் கூட்டுத்தொகை செலவுப்பக்கக் கூட்டுத்தொகைக்கு சமமாக இருக்கும்.
(2) வரவுப்பக்கக் கூட்டுத்தொகை செலவுப்பக்கக் கூட்டுத்தொகையைவிட ரூபா 540 இனால் குறைவானதாக இருக்கும்.
(3) வரவுப்பக்கக் கூட்டுத்தொகை செலவுப்பக்கக் கூட்டுத்தொகையைவிட ரூபா 540 இனால் அதினகமானதாக இருக்கும்.
(4) வரவுப்பக்க கூட்டுத்தொகைக்கும் செலவுப்பக்ககக் கூட்டுத் தொகைக்குமிடையே ரூபா 4 880 வித்தியாசமேற்படும்
(5) மேற்கூறிய எவையுமல்ல

(…………)

MC(4.3.13) வியாபாரத் தொக்கினை கொள்வனவு செய்ததன் காரணமாக பெறப்பட்ட கழிவான ரூபா 2000 கணக்கியல் ஏடுகளில் கணக்கிற் கொள்ளப் படவில்லை, இந்த வழுவானது ஓர்,
(1) கணித வழு (Arithmetical error)
(2) ஈடுசெய் வழு (Compensation error)
(3) ஆக்கல் வழு (error of commission)
(4) தவறுகை வழு (error of omission)
(5) மனித வழு (…………)

MC(4.3.14) ஆரம்பப் பதிவேடுகளில் அல்லது பேரேட்டுக் கணக்குகளில் உண்மைப் பெறுமதியையும் விட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பதியப்பட்ட பெறுமதியை
(1) விடுபடு வழுக்கள் (Error of Omission)
(2) செய்யப்படு வழுக்கள் (Error of Commission)
(3) ஈடுகட்டும் வழு (Compansating Error)
(4) கொள்கை வழுக்கள் (Error of Principles)
(5) ஆக்கல் வழு (error of commission) (…………)

MC(4.3.15) கீழ்வரும் சந்தர்ப்பங்களுள் எதில் பரீட்சைமீதி வித்தியாமொன்று ஏற்படலாம்?
(1) வாடிக்கயாளரொருவரிடமிருந்து பெறப்பட்ட பணம் ரூபா 5 000 கொள்வனவுக் கணக்கில் செலவுப் பதிவு செய்யப்பட்டுள்ளது
(2) விற்பனைத் திரும்பல் ரூபா 6 000 விற்பனைக் கணக்கில் வரவுப்பதிவு செய்யப்பட்டு கொள்வனவுக் கணக்கில் செலவுப் பதிவு செய்யப்பட்டுள்ளது
(3) கணனியொன்றின் கொள்வனவுக்கான கொடுப்பனவு ரூபா 46 000 நிலையான சொத்துக் கணக்கில் செலவுப் பதிவு செய்யப்பட்டுள்ளது
(4) மேற்கூறிய அனைத்தும்
(5) மேற்கூறிய எவையுமல்ல (…………)

**கீழ் தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி MC(4.3.16), MC(4.3.17) என்பவற்றிற்கு விடையளிக்குக.**

விளம்பரங்களை அச்சிடுவதில் ஈடுபட்டுள்ள கம்பனி ஒன்று ரூ. 50 000 க்கான விற்பனை ஒப்பந்தம் ஒன்றின் செயற்பாட்டினை அடுத்தவருடத்திலிருந்து ஆரம்பிக்கின்றது. குறித்த தினத்தில் கம்பனி ஒரு முற்பணக் கொடுப்பனவாக ரூ. 20 000 ஐயும் பெற்றுக் கொண்டுள்ளது. இந்த நடவடிக்கை தொடர்பான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவுகளை மேற்கொள்ளும்போது கம்பனி முழுப்பெறுமதியான ரூ. 50 000 ஐ விற்பனைக் கணக்கில் செலவிலும், காசுக் கணக்கில் ரூ. 20 000 ஐ வரவிலும், கடன்பட்டோர் கணக்கில் ரூ. 30 000 வரவிலும் வைக்கிறது.

MC(4.3.16) மேற்படி தவறை பொது நாட்குறிப்பேட்டில் திருத்துவதற்கான பதிவு

(1) விற்பனைக் க/கு வரவு ரூ. 50 000
காசேடு ரூ. 50 000

(2) விற்பனைக் க/கு வரவு ரூ. 50 000
கடன்பட்டோர் க/கு ரூ. 30 000
முற்பணக் க/கு ரூ. 20 000

(3) முற்பணக் க/கு வரவு ரூ. 10 000
விற்பனைக் க/கு ரூ. 10 000

(4) காசேடு வரவு ரூ. 20 000
முற்பணமாகப் பெற்ற வருமானக் க/கு ரூ. 20 000

(5) மேற்கூறிய எவையுமல்ல

(…………)

MC(4.3.17) மேற்படி தவறின் திருத்தமானது கீழ்வரும் எந்தக் கணக்கீட்டுச் சமன்பாட்டினூடாக வெளிப்படுத்தப்பட்டது.

| | சொத்துக்கள் | = | பொறுப்புக்கள் | + | சொந்தக்காரர் உரிமை |
|---|---|---|---|---|---|
| | ரூ. | | ரூ. | | ரூ. |
| (1) | (30 000) | = | 20 000 | + | (50 000) |
| (2) | (20 000) | = | 30 000 | + | (50 000) |
| (3) | (10 000) | = | 40 000 | + | (50 000) |
| (4) | 20 000 | = | 30 000 | + | 10 000 |

(5) மேற்கூறிய எவையுமல்ல (…………)

MC(4.3.18) ஒரு பரீட்சை மீதியில் பின்வருவனவற்றில் எப்பிழை தெரியவரும்?

(1) விற்பனை கணக்கு வரவு வைக்கப்பட்ட செலவுகள்.
(2) ரூ 30 000 இற்கு நடந்த கடன் விற்பனை தவறுதலாக விற்பனை நாளேட்டில் ரூ 3 000 எனப்பதியப்பட்டது.
(3) காசுக் கொள்வனவு ஒன்று பதியத் தவறுதல்.
(4) கொள்வனவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட விற்பனைகள்
(5) சம்பளக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட கூலி (…………)

MC(4.3.19) பரீட்சை மீதி சமப்படாவிட்டால் பின்வருவனவற்றில் எக்கணக்கு உருவாக்க வேண்டும்?

(1) தொங்கல் கணக்கு
(2) கட்டுப்பாட்டுக் கணக்கு
(3) ஏற்பாட்டுக் கணக்கு
(4) பொறுப்புக் கணக்கு
(5) மெய்க் கணக்கு (…………)

MC(4.3.20) பின்வருவனவற்றில் எது தொங்கல் கணக்கில் இடம்பெறும்?

(1) நானாவிதச் செலவுகள்
(2) ஓர் பரீட்சை மீதியில் உடனடியாகக் கண்டு பிடிக்க முடியாத வரவுக்கும், செலவுக்கும் இடையிலான வித்தியாசம்.
(3) மீளப்பெற்ற அறவிடமுடியாக்கடன்
(4) மேற்கூறிய அனைத்தும்
(5) மேற்தரப்பட்ட எவையுமல்ல (…………)

OT(4.3.1) வழுக்களின் வகை

(1) ……………………………………………………
(2) ……………………………………………………

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

OT(4.3.2) வழுக்களைக் கட்டுப்படுத் தளடுக்கவேண்டிய நடவடிக்கைகள்

(1) ..........................................................................

(2) ..........................................................................

(3) ..........................................................................

OT(4.3.3) நிறுவனக் கணக்கீட்டில் வழுக்கள் ஏற்படக் காரணங்கள்

(1) ..........................................................................

(2) ..........................................................................

(3) ..........................................................................

(4) ..........................................................................

OT(4.3.4) வழுக்கள் ஏற்படும் இடங்களும், தன்மையும்

(1) ..........................................................................

(2) ..........................................................................

(3) ..........................................................................

(4) ..........................................................................

OT(4.3.5) பரீட்சைமீதி வெளிக்காட்டும் வழுக்கள் எவ்வாறு ஏற்பட முடியும்?

(1) ..........................................................................

(2) ..........................................................................

(3) ..........................................................................

OT(4.3.6) செய்யப்பட்டவழு

..........................................................................

..........................................................................

..........................................................................

OT(4.3.7) பின்தள்ளும் பதிவுகள் (Reversing entries)

..........................................................................

..........................................................................

..........................................................................

OT(4.3.8) விடுபட்ட வழு

..........................................................................

..........................................................................

..........................................................................

OT(4.3.9) முதற்பதிவு வழு

..........................................................................

..........................................................................

..........................................................................

OT(4.3.10) இரட்டிப்பு வழு

..........................................................................

..........................................................................

..........................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



S.K. பிரபாகரன்
B.B.A(Spl) Dip.in.Edu(merit) MEd, Mphil(R)
செயல்திட்ட அதிகாரி, கணக்கீட்டு ஆசிரியர்
தேசிய கல்வி நிறுவகம்

**சகல பல்தேர்வு வினாக்களும் சரியான ஒரு விடையை மட்டும் கொண்டுள்ளன.**

01. பொறியொன்றின் கிரயம் 500 000 ரூபாவாகும். இதனது ஆயுட்காலம் 10 வருடங்களாகும். முதல் இரண்டு வருடங்கள் 20% ஒழுங்குபாக முறையில் தேய்மானமிட்ட பின்னர் அடுத்த வருடம் நேர்கோட்டு முறையில் தேய்விடத் தீர்மானிக்கப்பட்டது. மூன்றாம் நான்காம் வருடத் தேய்மானத் தொகைகளானவை,
    (1) 80 000 ரூபா, 40 000 ரூபா
    (2) 64 000 ரூபா, 40 000 ரூபா
    (3) 50 000 ரூபா, 50 000 ரூபா
    (4) 40 000 ரூபா, 40 000 ரூபா
    (5) 40 000 ரூபா, 35 000 ரூபா

02. வியாபாரமொன்றின் செயற்பாட்டு வினைத்திறனையும் குறுங்கால நிதி வல்லமையினையும் வெளிப்படுத்துவதற்குப் பொருத்தமான நிதி விகிதங்கள் முறையே,
    (1) விரைவு விகிதம், நடப்பு விகிதம்
    (2) நடப்பு விகிதம், விரைவு விகிதம்
    (3) இணைப்பு விகிதம், விரைவு விகிதம்
    (4) இருப்புச் சுழற்சி விகிதம், விரைவு விகிதம்
    (5) இருப்புச் சுழற்சி விகிதம், இணைப்பு விகிதம்

03. "Cool Star" வணிகத்தினது தகவல்கள் வருமாறு :

| | |
|---|---|
| அலகு ஒன்றின் விற்பனை விலை | 1000 ரூபா |
| அலகு ஒன்றின் மாறுங்கிரயம் | 600 ரூபா |
| நிலையான கிரயம் | 900 000 ரூபா |
| இலாபத் தொகை | 150 000 ரூபா |

இத்தகவல்களுக்கமைய விற்கப்பட்ட மொத்த அலகுகள்,
    (1) 2650    (2) 2250    (3) 1750
    (4) 2526    (5) 1050

04. பாதுகாப்பு எல்லையாக இனங்காண்பது,
    (1) பாதிட்ட விற்பனைக்கும் உண்மையான விற்பனைக்குமான வேறுபாடு
    (2) பாதிட்ட விற்பனைக்கும் இலாபநட்டமற்ற விற்பனைக்குமான வேறுபாடு
    (3) இலாபநட்டமற்ற விற்பனைக்கும் பாதிட்ட விற்பனைக்குமான வேறுபாடு
    (4) பாதிட்ட விற்பனை அலகுகள் ஆகும்.
    (5) இலாபநட்டமற்ற விற்பனை அலகுகள் ஆகும்.

05. தம்ரோ நிறுவனம் மர அலுமாரிகளை வாங்கி விற்கும் கம்பனியொன்றாகும். குறித்தவொரு வியாபாரக் கொடுக்கல் வாங்கலினால் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்பட்ட விளைவு பின்வருமாறு உள்ளது.
    நடைமுறையில்லாச் சொத்தில் தளபாடம் அதிகரிப்பு 50 000 ரூபா
    நடைமுறைச் சொத்தில் கையிருப்புக்குறைவு 50 000 ரூபா
    நடைமுறைச்சொத்தில் காசுமீதி அதிகரிப்பு 50 000ரூபா
    நடைமுறையில்லாப் பொறுப்பில் சென்மதியாளர் அதிகரிப்பு 50 000 ரூபா
    மேற்குறித்த தாக்கங்களுக்குப் பொருத்தக் கூடிய நிகழ்ச்சியொன்றாக அமைவது பின்வருவனவற்றில்,
    (1) கடனுக்கு 50000 ரூபாவுக்கும் காசுக்கு 50 000 ரூபாவுக்குமாக அலுமாரிகள் வாங்கப்பட்டன.
    (2) விற்பனைக்கான அலுமாரிகள் 50 000ரூபா தவறுதலாக கையிருப்புக் கணக்கில் பதியப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) வெளித்திரும்பல்கள் 50 000 ரூபாவும் பெற்ற நீண்டகாலக்கடன்கள் 50 000 ரூபாவுமாகும்.

(4) பாவனைக்கொன 3 வருடக்கடன்கள் அடிப்படையில் வாங்கிய தளபாடங்களை மீள் விற்பதற்கு காசுக்கு வாங்கிய தளபாடங்களை மீள் விற்பதற்கு காசுக்கு வாங்கிய தளபாடங்களாகப் பதிந்தமை திருத்தப்பட்டுள்ளது.

(5) மீளவிற்பதற்காக வாங்கப்பட்ட தளபாடங்களை பாவனைக்கான தளபாடங்களாகப் பதிந்தமை திருத்தப்பட்டுள்ளது.

06. உற்பத்தி வணிகமொன்றில் பூர்த்திப் பண்டங்கள் தொடர்பான விபரங்கள் 31.03.2011ல் பின்வருமாறு காணப்பட்டன.

| பொருள் வகுதி | நேர்பொருள் ஊழியக்கிரயம் | உற்பத்தி மேந்தலை | உற்பத்தியல்லா மேந்தலை | எதிர்பார்ப்பு விற்பனை விலை | எதிர்பார்ப்பு விற்பனை செலவு |
|---|---|---|---|---|---|
| x | 14000 | 16000 | 4000 | 40000 | 3000 |
| y | 46000 | 24000 | 8000 | 72000 | 4000 |
| z | 22000 | 28000 | 5000 | 54000 | 6000 |

இ.க.நி - 05 இற்கமைய இறுதிப் பூர்த்திப்பொருள் பெறுமதியானது (உருப்படி முறையில்)

(1) 150000 ரூபா (2) 99000 ரூபா (3) 146000 ரூபா
(4) 99000 ரூபா (5) 163000 ரூபா

07. கைக்கிட்டும் எண்ணக்கரு தொடர்பான சில கருத்துக்களை மாணவர்கள் சிலர் பின்வருமாறு முன்வைத்துள்ளனர்.

(a) வருமானம் அது உழைக்கப்படும் வேளையில் இனங்காணப்படும்.

(b) வருமானம் தேறக்கூடியதாக உள்ள போது இனங்காணப்படும்.

(c) வருமானம் காசாகத்தேறிய பின்னரே இனங்காணப்படும்.

(d) குறித்த கணக்காண்டின் போது கிடைக்கப்பெற்ற காசு மட்டுமே இனங்காணப்படும்.

மேலுள்ளவற்றில் சரியான கூற்று அல்லது கூற்றுக்களை இனங்காண்க.

(1) a,c,d என்பன (2) a,b,c,d என்பன (3) a,c என்பன
(4) b,d என்பன (5) a,b என்பன

08. பங்குடைமையில் அனில், பசில் என்போரது வருடாந்தச்சம்பளங்கள் முறையே 60000 ரூபா, 40000 ரூபாவாகும். மூலதன வட்டி 10% ஆகக் காணப்பட்ட தொகைகள் முறையே 30000 ரூபாவும் 20000 ரூபாவும் ஆகும். இலாப நட்டங்கள் முறையே 3:2 எனப் பகிரப்படும்.

01.04.2010ல் நடைமுறைக்கணக்கு மீதிகள் :- அனில் - 30000 ரூபா (செலவு)
பசில் - 50000 ரூபா (செலவு)

31.03.2011ல் நடைமுறைக்கணக்கு மீதிகள் :- அனில் - 120000 ரூபா (செலவு)
பசில் - 150000 ரூபா (செலவு)

பங்காளரது பற்றுக்கள் :- அனில் - 90000 ரூபா
பசில் - 120000 ரூபா

31.03.2011ல் முடிந்த ஆண்டுக்கான தேறிய லாபத்தையும் உத்தரவாதம் யாருக்கு எத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது என்பதையும் காண்க.

| தேறிய லாபம் | உத்தரவாத வருமானம் |
|---|---|
| (1) 190000 ரூபா | அணிலுக்கு 160000 ரூபா |
| (2) 130000 ரூபா | அணிலுக்கு 250000 ரூபா |
| (3) 400000 ரூபா | அணிலுக்கு 260000 ரூபா |
| (4) 280000 ரூபா | பசிலுக்கு 160000 ரூபா |
| (5) 400000 ரூபா | பசிலுக்கு 220000 ரூபா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. செயல்திட்டமொன்றில் முதலிடப்பட்ட ஆரம்பத்தொகை 5000 ரூபாவாகும். மூலதனக் கிரயம் 12% ஆகும். இத்திட்டத்தின் நான்கு ஆண்டுக்களுக்குமான நிகர காசுப்பாய்ச்சல்கள், கழிவுக்காரணி 12% என்பன பின்வருமாறாகும்

| வருடம் | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|
| நிகர காசுப்பாய்ச்சல் | (5000) | 2000 | 2000 | 2000 | 1500 |
| 12% கழிவு காரணி | 1.00 | 0.89 | 0.80 | 0.71 | 0.64 |

இச்செயல்திட்டத்தின் தேறிய இன்றைய பெறுமதி, முதலீடு திரும்பும் காலம் என்பன முறையே,

| NPV | முதலீடு திரும்பல்காலம் |
|---|---|
| (1) 200 ரூபா, | 2 வருடங்கள் 4 மாதங்கள் |
| (2) 1204 ரூபா, | 2 வருடங்கள் 6 மாதங்கள் |
| (3) 760 ரூபா, | 2 வருடங்கள், 6 மாதங்கள் |
| (4) 5000 ரூபா, | 2 வருடங்கள், 4 மாதங்கள் |
| (5) 1240 ரூபா, | 2 வருடங்கள் மட்டும் |

10. நேர் கூலிக்கிரயம், நேர்ச்செலவு, தொழிற்சாலைப் பொதுக்கிரயம் என்பவற்றின் மொத்தம்.
(1) மொத்த நிலையான கிரயம்
(2) மொத்த மாறும் கிரயம்
(3) மொத்த மாற்றல் கிரயம்
(4) மொத்த உற்பத்திக்கிரயம்
(5) மொத்த மூலக்கிரயம்

11. காசோட்டமொன்றாக அமைய முடியாதது,
(1) வியாபாரத்தினது தேறிய இலாபம்
(2) வாடிக்கையாளரிடமிருந்து பெறுவனவு
(3) வழங்குநரைது குறைவு
(4) கடன்பட்டோரது தொகை குறைதல்
(5) வங்கிக்கடன் பெறுதல்.

12. நேரில்முறை கசோட்டக் கூற்றொன்றைத் தயாதிக்கும் போது செயற்பாட்டில் உருவான காசைக் கணிப்பிடுவதற்காகத் தேறிய லாபத்துடன் சீராக்கக்கூடிய உருப்படி அல்லாதது.
(1) வருடாந்தப் பெறுமானத்தேய்வுத் தொகைகள்
(2) பெற்ற முதலீட்டு வருமானம்
(3) ஆண்டு வட்டிச் செலவினம்
(4) நடைமுறையல்லாச் சொத்து அகற்றல் நட்டம்
(5) கொடுபட்ட செயற்பாட்டு (நிருவாக, விற்பனை) செலவுகள்.

13. வரையறுத்த சுல்தான் கம்பனியானது 31.03.2011ல் முடிந்த ஆண்டுக்கான வரிக்குப் பின்னரான இலாபத் தொகை 18000 ரூபாவாகும். ஆண்டுக்கான பிறதகவல்கள் வருமாறு:

| | |
|---|---|
| ஆண்டுக்கான பெறுமானத்தேய்வு | 5000 ரூபா |
| முதலீட்டு வருமானம் பெற்றது | 2000 ரூபா |
| கொடுபட்ட சம்பளம் கூலி | 4000 ரூபா |
| ஆண்டுக்கான இலாபத்திலான வருமான வரி | 8000 ரூபா |
| ஆண்டுக்கான செலுத்திய வருமானவரி | 5000 ரூபா |

ஆயின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் தேறிய காசுப்பாய்ச்சல் தொகையானது,
(1) 25000 ரூபா (2) 21000 ரூபா (03) (3000) ரூபா
(4) 29000 ரூபா (5) 24000 ரூபா

14. வாகனக்கணக்கு முன்கொணர்ந்த மீதிகள் ஆரம்பத்தில் 80000 ரூபா இறுதியில் 50000ரூபா ஆகும். நடபாண்டுக்கான வாகனப்பெறுமானத்தேய்வு 10000ரூபா. வாகன விற்பனையினால் ஏற்பட்ட இலாபத்தொகை 5000 ரூபாவாகும், எனின் முதலீட்டு நடவடிக்கைகளின் பதியப்படும் காசுப்பாய்ச்சல் பின்வருவனவற்றில் எதுவாகும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) 25000 ரூபா உட்பாய்ச்சல்
(2) 25000 ரூபா வெளிப்பாய்ச்சல்
(3) 20000 ரூபா உட்பாய்ச்சல்
(4) 20000 ரூபா வெளிப்பாய்ச்சல்
(5) 30000 ரூபா உட்பாய்ச்சலாகும்.

15. உற்பத்திப் பொருள் ஒன்றினது விற்பனை விலை 20000 ரூபா அலகொன்றினது மாறுங்கிரயம் 12000 ரூபா, மொத்த நிலையான கிரயம் 600000 ரூபா. குறித்த காலப்பகுதியில் 300 அலகு பொருட்கள் விற்கப்பட்டமை 300 அலகுகளும் விற்பனை செய்திருப்பின் இலாபத் தொகையானது,

(1) 2400 000 ரூபா (2) 1800 000 ரூபா (3) 6000 000 ரூபா
(4) 3600 000 ரூபா (5) 3000 000 ரூபா

16. கம்பனியொன்றில் குறித்த ஆண்டில் பங்கொன்றுக்கான உழைப்பு 2 ரூபாவாகும். விலை உழைப்பு விகிதம் 8 மடங்கு ஆயின் பங்கொன்றின் சந்தை விலையானது.

(1) 4 ரூபா (2) 8 ரூபா (3) 2 ரூபா
(4) 16 ரூபா (5) 20 ரூபா

17. இ.க.நி-05 இன்படி இருப்புக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய விடயங்கள்:

a - இருப்பினை மதிப்பிடப் பயன்படுத்திய கணக்கீட்டுக்கொள்கை.
b - பொறுப்புக்களுக்குப் பிணையாகக் காட்டப்பட்ட இருப்புக்களின் பெறுமதி.
c - சாதாரண விற்பனைச்செயற்பாட்டில் மதிப்பிட்ட விற்பனைப் பெறுமதி
d - இருப்பு மதிப்பீட்டுக்குப் பயன்படுத்திய கிரயச்சூத்திரம் இவற்றில் சரியான வெளிப்படுத்தல்களின் தொகுதி:

(1) a,b,c,d (2) a,b,d (3) a,b,c
(4) a,b (3) a,c,d

18. வணிகமொன்றினால் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியின் செலவில் வழுவொன்றின் காரணமாக 5000 ரூபா தொங்கல் ஏற்பட்டுள்ளதற்குப் பொருத்தமான அக்கணக்கீட்டு வழுவானது.

(1) 10000 ரூபா வரவு மீதியொன்று பரீட்சை மீதியில் 5000 ரூபாவெனச் சேர்க்கப்பட்டிருத்தல்.
(2) 5000 ரூபா வரவு மீதியொன்றைப் பரீட்சைமீதியின் செலவு நிரலில் பதிந்திருத்தல்.
(3) வெளித்திரும்பல் கணக்கு மீதி 2500 ரூபா பரீட்சைமீதியில் விடுபட்டிருத்தல்.
(4) வெளித்திரும்பல் கணக்கு மீதி 2500 ரூபா பரீட்சைமீதியின் வரவில்
(5) விற்பனைக் கணக்கு மீதி 5000 ரூபாவால் அதிகமாயிருத்தல்.

19. வணிகமொன்றினது விரைவு விகிதத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்தக்கூடிய கொடுக்கல் வாங்கலானது,

(1) ஐந்து வருடக் கடனடிப்படையில் 200 000 ரூபா சாதனங்களைக் கொள்வனவு செய்தல்.
(2) வணிகத்திலிருந்து 100 000 ரூபாவை வங்கிக்கணக்கில் வைப்புச்செய்தமை.
(3) வியாபாரக் கடன்பட்டோரிடம் சேகரித்த காசு 40000 ரூபா.
(4) வியாபாரக் கடன்கொடுத்தோருக்குத் திருப்பியனுப்பிய பொருள் 6000 ரூபா
(5) 100 000 ரூபா உரிமைப் பங்குகள் வழங்கப்பட்டமை.

20. சீமான், மாறன் என்போரது பங்குடைமை ஒப்பந்தமானது பின்வரும் ஏற்பாடுகளைச் செய்கின்றது.

(A) நிலையான மூலதனங்களுக்கு ஆண்டு வட்டி 5 %
(B) நிருவாகத்திலீடுபடுவதற்காக மாதாந்தச் சம்பளங்கள் மாறனுக்கு 2000 ரூபா.
(C) களஞ்சியக் காப்பாளராக கடமையாற்றுவதற்காகச் சீமானுக்கு மாதாந்தச் சம்பளம் 3000 ரூபா
(D) மூலதனத்திற்கு மேலாக 50000 ரூபாவை வணிக நடவடிக்கைகளுக்காகக் கடனாக வழங்கிய மாறனுக்கு ஆண்டு வட்டி 5% வட்டி
(E) காசுப் பற்றுக்களுக்கு ஆண்டு வட்டி 5%

மேற்கூறப்பட்ட விடயங்களில் வணிகத்தினது வியாபார இலாபத்தினைப் பாதிக்கும் நடவடிக்கைகள்:

(1) A,B என்பன (2) C,D என்பன (3) A,D என்பன
(4) A,D என்பன (5) எவையுமில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. உற்பத்தி வணிகமொன்றில் x எனும் பொருள் தொடர்பான தகவல்கள் வருமாறு :

| உற்பத்திக் கட்டடம் | உற்பத்தி செய்த அலகுகள் | அலகொன்றின் கிரயம் |
|---|---|---|
| 01 | 5000 | 100 |
| 02 | 6000 | 90 |

அலகொன்றின் மாறுங்கிரயம், மொத்த நிலையான கிரயம் முறையே

| அலகு மாறுங்கிரயம் | மொத்த நிலையான கிரயம் |
|---|---|
| (1) 24 ரூபா | 240 000 ரூபா |
| (2) 4 ரூபா | 30 000 ரூபா |
| (3) 40 ரூபா | 240 000 ரூபா |
| (4) 40 ரூபா | 300 000 ரூபா |
| (5) 50 ரூபா | 300 000 ரூபா |

22. S3 எனும் மூலப்பொருளினது தகவல்கள் பின்வருமாறு :

காலாண்டு மூலப்பொருள் தேவை 1000 Kg
ஒரு கிலோகிராம் மூலப்பொருட்கிரயம் 10 ரூபா
கட்டளையொன்றைத் தயாரித்தல் செலவு 10 ரூபா
கட்டளையொன்றின் தபால் செலவு 2.50 ரூபா

ஒரு Kg பொருளை வருடத்துக்குப் பர்ாமரித்தல் கிரயம் 10 ரூபா பொருளியல் கட்டளைக் கணியத்தினையும் அதனடிப்படையிலான கட்டளைகளின் எண்ணிக்கையையும் குறிப்பது,

(1) 50 கிலோகிராம் 8 கட்டளைகள்
(2) 100 கிலோகிராம் 4 கட்டளைகள்
(3) 80 கிலோகிராம் 5 கட்டளைகள்
(4) 40 கிலோகிராம் 10 கட்டளைகள்
(5) 200 கிலோகிராம் 02 கட்டளைகள்

23. பணவீக்கம் நிலவும் வேளையில் FIFO முறையின் கீழ் இருப்புக்களுக்கு விலையிடல் மேற்கொள்ளப்படுமாயின்,

(1) உற்பத்திக் கிரயம் அதிகமாகவும் இலாபம் குறைவாகவும் இருக்கும்.
(2) உற்பத்திக் கிரயம் விலைமாற்றத்திற்கேற்ப இடம்பெறும்.
(3) உற்பத்திக்கிரயம் குறைவாகவும் இலாபம் அதிகமாகவும் காணப்படும்.
(4) உற்பத்திக்கிரயம் குறைவாகவும் இலாபம் குறைவாகவும் காணப்படும்.
(5) மேற்கூறிய எவையுமல்ல.

24. ஏனைய காரணிகள் நிலையாகக் காணப்படும் போது மொத்த நிலையான கிரயம் குறைவடையுமாயின் ஏற்படக்கூடிய விளைவைச் சரியாகக் குறிப்பிடுவது.

(1) இலாப நட்டமற்ற புள்ளி மேற்புற நகர்வைக் காட்டும்
(2) பங்களிப்புத் தொகை அதிகரிக்கும்.
(3) மொத்தக்கிரயம் மாறாதிருக்கும்.
(4) இலாபநட்டமற்ற புள்ளி கீழ்ப்புற நகர்வைக் காட்டும்.
(5) பாதுகாப்பு எல்லை அலகுகள் குறைவடையும்.

25. மேந்தலை உள்ளடக்க விகிதத்தைக் கணிப்பிடுவதன் நோக்கம் :

(1) உற்பத்தி மேந்தலைச் செலவுகளைக் கட்டுப்படுத்தல்
(2) இதய நிலையங்கள் தொடர்பான மேந்தலைக் கிரயங்களை அறிதல்.
(3) உற்பத்தி நிலைய மேந்தலைக் கிரயங்களை சேவை நிலையங்களுக்கு மறுபங்கீடு செய்தல்.
(4) உற்பத்தி அலகுகளுக்குரிய மேந்தலைக் கிரயத்தைத் தீர்மானித்தல்.
(5) மூலக் கிரயத்தினைக் கணித்தல்.

* **சிரேஷ்ட்ட கணக்கீட்டு ஆசிரியரான S.K. பிரபாகரன் அவர்களின் வினாக்களுக்குரிய விடைகள் அடுத்த இதழில் இடம்பெறும். கால தாமதத்திற்கு வருந்துகிறோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



A. நிவீன்
B.Com (Hons), Dip.in.Ed
சிரேஷ்ட்ட கணக்கீட்டு ஆசிரியர்
புனித சவேரியார் பெண்கள் கல்லூரி
(தேசிய பாடசாலை) - மன்னார்.

**01 தொடக்கம் 14 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையினை தெரிவு செய்து அதன் இலக்கத்தை உரிய அடைப்புக்குள் இடுக.**

01. வணிகமொன்றின் 01.01.2012 ல் மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 600,000 ஆகவும், பொறுப்புகளின் மொத்தப் பெறுமதி ரூபா 150,000 ஆகவும் காணப்பட்டது. ஜனவரிமாத முதல் வார கொடுக்கல் வாங்கல்கள்.
- 3.1.2012 ல் ரூபா 200,000 புத்தகவிலையான உபகரணம் விற்கப்பட்டு ரூபா 40,000 இலாபம் பெறப்பட்டுள்ளது.
- 5.1.2012 ல் ரூபா 3,000 வட்டி உட்பட ரூபா 43,000 காசுசெலுத்தி வங்கி மேலதிகப் பற்று தீர்க்கப்பட்டுள்ளது. எனின் பின்வருவனவற்றில் எது சரியானது.

| | **07.01.2012 ல் தேறியசொத்தின் பெறுமதி** | **தொழிற்படு மூலதனத்தில் ஏற்பட்டமாற்றம்** |
|---|---|---|
| 1) | ரூ 487,000 | ரூ 237,000 அதிகரிப்பு |
| 2) | ரூ 490,000 | ரூ 197,000 அதிகரிப்பு |
| 3) | ரூ 493,000 | ரூ 197,000 குறைவு |
| 4) | ரூ 487,000 | ரூ 240,000 அதிகரிப்பு |
| 5) | ரூ 407,000 | ரூ 200,000 அதிகரிப்பு |

(..........)

02. 2011 டிசம்பர் மாத வங்கிக்கூற்று கிடைக்கும் முன்னர் வணிகத்தின் காசுப்புத்தக வங்கி சாதகமீதி ரூபா 4,000 ஆக காணப்பட்டது.

| | | |
|---|---|---|
| - **விடுபாடுகள்** | நிலையான கட்டளைக் காப்புறுதி கொடுப்பனவு | ரூ 7,000. |
| | வாடிக்கையாளரின் வங்கி நேரடிவைப்பு | ரூ 2,000. |
| - **காலவேறுபாடு** | மாற்றப்படாத காசோலைகள் | ரூ 6,000. |
| | வசூலிக்காத காசோலைகள் | ரூ 12,000. |

| | **31.12.2011 ல் ஐந்தொகையில் காட்டவேண்டிய வங்கிமீதி** | **31.12.2011ல் வங்கி கூற்றுமீதி** |
|---|---|---|
| 1) | ரூ 1,000 வரவு மீதி | ரூ 7,000 செலவு மீதி |
| 2) | ரூ 1,000 வரவு மீதி | ரூ 7,000 வரவு மீதி |
| 3) | ரூ 1,000 வரவு மீதி | ரூ 5,000 செலவு மீதி |
| 4) | ரூ 1,000 செலவு மீதி | ரூ 7,000 செலவு மீதி |
| 5) | ரூ 1,000 செலவு மீதி | ரூ 7,000 வரவு மீதி |

(..........)

03. 31.12.2011ல் தயாரிக்கப்பட்ட பரீட்சைமீதி சமப்படாதகாரணத்தால் தொங்கல் கணக்கு உருவாக்கப்பட்டது. அப்பரீட்சைமீதியை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்ட வருமானக்கூற்றில் தேறிய இலாபம் ரூ 90,000 ஆக காணப்பட்டது.
- காப்புறுதி கட்டணக் கணக்கு மீதி ரூபா 3,000 பரீட்சைமீதிக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.
- பெற்றவாடகை ரூபா 1,500 கொடுத்தவாடகைக் கணக்கில் வரவில் ரூபா 500 ஆக ப்திவிடப்பட்டிருந்தது.

| | **பரீட்சைமீதியில் உருவாகியுள்ள தொங்கல் கணக்குமீதி** | **தவறுசீராக்கியபின்னர் தேறிய இலாபம் 31.12.2011ல்** |
|---|---|---|
| 1) | ரூ 5,000 வரவில் | ரூ 95,000 |
| 2) | ரூ 1,000 வரவில் | ரூ 91,000 |
| 3) | ரூ 1,000 வரவில் | ரூ 89,000 |
| 4) | ரூ 5,000 செலவில் | ரூ 85,000 |
| 5) | ரூ 1,000 செலவில் | ரூ 89,000 |

(..........)

04. வணிகம் ஒன்றின் 31.12.2011ல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்குமீதி ரூபா 38,000 ஆக காணப்பட்டது. ஆனால் விற்பனைபேரேட்டுக் கணக்குகளின் நிரல்மொத்தமீதி வேறு ஒரு தொகையாக காணப்பட்டது. காரணங்கள் வருமாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெற்றகழிவு நிரல் மொத்தம் ரூ 4,500 ஆனது தவறுதலாக கடன்படுனர் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவில் ரூபா 500 எனபதியப்பட்டுள்ளது.
- விற்பனை நாளேட்டில் பதியப்பட்டிருந்த ரூபா 6,500 விற்பனைத்தொகை உரிய நபர்கணக்கில் தவறாக ரூபா 500 எனபதிவிடப்பட்டிருந்தது.

| | **31.12.2011 ல் சீராக்கியபின் கட்டுப்பாட்டுக் கணக்குமீதி** | **சீராக்கமுன் உள்ள விற்பனைப் பேரேட்டு கணக்குகளின் மொத்தமீதி** |
|---|---|---|
| 1) | ரூ 34,000 | ரூ 32,500 |
| 2) | ரூ 38,500 | ரூ 40,000 |
| 3) | ரூ 38,500 | ரூ 32,500 |
| 4) | ரூ 37,500 | ரூ 43,500 |
| 5) | ரூ 31,500 | ரூ 31,500 |

(..........)

05. வணிக நிறுவனமொன்றின் 31.12.2011ல் முடிந்த ஆண்டுத் தகவல்கள் வருமாறு
கடன்கொடுத்தோருக்கு செலுத்தியுள்ள காசுத் தொகை ரூபா 310,000.
மொத்த விற்பனைத் தொகை ரூபா 252,000
ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூபா 80,000
எனினும் ஆண்டில் இடம்பெற்ற பண்ட அழிவுதொடர்பாக ஏடுகளில் எப்பதிவும் இடம்பெறவில்லை.
நிறுவனத்தின் மொத்தலாப எல்லை கிரயத்தில் 40% ஆகும்.

| **சொத்தும்,பொறுப்பும்** | **01.01.2011 ல்** | **31.12.2011ல்** |
|---|---|---|
| வியாபார இருப்பு | 40,000 | 80,000 |
| வியாபாரக்கடன்கொடுத்தோர் | 90,000 | 50,000 |

| | **ஆண்டில் அழிவுற்ற பண்டப்பெறுமதி** | **சீராக்கத்தின் பின் தேறிய இலாபம்.** |
|---|---|---|
| 1) | ரூ 30,000 | ரூ 130,000 |
| 2) | ரூ 50,000 | ரூ 80,000 |
| 3) | ரூ 30,000 | ரூ 70,000 |
| 4) | ரூ 50,000 | ரூ 40,000 |
| 5) | ரூ 30,000 | ரூ 130,000 |

(..........)

06. வணிக நிறுவனமொன்று 01.08.2010 ல் அரையாண்டு வாடகைக் கட்டணமாக ரூபா 240,000 காசுசெலுத்தி கட்டிட்மொன்றை வாடகையில் பெற்று அன்றுமுதல் பயன்படுத்திவந்தது. இவ்வாடகை ஒப்பந்தமானது 01.01.2011 ல் இருந்து மாதாந்தம் ரூ 60,000 ஆக மாற்றப்பட்டதோடு அத்தினத்தில் ரூபா 200,000 வாடகைக்காக காசு செலுத்தப்பட்டுள்ளது எனின்

| | **31.03.2011முடிந்தஆண்டில் வருமானக்கூற்றில் காட்டும் வாடகை** | **31.03.2011ல் ஐந்தொகையில் வாடகை வெளிப்படுத்தலானது** |
|---|---|---|
| 1) | ரூ 380,000 | ரூ 0 |
| 2) | ரூ 380,000 | ரூ 60,000 முற்பணம் |
| 3) | ரூ 380,000 | ரூ 60,000 நிலுவை |
| 4) | ரூ 320,000 | ரூ 60,000 முற்பணம் |
| 5) | ரூ 360,000 | ரூ 60,000 நிலுவை |

(..........)

07. கம்பனி ஒன்றின் 31.03.2011 ல் பரீட்சைமீதியில் பெயர்த்தெடுக்கப்பட்டமீதிகள் வருமாறு:

| | |
|---|---|
| 31.03.2010 ற்கான வரி ஏற்பாடு | ரூ 70,000 |
| 31.03.2011 ற்கான வரி ஏற்பாடு | ரூ 50,000 |
| 2010/2011 ல் செலுத்திய வருமான வரி | ரூ 200,000 |

செலுத்திய வருமானவரித் தொகையில் 30% ஆனது 2009/2010ம் ஆண்டுசார்பாக இணங்கப்பட்டு செலுத்தப்பட்டதாகும். மிகுதி 2010/2011 ற்காக செலுத்தியதாகும்.

| | **31.03.2011 முடிந்த ஆண்டில் வருமானக்கூற்றில் கழிக்கப்படும் வருமானவரித்தொகை** | **31.03.2011 ல் முடிந்த ஆண்டிற்கு மதிப்பிடப்பட்ட வருமானவரி** |
|---|---|---|
| 1) | ரூபா 220,000 | ரூ 210,000 |
| 2) | ரூபா 200,000 | ரூ 210,000 |
| 3) | ரூபா 180,000 | ரூ 190,000 |
| 4) | ரூபா 220,000 | ரூ 200,000 |
| 5) | ரூபா 200,000 | ரூ 190,000 |

(..........)

08. 31.03.2011 ல் வணிகநிறுவனமொன்றின் இருப்பு ரூபா 80,000 ஆக கிரயமதிப்பிடப்பட்டது. இவ் இருப்பின் அடிப்படையில் பெறப்பட்டதேறிய இலாபம் ரூபா 250,000 ஆகும். எனினும் பின்வரும் தவறுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனம்காணப்பட்டது.

- ரூபா 30,000 கிரயத்தில் பெறுமானமிடப்பட்டுள்ள இருப்புதொகுதி ஒன்று எதிர்காலத்தில் ரூபா 5,000 செலவுசெய்வதன் மூலம் ரூபா 25,000 காசிற்கு விற்கமுடியுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. இருந்தும் அதுகருத்தில் கொள்ளப்படவில்லை.
- ரூபா 10,000 கிரயமான பண்டங்கள் வெளித்திருப்பமாக ஏடுகளில் பதிவிடப்பட்டபோதும் அவை 31.03.2011 வரைநிறுவனத்தில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

| | **31.03.2011 ல் இருப்பின் கிரயபெறுமதி** | **31.03.2011 ல் சீராக்கப்பட்ட தேறிய இலாபத்தொகை** |
|---|---|---|
| 1) | ரூ 80,000 | ரூ 270,000 |
| 2) | ரூ 70,000 | ரூ 230,000 |
| 3) | ரூ 80,000 | ரூ 250,000 |
| 4) | ரூ 80,000 | ரூ 230,000 |
| 5) | ரூ 70,000 | ரூ 270,000 |

(.........)

09. 31 டிசம்பரில் கணக்குகளை முடிவுறுத்தும் வணிகநிறுவனம் ஒன்று ரூபா 640,000 கிரயத்தில் 1.1.2007ல் மோட்டார் வாகனமொன்றை கொள்வனவுசெய்தது. அவ்வாகனத்தின் பயனுள்ள ஆயுட்காலம் 12 வருடங்களாகும். அதன் எஞ்சியபெறுமதி ரூபா 40,000 ஆக மதிப்பிடப்பட்டது. நேர்கோட்டுமுறையில் தேய்விடப்பட்டுவந்த இவ் வாகனம் 30.6.2011ல் ரூபா 350,000 ற்குவிற்று பணம் பெறப்பட்டது.

| | **31.12.2010 ல் திரண்ட் தேய்வுபெறுமானம்** | **2011 ஆண்டு தேய்வுத் தொகை** | **30.6.2011 ல் வாகனஅகற்றலில் பெற்ற இலாபம்/நட்டம்** |
|---|---|---|---|
| 1) | ரூ 200,000 | ரூ 25,000 | ரூ 65,000 நட்டம் |
| 2) | ரூ 250,000 | ரூ 25,000 | ரூ 25,000 இலாபம் |
| 3) | ரூ 250,000 | ரூ 25,000 | ரூ 25,000 நட்டம் |
| 4) | ரூ 200,000 | ரூ 25,000 | ரூ 65,000 இலாபம் |
| 5) | ரூ 150,000 | ரூ 25,000 | ரூ 125,000 இலாபம் |

(..........)

10. வணிக நிறுவனத்தின் 31.12.2010 ல் அறவிடமுடியாத, ஐயக்கடன் ஏற்பாட்டுத் கணக்குமீதி ரூபா 6,000 ஆகும். 2011 ம் ஆண்டு பதிவழிப்பு செய்யப்பட்டிருந்த அறவிமுடியாதகடன் தொகை ரூபா 4,000, அத்தோடு சென்ற ஆண்டு பதிவழிப்புசெய்து இவ்வாண்டு காசாகமீளப்பெறப்பட்ட கடன் தொகை ரூபா 1,000.
31.12.2011 ல் வியாபார கடன்பட்டோர் மீதி ரூபா 100,000 ஆகும்.
நிறுவனம் கடன்பட்டோர் மீதியில் 10% ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்வது கொள்கையாகும்.

| | **31.12.2011 ல் முடிந்தஆண்டு வருமானக்கூற்றில் பதியவேண்டிய செலவின் தேறிய தொகை** | **31.12.2011 ல் ஐந்தொகையில் காட்டப்பட வேண்டிய கடன்பட்டோரின் முன் கொண்டுவரப்பட்டபெறுமதி.** |
|---|---|---|
| 1) | ரூ 8,000 செலவில் | ரூ 84,000 |
| 2) | ரூ 40,00 செலவில் | ரூ 100,000 |
| 3) | ரூ 7,000 வரவில் | ரூ 90,000 |
| 4) | ரூ 8,000 வரவில் | ரூ 90,000 |
| 5) | ரூ 7,000 செலவில் | ரூ 90,000 |

(..........)

11. உற்பத்தி விற்பனை வணிகநிறுவனம் ஒன்றின் 31.12.2011 ல் முடிந்த ஆண்டு செயற்பாட்டு தகவல்கள் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| நேர்க் கூலி | ரூ 50,000. | நேரில்கூலி | ரூ 70,000. |
| பொறிஉபகரண தேய்வு | ரூ 40,000 | விற்பனைகள் | ரூ 750,000 |
| குறைவேலை இருப்பில் ஏற்பட்டஅதிகரிப்பு | | ரூ 10,000 | |

முடிவுப்பொருளில் ஆரம்ப இருப்போ, இறுதி இருப்போ காணப்படவில்லை.
உற்பத்திபொருள் அனைத்தும் விற்பனையில் 20% இலாபம் வைத்து விற்கப்பட்டுள்ளது.

| | **31.12.2011ல் மொத்தஉற்பத்திக் கிரயம்** | **31.12.2011ல் மூலக் கிரயம்** |
|---|---|---|
| 1) | ரூ 610,000 | ரூ 480,000 |
| 2) | ரூ 500,000 | ரூ 600,000 |
| 3) | ரூ 610,000 | ரூ 700,000 |
| 4) | ரூ 600,000 | ரூ 500,000 |
| 5) | ரூ 610,000 | ரூ 600,000 |

(..........)

12. கழகமொன்றின் அங்கத்தவர் சந்தா தொடர்பான தகவல்கள் வருமாறு
1.1.2011 ல் வருமதி சந்தா ரூ 1,600, முற்பணச் சந்தா ரூ 600
கழகத்தில் வருடத்திற்கு ரூ 200 சந்தா செலுத்தும் 50 அங்கத்தவர்கள் உறுப்புரிமை பெற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்துவரும் ஒருவருடத்தில் செலுத்தப்படாமல் காணப்படும் சந்தா தொகையை பதிவழித்தல் வேண்டும்.

| | |
|---|---|
| 2010 ஆம் ஆண்டிற்காக பெறப்பட்ட சந்தாப் பணம் | ரூ 600 |
| 2011ஆம் ஆண்டிற்காக பெறப்பட்ட சந்தாப் பணம் | ரூ 7,400 |
| 2012 ஆம் ஆண்டிற்காக பெறப்பட்ட சந்தாப் பணம் | ரூ 1,200 |

| | 31.12.2011 ல் வருமானசெலவு கணக்கில் காட்டபடவேண்டிய தேறிய சந்தா வருமானம் | 31.12.2011 ல் ஐந்தொகையில் காட்டவேண்டிய வருமதி சந்தா |
|---|---|---|
| 1) | ரூ 10,000 | ரூ 2,000 |
| 2) | ரூ 9,000 | ரூ 2,000 |
| 3) | ரூ 10,000 | ரூ 1,000 |
| 4) | ரூ 9,000 | ரூ 1,000 |
| 5) | ரூ 10,000 | ரூ 3,000 |

(..........)

13. சாகுல் வியாபாரத்தின் 2011 டிசம்பர்மாதகாலதகவல்கள்.

| | 2011.12.01 | 2011.12.31 |
|---|---|---|
| வியாபாரகடன் கொடுத்தோர் | ரூ 25,000 | ரூ 73,000 |
| வியாபார இருப்புக்கள் | ரூ 50,000 | ரூ 70,000 |
| வியாபாரகடன் பட்டோர் | ரூ 24,000 | ரூ 40,000 |

டிசம்பர் மாதத்தில் கடன் கொடுத்தோருக்கு செலுத்திய காசுதொகை ரூபா 346,000, பெறப்பட்ட கழிவு ரூபா 6,000. 2011 டிசம்பர் மாதத்தில் அறவிடமுடியாத கடனாக பதிவழித்த தொகை ரூபா 10,000 ஆகும். விற்பனை விலையில் 20% இலாபத்துடன் விற்பனைகள் மேற்கொள்ளப்பட்டன.
மேற்கூறப்பட்டதகவல்களின் அடிப்படையில் எது பின்வருவனவற்றில் சரியானதொகுதி

| | 31.12.2011 ல் முடிந்தமாத விற்றபொருள் கிரயம் என்ன | டிசம்பர்மாதம் கடன்பட்டோரிடம் பெற்றகாசுத் தொகை |
|---|---|---|
| 1) | ரூ 320,000 | ரூ 390,000 |
| 2) | ரூ 360,000 | ரூ 374,000 |
| 3) | ரூ 344,000 | ரூ 384,000 |
| 4) | ரூ 384,000 | ரூ 400,000 |
| 5) | ரூ 380,000 | ரூ 449,000 |

(..........)

14. சுகுமார் தனது வணிகத்திற்கு தேவையான பண்டங்களை ஆதனாவிடம் இருந்து 10மூ விலைக் கழிவில் ரூ 270,000 பெறுமதியில் வாங்கியுள்ளார். ஆதனா தனது வருமதிகடனில் ஒருபகுதிக்காக கழிவுநீக்கி ரூபா 190,000 பணத்தை சுகுமாரிடம் இருந்து பெற்றுக்கொண்டார். காசுபெறுவனவின் பின்னர் ஆதனாவின் ஏட்டில் காணப்பட்ட சுகுமாரின் கடன் வருமதி ரூபா 70,000 ஆக இருந்தது.
மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் தொடர்பாக ஆதனாவின் ஏட்டில் சரியானதொகுதியாக அமைவது.

| | மூலஆவணங்கள் | காசுக் கழிவுவீதம் |
|---|---|---|
| 1) | கிரயபட்டியல், கைச்சாத்து | 5% |
| 2) | கிரயபட்டியல், பற்றுச்சீட்டு | 10% |
| 3) | கிரயபட்டியல், கைச்சாத்து | 10% |
| 4) | கிரயபட்டியல், பற்றுச்சீட்டு | 5% |
| 5) | கிரயபட்டியல், கைச்சாத்து | 20% |

(..........)

**15 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையினை கீறிட்ட இடத்தில் எழுதுக.**

15. விசி, வசி, சசி ஆகியோர் 5:3:2 என இலாபநட்டங்களை பங்கீடுசெய்யும் பங்காளர்கள் ஆவார். இப்பங்குடமையில் இருந்து சசி 01.01.2012 ல் இளைப்பாறினார். இவர் இளைப்பாறும்போது நன்மதிப்பு மூலதனக் கணக்கின் ஊடாக சீராக்கப்பட்ட பின்னர் ரூபா 220,000 ஐ காசாக எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டார்

| மூலதனகணக்குமீதி | 31.12.2011 ல் | 01.01.2012ல் |
|---|---|---|
| விசி | ரூ 600,000 | ரூ 595,000 |
| வசி | ரூ 400,000 | ரூ 385,000 |
| சசி | ரூ 200,000 | --- |

(i) நிறுவனத்தின் நன்மதிப்புபெறுமானம் யாது? ..........................................................

(ii) பங்காளர்களின் புதிய இலாபநட்டவிகிதம் என்ன? ..........................................................

16. வரையறுத்த கம்பனியினுடைய 01.04.2011 ல் உள்ள ஐந்தொகை மீதிகள்.

| | |
|---|---|
| @100/= கூறப்பட்ட சாதாரணபங்கு மூலதனம் | ரூ 5,000,000 |
| பொது ஒதுக்கம் | ரூ 300,000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிரப்படாத இலாபமீதி ரூ 500,0000

- 01.05.2011 ல் உரித்து வழங்கலாக பங்கொன்று ரூ 80 படி முழுமையாக பெறக்கூடியவாறு வழங்கியபோது முழுத்தொகையுமான ரூ 4,000,000 காசுபெறப்பட்டது
- 01.06.2011ல் 600,000 இலாபத்தைப் பயன் படுத்தி பங்கொன்று ரூ 60 படி உபகாரவழங்கல் மேற்கொள்ளப்பட்டது.

(i) நிதியாண்டின் முதல் காலாண்டின் இறுதியில் 30.06.2011ல் பங்குதாரரின் உரிமைத் தொகையாது? .......................................................

(ii) சாதாரண பங்கு ஒன்றின் நிறையிட்ட சராசரி பெறுமதி யாது? .......................................................

17. வணிகநிறுவனம் ஒன்றின் விற்பனைப்பொருள் M-1, M-2, M-3 தொடர்பானஆண்டிறுதித் தகவல்கள்.

| பொருள் தொகுதி | கொள்வனவுகள் அலகுகள் | விற்றவைகள் அலகுகள் | கொள்வனவு அலகுக்கிரயம் | அலகுஒன்றின் விற்பனை விலை | விற்பனைக்கு எதிர்பார்த்த அலகுசெலவு |
|---|---|---|---|---|---|
| M -1 | 12,000 | 9,000 | ரூ 20 | ரூ 32 | ரூ 2 |
| M -2 | 20,000 | 15,000 | ரூ 50 | ரூ 45 | ரூ 5 |
| M -3 | 8,000 | 6,000 | ரூ 100 | ரூ 130 | ரூ 10 |

"தொகுதி அடிப்படையில்" ஐந்தொகையில் வெளிப்படுத்தவேண்டிய இருப்பின் பெறுமதி ?
.......................................................

18. 31.3.2011 ல் வரிக்குபின்னுள்ள இலாபம் ரூபா 400,000 ஆகும்.

| | **31.03.2011** | **01.04.2010** |
|---|---|---|
| ஆதனம்,பொறி,உபகரணம் | 380,000 | 400,000 |
| வியாபாரகடன் பட்டோர் | 60,000 | 40,000 |
| வியாபாரகடன் கொடுத்தோர் | 30,000 | 70,000 |
| வியாபார இருப்பு | 40,000 | 80,000 |
| வருமானவரி பொறுப்பு | 15,000 | 10,000 |

- 31.3.2011 ல் முடிந்தஆண்டு வருமானவரித் தொகை ரூபா 80,000.

31.3.2011 ல் முடிந்த ஆண்டில் செயற்பாட்டு நடவடிக்கையினால் ஏற்பட்ட தேறிய காசு அதிகரிப்பு/குறைவு யாது? .......................................................

19. நிதிக் கூற்றின் மூலகங்கள் நான்கு குறிப்பிடுக?
....................................................... .......................................................
....................................................... .......................................................

20. A, B பங்காளர்கள் இலாபநட்டங்களை 2 : 1 என்ற விகிதப்படி பகிர்ந்து பங்குடைமையொன்றை இயக்கி வருகின்றனர். பங்குடமையின் நிதியாண்டு எப்போதும் 31 மார்ச் இல் முடிவடைகிறது. 01 ஏப்ரல் 2011 இல் அவர்களின் நடைமுறைக் கணக்கு மீதிகள் பின்வருமாறு இருந்தது

பங்காளர் A 24 000 செலவு மீதி

பங்காளர் B 12 000 வரவு மீதி

குறித்த தினத்தில் 31 மார்ச் 2011 இல் முடிந்த ஆண்டு சார்பாக பின்வரும் வழுக்கள் நிறுவன ஏடுகளில் கண்டுபிடிக்கப்பட்டன

- பங்காளர் A பற்றிய 9 000 கிரமான பண்டங்கள் தொடர்பாக எப்பதிவும் இடம்பெறவில்லை
- பங்காளர் B பங்குடமையின் கட்டிட வாடகை 18 000 ரூபாவை தனது பணத்தில் செலுத்தியிருந்தார் இது முழுமையாக பதிவுக்கு உட்படுத்தப்படவில்லை

தவறுகளை திருத்திய பின்னர் A, B என்போரின் நடைமுறைக் கணக்கு மீதிகள் எவ்வாறு இருக்கும் ?

A ....................................................... B .......................................................

21. நிறுவனமொன்றின் 31.3.2011 ல் முடிந்த ஆண்டு தகவல்கள்.

| | |
|---|---|
| சராசரி இருப்பு | ரூ. 80,000 |
| இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு | ரூ. 20,000 |
| மொத்தக் கொள்வனவுகள் | ரூ. 420,000 |
| மொத்த சொத்து | ரூ. 350,000 |

மொத்த இலாபவீதம் கொள்விலையில் கணிக்கப்பட்டது 40%

வருடத்தில் 365 நாட்கள் உள்ளது எனக் கொள்க.

சொத்துப் புரள்வு விகிதம் யாது? .......................................................

இருப்பு பேணும் காலம் எத்தனை? .......................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. பொதுக் கம்பனி ஒன்றின் 31.12.2011ல் உள்ள ஆதனம் பொறி உபகரணம் என்பவற்றின் கிரயம் ரூபா 600,000.

1.1.2011ல் உள்ள ஆதனம் பொறி உபகரணம் என்பவற்றின் தேய்வு ஏற்பாட்டு மீதி ரூபா 150,000

**1.7.2011 இல்**

ரூபா 300,000 கிரயமும் 01.01.2011 இல் 70 000 ஏற்பாடும் கொண்டிருந்த உபகரணம் ஒன்று ரூபா 200,000 பெறுமதியிட்டு வழங்கியும் காசு 200,000 செலுத்தியும் புதிய உபகரணம் வாங்கப்பட்டது. இதன்போது செலுத்தப்பட்ட காசுத்தொகை ஆதனம் பொறி உபகரணக் கணக்கில் வரவிடப் பட்டதைத்தவிர வேறு எப்பதிவும் இடம்பெறவில்லை. தேய்வு வருடாந்தம் 10% இலகு வழிமுறையில் தாக்கல் செய்யப்படும்

01) மேற்குறித்த நடவடிக்கை தொடர்பாக வருமானக் கூற்றில் செலவுத் தொகையாக சேர்க்கப்பட வேண்டிய பெறுமதியை கணிக்க ? ........................................................

02) மேற்குறிப்பிட்ட நடவடிக்கையின் பின்னர் 31.12.2011ல் பெறுமானத்.தேய்வு ஏற்பாட்டு மீதி யாது? ........................................................

23. சீலன், சிந்து, என்போர் இலாப நட்டங்களை சமனாக பங்கீடு செய்யும் பங்குடமை ஒன்றின் பங்காளராவர் அப்பங்குடமையில் 1.1.2011 ல் விமல் புதிய பங்காளராக இணைப்பதன் காரணமாக சீலன் தனது இலாப பங்கில் ½ பங்கையும், சிந்து தனது இலாப பங்கில் ¼ பங்கையும் விட்டுக் கொடுத்தனர், 31.12.2011 ல் முடிந்த ஆண்டு கிடைத்த தேறிய இலாபம் ரூபா 160,000 எனின் பங்காளர் மூவரதும் பங்கிடப்பட்ட இலாபத் தொகைய கணிக்க.

சீலன் ரூபா .................... சிந்து ரூபா ....................... விமல் ரூபா .......................

24. 31.3.2011 ல் முடிந்த ஆண்டுக்காக பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட மொத்த தொழிற்சாலைக் கிரயம் ரூபா 535,000 ஆகும்.

| | |
|---|---|
| மூலப்பொருள் கொள்வனவு | ரூபா 310,000 |
| நேர்க் கூலி | ரூபா 190,000 |
| மேந்தலைகள் | ரூபா 40,000 |

**ஆண்டில் இருப்பில் ஏற்பட்ட மாற்றம் பின்வருமாறு கணிக்கப்பட்டுள்ளது**

| | |
|---|---|
| மூலப்பொருள் அதிகரிப்பு | ரூபா 20,000 |
| குறைவேலைப்பொருள் குறைவு | ரூபா 15,000 |

**தொழிற்சாலைக் கிரய கணிப்பீட்டில் இடம்பெற்றுள்ள தவறுகள்**

மூலப்பொருள் ஆரம்ப இருப்பு ரூபா 10,000 ஆல் மிகை பெறுமானமிடப்பட்டுள்ளது.

மேற்பார்வையாளர் சம்பளம் ரூபா 50 000 நேர் கூலி செலவில் சேர்க்கப்பட்டள்ளது

01) திருத்தமான முதல் கிரயத்தைக் கணித்துக் கூறுக? ........................................................

02) தவறு திருத்தம் செய்யப்படின். மொத்த தொழிற்சாலை கிரயத்தில் ஏற்படக்கூடிய அதிகரிப்பு/குறைவு தொகை யாது? ........................................................


25. 31.3.2011 இல் கீழ்வரும் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் பொது கம்பனியின் நிறுத்திவைத்த இலாபம் ரூபா 300,000 ஆகும்.

- 2009/2010ம் ஆண்டில் கம்பனியின் காணி ரூ 60,000 பெறுமதியால் குறைத்து பெறுமானமிடப் பட்டிருந்த போதும், 2010/2011 ஆண்டு காலத்தில் அக்காணி ரூ 100,000 ஆல் மிகை பெறுமானமிடப்பட்டு சீராக்கம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.
- சாதாரண பங்குதாரருக்கு செலுத்தியுள்ள இடைக்கால தேறிய பங்கு இலாபத் தொகை ரூ 42,500 ஆகும் (பங்கு இலாப வரி 15%)
- ஒன்று ரூ 40 விலையுடைய 4 000 சாதாரண பங்குகள் பகிரப்படாத இலாபத்தை பயன் படுத்தி உபகார வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1.4.2010 ல் காணப்பட்ட கம்பனியின் நிறுத்திவைத்த இலாபம் ரூபா 110,000 எனின் 2010/2011 ம் ஆண்டிற்கான உழைத்த இலாபத்தைக் கணிப்பிடுக?

........................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுப் போட்டிகளை நடாத்துதல், இலவச இணைப்புகளை வழங்குதல், கண்காட்சிகளை நடாத்துதல்)

- மிகை நிரம்பலை ஏற்றுமதி செய்தல்.

13. **விலை ஆதரவுக்கொள்கை என்றால் என்ன?**

- குறைந்தபட்ச கட்டுப்பாட்டு விலைக்கொள்கையுடன் அரசாங்கம் விலை ஆதரவுக் கொள்கையையும் நடைமுறைப்படுத்துவதன் மூலம் உற்பத்தியாளருக்கஉயர்ந்த வருமானத்தை பெற்றுக் கொடுக்க முடியும். அதாவது இழிவு விலை காரணமாக மிகை நிரம்பல் ஏற்படும்போது மிகை நிரம்பலை அராசங்கம் இழிவு விலையில் கொள்வனவு செய்வதாக உத்தரவாதம் அளிப்பதனை இது குறிக்கும்.

- நடைமுறையில் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்காக அரசாங்கம் இத்தகைய விலை ஆதரவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம்.

14. குறைநிரப்பு கொடுப்பனவு முறை (Deficiency Payment System) என்றால் என்ன?
இழிவு விலையை அரசு விதிப்பதால் சந்தையில் மிகை நிரம்பல் ஏற்பட்டு பொருளின் விலை குறைவடையும் போது இழிவு விலைக்கும் உற்பத்தியாளர் பொருளை விற்பனை செய்த விலைக்கும் இடையிலான வித்தியாசத்தை அரசு உற்பத்தியாளருக்கு மானியமாக வழங்குதவன் மூலம் உற்பத்தியாளரின் வருமானத்தை அதிகரிக்கச் செய்யும் ஒரு முறை இதுவாகும்.

15. நிறுவனம் ஒன்றின் சமனிலை என்பதனால் கருதப்படுவது யாது?
நிறுவனம் ஒன்று உச்சலாபம் பெறுகின்ற நிலையினை அல்லது நட்டத்தினை இழிவுபடுத்தும் நிலையினை அதன் சமனிலை குறிக்கும்.

16. நிறுவன சமனிலையை விளக்கும் இருமுறைகள் யாவை?
1. எல்லை வருமானம் - எல்லைச் செலவு அணுகுமுறை
2. மொத்த வருமானம் - மொத்த செலவு அணுகுமுறை

17. பின்வருவனவற்றை விளக்குக.

(i) பூச்சிய பொருளாதார இலாபம்

- பொருளியல் மொத்த வருமானமும் மொத்த செலவும் சமனாக (TR=TC) காணப்படும் நிலை அல்லது சராசரி வருமானமும் சராசரிச்செலவும் சமனாக (AR=AC) காணப்படும நிலை.

- இங்கு மொத்த செலவு என்பதற்குள் வாடகை, கூலி, வட்டி, இலாபம் என்பன அடங்குகின்றன. இங்கு முயற்சியாண்மைக்குரிய குறைந்தபட்ச இலாபமும் மொத்த செலவினுள் உள்ளடங்குவதனாலேயே இது சாதாரண இலாபம் எனப்படுகின்றது.

- ஒரு நிறுவனம் தனது வளங்களை இன்றைய உபயோக மட்டத்தில் தொடர்ந்தும் வைத்திருப்பதற்குத் தேவையான வருமான மட்டத்தைப் பெறும் நிலையினை இது குறிக்கும்.

- ஒரு நிறுவனம் தொடர்ந்து இயங்குவதற்குத் தேவையான ஆகக்குறைந்தபட்ச வருமானத்தை பெறும் நிலையினை இது குறிக்கும்.

- உற்பத்திக் காரணிகள் தமது அமையச் செலவுக்குச் சமனான வருமானத்தைப் பெறும் நிலையினை இது குறிக்கும்.

(ii) பொருளாதார இலாபம்

- ஒரு நிறுவனத்தின் மொத்த வருமானத்தை விட மொத்த செலவானது குறைவாக காணப்படும் நிலை (TR >TC) அல்லது சராசரி வருமானத்தை விட சராசரி செலவானது குறைவாக காணப்படும் நிலை (AR>AC)

- ஒரு நிறுவனம் தொடர்ந்து இயங்குவதற்குத் தேவையான முயற்சியாண்மைக்குரிய குறைந்தபட்ச இலாபத்தை விட அதிக இலாபத்தை பெறும் நிலையினை இது குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உற்பத்திக் காரணிகள் தமது அமையச் செலவைவிட கூடியளவு வருமானத்தை பெறும் நிலையினை இது குறிக்கும்.

(iii) பொருளாதார நட்டம்
- ஒரு நிறுவனத்தின் மொத்த வருமானத்தை விட மொத்த செலவானது கூடுதலாக காணப்படும் நிலை (TR < TC) அல்லது சராசரி வருமானத்தை விட சராசரி செலவானது கூடுதலாக காணப்படும் நிலை (AR<AC)
- ஒரு நிறுவனம் தொடர்ந்து இயங்குவதற்குரிய முயற்சியாண்மைக்கான குறைந்தபட்ச இலாபத்தைக் கூட பெறமுடியாமல் இருப்பதனை இது குறிக்கும்.
- உற்பத்திக் காரணிகள் தமது அமையச் செலவைவிட குறைந்தளவு வருமானத்தை பெறும் நிலையினை இது குறிக்கும்.

18. சந்தை அல்லது தொழில் என்பதனால் கருதப்படுவது யாது?
சந்தை அமைப்பானது எப்பண்புகளை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்படுகின்றது?
சந்தை அல்லது தொழில் என்பது ஏதாவதொரு பண்டத்தை உற்பத்தி செய்கின்ற பல்வேறு நிறுவனங்களின் கூட்டுத்தொகையைக் குறிக்கும்.

நிறுவனங்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களும் சேவைகளும் பல்வேறு சந்தை நிலைமைகளின் கீழ் விநியோகிக்கப்படுகின்றன.

சந்தை அமைப்பானது பின்வரும் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப் படுகின்றது.
1. தொழிலிலுள்ள அல்லது சந்தையிலுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கையும் ஒரு நிறுவனத்தின் சந்தைப் பங்கும்.
2. உற்பத்தி செய்யப்படும் பொருட்களினதும் சேவைகளினதும் தன்மை.
3. பிரவேச சுதந்திரம் அல்லது பிரவேசத்தடைகள்.
4. போட்டியின் தன்மை (விலைப்போட்டியும் பொருள் வேறுபடுத்தலும்)

19. சந்தை அமைப்பின் பிரதான நான்கு வகைகளும் எவை?
1. நிறைபோட்டி சந்தை
2. தனியுரிமைச் சந்தை
3. தனியுரிமைப் போட்டி சந்தை
4. சிலருரிமைச் சந்தை

20. நிறைபோட்டி சந்தை என்றால் என்ன? இதன் பிரதான 04 எடுகோள்களும் யாவை?
ஒரே தன்மையான பொருள் உற்பத்தி செய்யப்படுவதுடன் பெருமளவு நிறுவனங்கள் காணப்படும் பிரவேச சுதந்திரம் கொண்ட சந்தை அமைப்பானது நிறைபோட்டிச் சந்தை எனப்படும்.
1. உற்பத்திகளுக்கிடையில் ஒத்த தன்மை காணப்படல்.
2. பெருமளவு கொள்வனவாளரும் பெருமளவு விற்பனையாளரும் காணப்படுதல்.
3. சந்தையில் பிரவேசிப்பதற்கோ சந்தையைவிட்டு வெளியேறுவதற்கோ தடைகள் இல்லாதிருத்தல்.
4. கொள்வனவாளருக்கும் விற்பனையாளருக்கும் சந்தை பற்றிய பூரண தகவல்களை செலவுகள் எதுவும் இன்றி பெறமுடிதல்.

21. நிறைபோட்டி சந்தை அமைப்பின் பிரதான இயல்புகள் யாவை?
அதிக எண்ணிக்கையான நிறுவனங்கள் / வழங்குனர் காணப்படுதல்
அதிக எண்ணிக்கையான நுகர்வோர் காணப்படுதல்
ஒரே தன்மையான பொருள் விற்பனை செய்யப்படல்
பிரவேச சுதந்திரம் காணப்படல்
சந்தை பற்றிய தகவல்களை செலவுகளின்றி பெறமுடிதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுத்தறிவுள்ள உற்பத்தியாளரும், நுகர்வோரும் காணப்படல்

பூரண காரணி அசைவு / பூரண சாதன நகர்வு காணப்படுதல்

22. நிறைபோட்டி நிறுவன கேள்விக்கோடானது எத்தகையது என்பதை விளக்குக.

நிறைபோட்டி சந்தையிலுள்ள ஒவ்வொரு நிறுவனமும் சந்தையில் கேள்வி, நிரம்பல் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படும் விலையினையே தமக்குரிய விற்பனை விலையாகக் கொள்ளும். எனவே சந்தை கேள்வி, சந்தை வழங்கல் என்பனவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் விலையே ஒரு நிறுவனத்திற்குரிய விலையாக இருக்கும். இவ்விலையினை இந் நிறுவனம் மாற்றியமைக்க முடியாது. சந்தை விலையில் மாற்றம் ஏற்பட்டால் மாத்திரமே குறித்த நிறுவனத்தின் விற்பனை விலை மாற்றமடையும்.

நிறைபோட்டியில் அதிகளவு நிறுவனங்கள், ஒரே தன்மையான பொருள், பகுத்தறிவுள்ள நுகர்வோர் காணப்படுவதனால் ஒரு நிறுவனம் தனது விற்பனை விலையினை சிறிதளவால் அதிகரித்தாலும் அதன் விற்பனைத்தொகை பூச்சியத்திற்கு வந்துவிடும். இதனால் எந்தவொரு நிறுவனமும் விலையினை அதிகரிக்கமாட்டாது. இதேபோல் ஏராளமான நுகர்வோர் காணப்படுவதனால் குறித்த விலையில் எவ்வளவு தொகையினையும் விற்பனை செய்யக்கூடியதாக இருப்பதனால் எந்த ஒரு பகுத்தறிவுள்ள உற்பத்தியாளனும் விலையினைக் குறைக்க விரும்பமாட்டான்.


இதனால், நிறைபோட்டி நிறுவனங்கள் சந்தை விலையினையே தமக்குரிய விற்பனை விலையாகக் கொள்ளுதல் வேண்டும். இதனால் நிறைபோட்டி நிறுவனமானது விலையை ஏற்போனாக (Price Taker) கருதப்படுகின்றது.

எனவேதான் நிறைபோட்டி நிறுவனம் ஒன்று எதிர்நோக்கும் கேள்விக்கோடு சிறப்பான தன்மை கொண்டதாக பூரண / முடிவிலி கேள்வி நெகிழ்ச்சியைக் கொண்டதாக கிடையச்சுக்கு சமாந்தரமானதாக காணப்படுகின்றது.

23. நிறைபோட்டி நிறுவனத்தின் எல்லை வருமானமானது சராசரி வருமானத்திற்கு சமனாக காணப்படுவதற்கான காரணத்தை விளக்குக.

நிறைபோட்டி சந்தையில் கேள்வி நிரம்பல்களினால் நிர்ணயிக்கப்படும் விலையே ஒரு நிறுவனத்தின் விற்பனை விலையாக கொள்ளப்படுவதனால் ஒரு நிறுவனத்தின் விற்பனை விலையானது நிறைபோட்டியில் கொடுக்கப்பட்டதாக அல்லது நிலையானதாக காணப்படுகின்றது. இதனால் நிறைபோட்டி நிறுவனத்தின் எல்லை வருமானமும், சராசரி வருமானமும் ஒன்றுக்கொன்று சமனாக இருக்கும். இதனால் நிறைபோட்டி நிறுவனத்தின் எல்லை வருமானக்கோடு, சராசரி வருமானக்கோடு, கேள்விக்கோடு யாவும் ஒன்றாகவே காணப்படும்.

| விற்பனை (அலகுகள்) | விலை (ருபா) | மொத்த வருமானம் | எல்லை வருமானம் | சராசரி வருமானம் |
|---|---|---|---|---|
| Q | P | TR | MR | AR |
| 1 | 10 | 10 | 10 | 10 |
| 2 | 10 | 20 | 10 | 10 |
| 3 | 10 | 30 | 10 | 10 |
| 4 | 10 | 40 | 10 | 10 |
| 5 | 10 | 50 | 10 | 10 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. நிறைபோட்டி நிறுவனம் நீண்டகாலத்தில் சாதாரண இலாபத்தை மட்டுமே உழைக்க முடியும் என்பதை ஏற்பீரா? காரணம் தருக.

நிறைபோட்டி நிறுவனம் ஒன்று குறுங்காலத்தில் சாதாரண இலாபம், அசாதாரண இலாபம், நட்டம் ஆகிய மூன்று நிலைகளை அடையலாம்.

இவ்வாறு குறுங்காலத்தில் மூன்று வகையான நிலைகளை அடைந்தாலும் நீண்டகாலத்தில் சாதாரண இலாபத்தினை மட்டுமே உழைக்க முடியும்.

அதாவது குறுங்காலத்தில் நிறைபோட்டி நிறுவனங்கள் அசாதாரண இலாபத்தினை உழைக்குமாயின் அந்த இலாபக் கவர்ச்சியினால் பிரவேச சுதந்திரம் காரணமாக புதிய நிறுவனங்கள் நீண்ட காலத்தில் சந்தையினுள் பிரவேசிக்கும். இதனால் சந்தை நிரம்பலானது அதிகரித்து பொருளின் விலை குறைவடைந்து நிறுவனங்களின் மொத்த வருமானம் குறைவடையும். இதனால் நிறுவனங்களின் அசாதாரண இலாப நிலமை நீங்கி சாதாரண இலாபத்தினை நீண்டகாலத்தில் அடையும். (நிறுவனங்களின் அசாதாரண இலாபநிலமை நீங்கும் வரை புதிய நிறுவனங்கள் சந்தையினுள் பிரவேசித்துக் கொண்டேயிருக்கும்).

மாறாக குறுங்காலத்தில் நிறைபோட்டி நிறுவனங்கள் நட்டத்தினை அடையுமாயின் நீண்ட காலத்தில் பல நிறுவனங்கள் (செயற்றிறனற்ற நிறுவனங்கள்) தொழிலை விட்டு வெளியேறும். இதனால் சந்தை நிரம்பலானது குறைவடைந்து பொருளின் விலை அதிகரித்து நிறுவனங்களின் மொத்த வருமானம் அதிகரிக்கும். இதனால் நிறுவனங்களின் நட்ட நிலமை நீங்கி சாதாரண இலாபத்தினை நீண்டகாலத்தில் அடையும். (நிறுவனங்களின் நட்டநிலமை நீங்கும் வரை சந்தையைவிட்டு அவை வெளியேறிக் கொண்டேயிருக்கும்)

25. தனியுரிமைச் சந்தை என்றால் என்ன? இதன் பிரதான பண்புகள் யாவை?

தொழில், நிறுவனம் என்ற இரண்டும் ஒன்றாக இருப்பதுடன் தொழிலில் பிரவேசிப்பதற்கு தடைகள் காணப்படும் சந்தை தனியுரிமைச் சந்தை எனப்படும்.

- குறித்த தொழிலில் ஒரேயொரு நிறுவனம் மட்டும் காணப்படும்.
- உற்பத்திப் பொருளானது மிகவும் சிறப்புத் தன்மை வாய்ந்ததாக காணப்படும். (இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருளுக்கு நெருங்கிய பிரதியீடுகள் காணப்படமாட்டாது. இதனால் இப்பொருளுக்கான குறுக்கு கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் மிகவும் குறைவாக / பூச்சியமாக காணப்படும்)
- பிரவேச தடைகள் நிலவுதல் அல்லது பிரவேச சுதந்திரம் இல்லை.
- சந்தைத் தகவல்கள் பூரணமற்றதாகக் காணப்படுதலும் செலவுகளின்றி தகவல்களை பெறமுடியாதிருத்தலும்.

26. தனியுரிமை நிறுவனத்தின் கேள்விக்கோடு எத்தகையது என்பதை விளக்குக.

தனியுரிமைச் சந்தையில் குறிப்பிட்ட தொழிலில் ஒரேயொரு நிறுவனம் மாத்திரம் காணப்படுவதனால் அது விற்பனை விலையிலும் விற்பனைத் தொகையிலும் செல்வாக்கு செலுத்த முடியும். எனினும் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் விற்பனை விலையில் அல்லது விற்பனைத் தொகையில் மாத்திரமே செல்வாக்குச் செலுத்த முடியும். இரண்டிலும் ஒரே நேரத்தில் செல்வாக்குச் செலுத்த முடியாது. அதாவது விற்பனைத் தொகையை அதிகரிக்க விரும்பினால் விலையை குறைக்க வேண்டும். விலையை அதிகரித்தால் விற்பனைத் தொகை குறைவடையும். எனவேதான் தனியுரிமை நிறுவனம் எதிர்நோக்கும் கேள்விக்கோடு சாதாரண கேள்விக் கோட்டைப்போன்று மேலிருந்து கீழாக இடமிருந்து வலமாகச் சரிந்து செல்வதாக காணப்படும்.

27. தனியுரிமையில் எல்லை வருமானத்திற்கும் சராசரி வருமானத்திற்கும் இடையிலான தொடர்பினை விளக்குக.

தனியுரிமையாளன் தனது உற்பத்தி பொருளில் ஒரு அலகினை மேலதிகமாக விற்பனை செய்வதற்கு விலையினை குறைக்க வேண்டியிருப்பதனால் தனியுரிமையில் விலையினை விட / சராசரி வருமானத்தை விட எல்லை வருமானமானது குறைவாக காணப்படுகின்றது. எனவேதான் எல்லை வருமானக் கோடானது சராசரி வருமானக் கோட்டுக்கு கீழாக காணப்படுகின்றது.

28. தனியுரிமைப்போட்டி சந்தை என்றால் என்ன? இதன் பிரதான இயல்புகள் யாவை?

நிறைப்போட்டியினதும் தனியுரிமையினதும் பண்புகளைக் கொண்ட ஒரு சந்தையமைப்பு தனியுரிமைப் போட்டி சந்தையாகும். இச்சந்தையமைப்பு நடைமுறை உலகிற்கு பொருத்தமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று ஆகும்.

- சந்தையில் அதிக எண்ணிக்கையான நிறுவனங்கள் அல்லது வழங்குனர்கள் காணப்படுதல்.
- ஒவ்வொரு நிறுவனமும் உற்பத்தி செய்யும் பொருட்கள் வேறாக்கம் செய்யப்பட்டிருத்தல்.
- சந்தையில் புதிய நிறுவ்னங்கள் நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் தடைகள் இல்லாதிருத்தல்.
- பூரண பிரதியீடு அல்லாத நெருங்கிய பிரதியீட்டுப் பொருட்கள் இங்கு உற்பத்தி செய்யப்படும்.
- நிறுவனம் விலையினை அமைப்போனாக காணப்படும்.

29. பொருள் வேறுபடுத்தல் என்றால் என்ன?

தனியுரிமைப்போட்டிச் சந்தையில் காணப்படும் மிக விசேட பண்பு பொருள் வேறுபடுத்தல் ஆகும். ஒவ்வொரு நிறுவனமும் தாம் உற்பத்தி செய்யும் பொருளை மற்றைய நிறுவனத்தின் பொருளிலிருந்து வேறுபடுத்த முயற்சிக்கும். ஒவ்வொரு நிறுவனமும் உற்பத்தி செய்யும் பொருட்கள் நெருங்கிய பதிலீடுகளாக இருந்தபோதிலும் பொருள் வேறுபடுத்தல் காரணமாக அவை பூரண பதிலீடுகளாக அமைவதில்லை. பொருள் வேறுபடுத்தலால் ஒவ்வொரு நிறுவனமும் மற்ற நிறுவனத்துடன் போட்டியிடக்கூடிய ஆற்றல் அதிகரிக்கும்.

பொருள் வேறுபடுத்தல் மேற்கொள்ளும் நிறுவனங்கள் ஒன்றுடனொன்று போட்டியிடும் ஆற்றல் பின்வரும் காரணிகளில் தங்கியிருக்கும்.

1. பொருளின் தரம்
2. பொருளின் விலை
3. சந்தைப்படுத்தல்

30. தனியுரிமை போட்டி நிறுவனத்தின் நீண்டகால சமனிலையினை விளக்குக.

தனியுரிமைப் போட்டி சந்தையில் விரவேச சுதந்திரம் காணப்படுவதனால் குறுங்காலத்தில் அசாதாரண இலாபத்தை உழைத்தால் அவ்விலாபக் கவர்ச்சி காரணமாக புதிய நிறுவனங்கள் சந்தையினுள் பிரவேசித்து அசாதாரண இலாப நிலமை நீங்கி சாதாரண இலாபத்தை நீண்ட காலத்தில் அவை அடையும். இதேபோல் குறுங்காலத்தில் இந்நிறுவனங்கள் நட்டத்தை அடையுமாயின் அதில் வினைத்திறனற்ற நிறுவனங்கள் நீண்ட காலம் ஆகுமுன் சந்தையை விட்டு வெளியேறும் இதனால் நிறுவனங்களின் நட்டநிலமை நீங்கி சாதாரண இலாபத்தை அவை நீண்டகாலத்தில் அடையும்.

எனவே தனியுரிமைப் போட்டி நிறுவனங்கள் குறுங்காலத்தில் சாதாரண இலாபம், அசாதாரண இலாபம், நட்டம் ஆகியவற்றை அடைந்தாலும் நீண்டகாலத்தில் சாதாரண இலாபத்தை மட்டுமே அடைய முடியும்.

கண்டியில் நடைபெறுகிறது...
On Progress in Kandy...
தொடர்புகளுக்கு
071 94 94 227
Account : Business Studies
I L A SALAM : B BANUCHANDAR
A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




H.M.M. பாக்கீர்
B.A(SL) Econ
மட்டு அம்பாறை பிரபல ஆசிரியர்

## The MCQ Quiz Bank

**உங்களுடைய பயிற்சிக்காக 25 பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கிய வினாப்பத்திரம் தரப்பட்டுள்ளது. முதலில் நீங்கள் அதற்கான விடையைக் குறித்துக்கொண்டு பின்னர் தரப்பட்டுள்ள விடையுடன் ஒப்பிட்டு உமது விடையிலிருந்து வேறுபடுமானால் அதுதொடர்பான விடயத்தை மீண்டும் மீண்டும் ஆராய்ந்து தெளிவு பெற்றுக்கொள்ளுக.**

1. அரசின் உத்தரவாத விலைத்திட்ட உதவிக்கொள்கைகொண்ட பொருளின் சந்தைத் தகவல்கள் வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளன. மிகை நிரம்பல் இருந்தால் அது அரசால் கொள்வனவு செய்யப்படும்.




தகவல்களின் படி அரசு பொறுத்துக்கொள்ளும் கிரயத்தொகை

i. ரூபா 400
ii. ரூபா 1600
iii. ரூபா 1000
iv. ரூபா 1400
v. ரூபா 4000

2. சந்தையில் விற்பனையாகும் x என்னும் பொருளில் விலைக் கேள்வி நெகிழ்ச்சி

(i) மீன் (ii) சன்லைட் (iii) பழவகை (iv) காய்கறி (v) அரிசி

3. ஒரு உற்பத்தி நிறுவனத்தில் மொத்தக் கிரயம் ரூபா 10000 ஆகும் சராசரி நிலையான கிரயம் ரூபா 1.75 ஆகும். மொத்த வருமானம் ரூபா 14400. நிறுவனத்தின் ஆக்கவெளியீட்டுமட்டம் அலகுகள் 800 எனில் உற்பத்தி மிகை

(i) ரூபா 5800 (ii) ரூபா 9600 (iii) ரூபா 4400 (iv) ரூபா 11400 (v) ரூபா 13000

4. x, y, z என்னும் பொருள்கள் தொடர்பாக ஒரு நுகர்வோனுடைய கேள்வி நிலைமை பின்வருமாறு இருந்தது.

| வருமான மட்டம் | xபொருளுக்கான கேள்வி | yபொருளுக்கான கேள்வி | zபொருளுக்கான கேள்வி |
|---|---|---|---|
| 1 | 100 | 200 | 100 |
| 2 | 140 | 240 | 90 |

முதலாவது வருமான மட்டத்துடன் ஒப்பிடும்போது இரண்டாவது வருமான மட்டத்தில் 20% அதிகரித்தது அதன்படி முறையே இழப்பப்பண்டமும் ஆடம்பரப்பண்டமும் எவையாகும்.

(i) y உம் x உம் (ii) x உம் z உம் (iii) x உம் y உம் (iv) y உம் z உம்
(v) z உம் x உம்

5. பொருளின் விலையின் மாற்றத்துக்கு ஏற்ப கணிக்கப்பட்ட பொருளின் கேள்வி நெகிழ்ச்சி -0.75 ஆக இருந்தது. பொருளின் கேள்வி நெகிழ்ச்சி -0.9 ஆகும். பொருள் வகை தொடர்பாக எடுக்கக் கூடிய சரியான தீர்மானம்


i. Aபொருளின் விலை கேள்வி நெகிழ்ச்சியுடையது B பொருளின் விலை கேள்வி நெகிழ்ச்சியற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. Aபொருள் Bபொருளை விட தனியுரிமைச் சக்தி கூடியது
iii. Aபொருள் Bபொருளுடன் ஒப்பிடும்போது இழப்புப் பண்டமாகும்
iv. Aபொருளுக்குச் சந்தையில் உயர்வான தனியுரிமைப் பலம் உண்டு
v Cபொருருளின் விலை கேள்வி நெகிழ்ச்சியற்றது.

6. நிறைபோட்டிச் சந்தையில் செயலாற்றும் ஒரு நிறுவனத்தின் குறுங்கால நடத்தையை வரிப்படம் காட்டுகிறது.

வரைபடத்துக்குப் பொருத்தமான கூற்றைத் தெரிவு செய்க




i. நிறுவனத்தில் நிலவும் இரு உற்பத்தி மட்டங்களும் பேணக்கூடிய உற்பத்தி மட்டங்களல்ல
ii. அலகு விலை ரூபா P1 ல் கட்டாயமாக நிறுவனம் மூடிவிடப்பட வேண்டும்
iii. உற்பத்தி மட்டம் அலகு Q2 பொருளாதார இலாபம் உழைக்கக்கூடிய உற்பத்தி மட்டமாகும்
iv. விலை எல்லைக்கிரயத்தைக் கடந்து செல்வதால் உற்பத்தியில் ஈடுபடுதல் அனுகூலமாகும்
v. பொருளாதார இலாபம் இல்லாத போதும் Q2 உற்பத்தியைப் பேணக்கூடிய உற்பத்தி மட்டமாகும்

7. ஒரு குடித்தனத்தின் மாதாந்த வருமானம் ரூபா 30000த்தில் இருந்து ரூபா 50000 வரை அதிகரிக்கும்போது x என்னும் பொருளுக்கு கேள்வி அலகு 20திலிருந்து 25 வரை அதிகரிக்கிறது அதன்படி x பொருள்
i. அத்தியாவசியப் பொருளாகும்
ii. ஆடம்பரப்பொருளாகும்
iii. இழப்பப் பொருளாகும்
iv. பதிலீட்டுப் பொருளாகும்
v. நிரப்பிப் பொருளாகும்

8. தவறான கூற்றைத் தெரிவு செய்க
i. நிறுவனத்தின் மொத்த விளைதிறன் உச்சமாகும்போது எல்லை விளைதிறன் பூச்சியமாகும்
ii. எல்லை விளைதிறன் கோடு சராசரி விளைதிறன் கோட்டில் உச்சமான. புள்ளியை வெட்டி கீழிறங்கும்
iii. நீண்டகாலத்தில் ஆரம்பத்தில் நிலையான கிரயம் அதிகரிக்கும் வேகத்தை விட வெளியீடு அதிகரிப்பதால் விளைதிறன் உயர்வடையும்
iv. நிறைபோட்டியில் நிறுவனத்தின் மொத்த வருமானக்கோடு நேர்கோடாகும்
v. குறுங்காலச் சராசரி நிலையான கிரயக்கோடு வெளியீட்டின் அதிகரிப்புடன் படிப்படியாகக் கீழிறங்கும்.

9. x பொருளின் விலை ரூபா 12ல் கேள்வியின் அளவு அலகுகள் 4000ஆகும். மேலும் x பொருளின் விலை கேள்வி நெகிழ்ச்சி அலகு நெகிழ்ச்சியாகும். கேட்கப்படும் அளவு அலகுகள் 6000 ஆக இருந்தெனில் விலை என்னவாகும்?

(i) ரூபா 4 (ii) ரூபா 20 (iii) ரூபா 06 (iv) ரூபா 08 (v) ரூபா 48

10. நிறைபோட்டியில் நிறுவனம் குறுங்காலத்தில் செய்யும் கிரயங்களில் ஆழ்ந்த (உள்ளடங்கிய) கிரயமாகக் கருதப்படுவது
i. மூலப்பொருள்களுக்காகச் செய்யப்பட்ட கிரயம்
ii. ஊழியர்களுக்குச் சம்பளக்கொடுப்பனவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்ய ஏற்பட்ட கிரயம்
iv. போக்குவரத்துக் கட்டணம்
v. பொதியிடல் கிரயம்

11. பின்வருவனவற்றுள் நேர் கிரயத்துக்கும நேரில் கிரயத்துக்கும் உரிய உருப்படிகள் எதுவாகும்
A மின்கட்டணம் C தேய்வு E இழக்கப்பட்ட சம்பள வருமானம்
B மின் பட்டியல் D இழக்கப்பட்ட வட்டி வருமானம்
(i) AC யும் CDE யும் (ii) BC யும் ADE யும் (iii) ABC யும் DE யும்
(iv) AB யும் CDE யும் (v) AD யும் BCE யும்

12. நீண்டகாலத்தில் அளவுத்திட்ட விளைவு உருவாதல் தொடர்பில் செல்வாக்குடைய பிரதான காரணி
i. சந்தைக் கேள்வி
ii. பேரளவு உற்பத்திச் சிக்கனம்
iii. ஊழியர்களுடைய மனப்பாங்கு
iv. முயற்சியாண்மை மனப்பாங்கு
v. இயலுமைப் பயன்பாடு உயர்வடைதல்

13. நிறைபோட்டியில் நிறுவனத்துக்குரியதாகாத கூற்று
i. சந்தையில் தீர்மானிக்கப்பட்டுள்ள விலையின் கீழ் செயல்பட நேரிடல்
ii. நிறுவனத்தின் வழங்கல் விலை நடத்தைக்குரிய அளவுக்கு பலமில்லாமை
iii. நிச்சயிக்கப்பட்டுள்ள விலையின்கீழ் வரையறையில்லா நிரம்பலைச்செய்ய முடிதல்
iv. நிறுவனத்தின் கேள்விக்கோடு பூரண நெகிழ்ச்சியுடையதாகல்
v. நிச்சயிக்கப்பட்ட வலையின் கீழ் சில நிறுவனங்கள் சந்தையில் இருந்து அகல முடியும்

14. மொத்த நிலையான கிரயம் உள்ளடங்காத கிரய உள்ளடக்கம்
i. ஆதன வரி ii. ஆளுநிதிக் கட்டணம் iii. மூலப்பொருள்கிரயம்
iv. காப்புறுதித் தவணைக்கட்டணம் v. உத்தரவுப் பத்திரக் கட்டணம்

15. முதலீடு சேமிப்புத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது மிக முக்கியமானது
i. பெயரளவு வட்டி விகிதம் ii. சேமிப்பு வட்டி விகிதம்
iii. மெய் வட்டி விகிதம் iv. சந்தை வட்டி விகிதம்
v. வருடாந்த வட்டி விகிதம்

16. குறித்த உற்பத்தி நிறுவனத்தில் கேள்விக்கோடு அந்த நிறுவனம் உற்பத்தி செய்யும பொருள்களின் சந்தைக்கேள்விக் கோட்டுக்குச் சமானமாகும் எனில்
i. நிறுவனத்திற்குச் சந்தைவிலையில் பெரும் தாக்கம் விளைவிக்க முடியும்
ii. விலையை உயர்த்துவதால் நுகர்வோரில் பெருந்தொகையினர் பதீலீடுகளை நோக்கிவிடுவர்
iii. விலையை மாற்றுவதால் நிறுவனத்திற்கு நட்டம் ஏற்படும்
iv. விலையை மாற்றும ஆற்றல் நிறுவனத்திற்குக் சிறிதளவேனும் இல்லை
v. அத்தகைய நிறுவனத்தின் நிரம்பல் எப்பொழுதும் தளம்பலுக்குள்ளாகும்

17. நிறைபோட்டியில் தடையற்ற பிரவேசத்துக்கும் வெளியேறலுக்கும் உதவும் காரணி
i. நிறுவன எண்ணிக்கை அதிகமாக இருத்தல்
ii. தொழில் நுட்பத்தில் காணப்படும் நெகிழ்வற்ற தன்மை
iii. நிறுவனத்தின் இயலுமை உயர்வான மட்டத்தல் காணப்படுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. நிறுவன எண்ணிக்கை குறைவாக இருத்தல்
v. மூலதன முதலீடு சிறியதாக இருத்தல்

18. தனியுரிமைப் போட்டியில் நிறுவனத்தின் கேள்விக்கோடு இடமிருந்து வலம் கீழ்நோக்கிச் சரிந்து செல்லுவதற்கான காரணம்
i. நிறுவனங்கள் பெரும் எண்ணிக்கையாக இருந்தல்
ii. உற்பத்திகளுக்கிடையில் வேறுபாடு காணப்படுதல்
iii. எல்லா நிறுவனங்களும குறிப்பிடத்தக்க அளவில் சந்தைப்பாகத்தை உரிமையாக்கியிருத்தல்
iv. நிறுவனத்திற்கே உரியதான நுகர்ரோர் நாட்டம் உரித்தாக இருத்தல்
v. நிறுவனங்கள் ஒவ்வொன்றும் சுயாதீனமாகக் கருமமாற்றுதல்

19. இலங்கையில் செயல்படும சிலருரிமைச் சந்தைக் கட்டமைப்புக்கு உதாரமான தொகுதி
i. ரூபவாஹினி, போசனசாலைகள், மின்வழங்கல்
ii. சீமெந்து, மின்வழங்கல், தேசிய பத்திரிகைகள்
iii. தொலைபேசிச் சேவை வழங்கல் நிறுவனங்கள், போசனசாலைகள், வணிக வங்கிகள்
iv. தேசிய பத்திரிகைகள், சீமெந்து, ரூபாவாஹினி அலைவரிசைகள்
v. வணிக வங்கிகள், மின்வழங்கல், சீமெந்து

20. உற்பத்தி நிறுவனத்தின் நிரம்பல் கோடு $Qs=-a+bp$ வடிவம் பெறுகிறது

| | நெகிழ்ச்சி | நெகிழ்ச்சிக் குணகம் |
|---|---|---|
| i. | நெகிழ்ச்சியுடையது | மேலே செல்லச் செல்ல பெறுமானம் அதிகரிக்கும் |
| ii. | நெகிழ்வற்றது | மேலே செல்லச் செல்ல பெறுமானம் குறையும் |
| iii. | நெகிழ்வுடையது | மேலே செல்லச்செல்ல பெறுமானம் குறையும் |
| iv. | நெகிழ்வற்றது | மேலே செல்லச் செல்ல் பெறுமானம் அதிகரிக்கும் |
| v. | நெகிழ்வற்றது | பெறுமானம் எல்லாப் புள்ளிகளிலும் சமானமாகும் |


21. போட்டிச் சந்தையில் சமநிலை உற்பததி அளவு அலகுகள் 100இல் நிலையான கிரயம் ரூபா 400 ஆகும். மேலும் அந்த உற்பத்தி மட்டத்தில் உற்பததி மிகை ரூபா 300 ஆகும். மொத்தக் கிரயம் ரூபா 1000 ஆகும். சந்தையில் அலகொன்றுக்கு நிச்சயிக்கப்பட் விலை
(i) ரூபா 10 (ii) ரூபா 06 (iii) ரூபா 09 (iv) ரூபா 07 (v) ரூபா 14

22. ஒரு உற்பத்திக் காரணி நிகழ்காலப் பாவனையில் பொருளாதார வாடகையை உழைக்குமெனில் அதன்மாற்றல் உழைப்பு
i. பொருளாதார வாடகைக்குச் சமானமாகும்
ii. பொருளாதார வாடகையைத் தாண்டிச் செல்லும்
iii. நிகழ்காலப் பாவனையில் சந்தர்ப்பக்கிரயத்துக்குச் சமானமாகும்
iv. பூச்சியமாகும்
v. பொருளாதார வாடகையை விட சிறிது அதிகமாகும்

23. நிறுவனத்தின் வெளியீடு சராசரிக்கிரயக் கோட்டுக்கு உரிய வெளியீட்டு மட்டத்தை விட சிறிய அளவில் குறைவடைந்தால்
i. சராசரி மொத்தக் கிரயம் அதிகரித்து மாறும் கிரயம் நிலையாக இருக்கும்
ii. சராசரி மாறும் கிரயம் குறைவடைந்து சராசரிக்கிரயம் மாறாமல் இருக்கும்
iii. சராசரி மொத்தக்கிரயமும் சராசரி நிலையான கிரயமும் ஆகிய இரண்டு பகுதிகளும் அதிகரிக்கும்
iv. சராசரி மொத்தக் கிரயம் அதிகரித்து சராசரி மாறும் கிரயம் குறைவடையும்
v. சராசரிக் கிரயம் சராசரி மாறும் கிரயம் என்னும் இரண்டும் குறையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. பின்வரும் வரிப்படத்தில் ஒரு பொருளின் நிரம்பல் கோடு காட்டப்பட்டுள்ளது




T புள்ளியில் நிரம்பல் நெகிழ்ச்சி

25. சுத்திகரிக்கப்படும மசகு எண்ணெயின் அளவுடன் கனிய நெய்க் கூட்டுத்தாபனம் இடை உற்பததயாக தாரையும் உற்பத்தி செய்கிறது. சந்தையில் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் விலை உயர்வடையுமானால்

- i. கனிய எண்ணெய் நிரம்பல வரைபு இடப்புறம் பெயரும்
- ii. தார் நிரம்பல் கோடு வலப்புறம் பெயரும்
- iii. கனிய நெய் நிரம்பல வரைபு வலப்புறம் பெயரும்
- iv. தார் நிரம்பல் வரைபு இடப்புறம் பெயரும்
- v. மேலுள்ள எதுவும் நிகழாது

**அறிவுத் தேடல் இதழ் 18ற்கான மட்டு அம்பாறை பிரபல ஆசிரியர் H.M.M. பாக்கீர் அவர்களின் MCQ தொகுப்பின் விடைகள்**

| விடை | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. (iv) | 2. (ii) | 3. (i) | 4. (v) | 5. (iv) | 6. (v) | 7. (i) | 8. (iii) | 9. (iv) | 10. (iii) |
| 11. (iii) | 12. (ii) | 13. (iii) | 14. (iii) | 15. (iii) | 16. (i) | 17. (v) | 18. (i) | 19. (iv) | 20. (iii) |
| 21. (iii) | 22. (iii) | 23. (iv) | 24. (iv) | 25. (iv) | | | | | |

## Current Affairs Cafe

**இலங்கை அரசு லக்ஸம்பெர்க் அரசுடன் ஒரு ஒப்பந்தம்.**

வருமான மற்றும் மூலதனம் தொடர்பாக இருபக்க வரி விலக்கு ஒப்பந்தமொன்றில் இலங்கை அரசு மற்றும் லக்ஸம்பெர்க் ஆகிய அரசுகள் இணைந்துள்ளன. இவ் ஒப்பந்தத்தினூடாக வெளிநாட்டு முதலீட்டினை உயர்த்துவதே இதன் நோக்கமாகும். மேலும் இதன் மூலம் அன்னிய செலாவணி வருவாயை உழைப்பதும் மற்றுமொரு நோக்கமாகும்.

லக்ஸம்பெர்க் நாடானது 2586 சதுர கிலோமீற்றர் பரப்புடைய ஒரு நாடாகும். இந் நாடானது ஜெர்மன், பெல்ஜியம், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கிடையில் காணப்படும் ஒரு நாடாகும். இந்நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி 55 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இந்நாட்டின் தலா வருமானம் 108,831 அமெரிக்க டொலர்களாகும். எமது நாட்டை விட சனத்தொகை குறைந்த ஒரு நாட்டின் எமது நாட்டை விட அதிகரித்த வருமானத்தை பெறுதல் வியப்புக்குரிய காரணியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப்பணியில் கரம் கொடுத்து வரமளிக்கும்

# Imperial College

ImperialCollege
NURTURING TOMORROW'S LEADERS
www.icbsgroup.com

**2011ம் ஆண்டு அதி சிறந்த சித்திகளைப்பெற்ற உயர்தர மாணவர்களுக்கு விஷேட புலமைப்பரிசில்கள்...**

CIMA உலகத்தரம் வாய்ந்த கற்கை நெறியைப் பற்றி இன்று கிராம, நகரம் என அனைத்து மக்களும் அறிந்துள்ளனர். தொழிற்துறைக்கு சரியான, பொருத்தமான மனிதவளங்களை வழங்குவதில் ஊஜஆயு கற்கை நெறி தனித்துவம் பெற்றுள்ளது.

CIMA கற்கை நெறியை பயில பொருத்தமான கல்வி ஸ்தாபனம் எது என்ற கேள்வி மாணவர் மத்தியில் எழுவது நியாயமே. இதற்கான முடிவை மேற்கொள்ளும் போது இங்கு பல காரணிகள் தாக்கம் செலுத்துகின்றது. வெறுமனே அதிக மாணவர் எண்ணிக்கையை கொண்ட கல்வி நிலையத்தை தெரிவு செய்து விட்டு **"எல்லோரும் அங்க படிக்கிறாங்க நானும் அங்க போறேன்"** இங்கு அதிக மாணவர் என்பதை தாண்டி ஒவ்வொரு மாணவரையும் தனித்தனியாக கவனித்து, தமது சந்தேகங்களை தீர்த்து, மாணவர்களின் தொழில்சார் அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள, தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துகின்ற உலகதரம் வாய்ந்த நிறுவனமாக Imperial College மாத்திரமே காணப்படுகின்றது. உலகலாவியரீதியில் விரிவுரை அனுபவங்களை கொண்ட **இரா. பிரவீந்த், ச. சிவபாஸ்கரன் மற்றும் சி. மயூரன்** ஆகியோரை உள்ளடக்கிய மிகத் தரம் வாய்ந்த விரிவுரையாளர் குழாமை கொண்ட ஒரே நிறுவனம் Imperial College கல்லூரியே. இவர்கள் இந்தியா, பங்களாதேஷ், ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளில் தற்போது விரிவுரைகளை நடாத்துகின்றனர்.

வெறுமனே ஊஜஆயு வகுப்புக்களை நடாத்துவதை தவிர பல்வேறு சமூக நலனோம்பு நடவடிக்கைகளை Imperial College மேற்கொண்டு வருகின்றது. தமிழ், ஆங்கில, சிங்கள மொழி மூலமான க.பொ.த உயர்தரம், சாதாரண தரம் பயிலுகின்ற மாணவருக்கு பல்வேறு கல்விக் கருத்தரங்குகளை நடாத்துவதற்கான பிரதான அனுசரனையை வழங்கியுள்ளது. அறிவுத்தேடலோ கண்டி மாநகரில் இடம்பெற்ற பொருளியல் கணக்கீடு பாடங்களுக்கான கருத்தரங்கில் தமது பூரண ஒத்துழைப்பை நல்கியது. கல்விப் பணியில் இத்தகைய பல சாதனைகளை மேற்கொண்டு CIMA கற்கை நெறியையும் மிகத் தரமாய் வழங்கும் ஒரே நிறுவனம் Imperial College மட்டுமே.

**தொடர்புகளுக்கு : 011 4515253 / 077 3918777 / 077 2376060**


## Current Affairs Cafe

- by Editor -

| நாடு | 1950 | 2000 | 2010 |
|---|---|---|---|
| இலங்கை | 89 | 810 | 2,400 |
| ஜப்பான் | 90 | 32,000 | 42,820 |
| சிங்கப்பூர் | 30 | 25,000 | 43,867 |
| (தலா வருமானம் அமெரிக்கா டொலரில்) | | | |

எமக்கு பின் தலா வருமானத்திலிருந்த நாடுகள் கூட எம் புறந்தள்ளவிட்டு முன்னோக்கி முன்னேறி செல்கின்றன நாம் ................ இலங்கை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிரேஷ்ட்ட விரிவுரையாளர்
அனில் பெர்னாந்து
கணக்கீட்டு பிரிவு
முகாமைத்துவ நிதிப்பீடம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

சிரேஷ்ட்ட விரிவுரையாளர்
தயானந்த அம்பலாங்கொடகே
கணக்கீட்டு பிரிவு
முகாமைத்துவ நிதிப்பீடம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்



# கணக்கீடு

**1. உயர்தரத்தில் கணக்கீட்டில் தற்போது சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு பாடசாலைகளுக்கு தெரியப்படுத்தப்படுகின்றன. 2012ம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் பாடத்திட்ட சீர்த்திருத்தங்கள் கருத்திற் கொள்ள வேண்டுமா?**

பாடத்திட்டத்தில் சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பது தேசிய கல்வி நிறுவகத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி அனைத்து பாடசாலைகளுக்கும் தெரியப் படுத்தப்பட்டுள்ளது. ஆகவே பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள சீர்த்திருத்தம் தொடர்பான விளக்கம் கையேடுகளில் இது தொடர்பாக தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**2. நிறுவனத்திற்கு காசோலையொன்று கிடைக்கும்போது அதனை எவ்வாறு பதிவு செய்தல் வேண்டும்? நிறுவனத்திற்கு காசோலை ஏதேனும் காரணமொன்றிற்காக வங்கியில் வைப்பு செய்ய தாமதமாகுமெனில் பின்பற்ற வேண்டிய நடைமுறை யாது?**

இவ்வினாவிற்கு இரு அடிப்படைகளில் விடையளிக்க முடியும். முதலில் நிதி முகாமைத்துவத்தின் அடிப்படையில் ஒரு காசோலை நிறுவனத்திற்கு கிடைத்தவுடனேயே அதனை வைப்பு செய்தல் வேண்டும். இதற்கான காரணம் அக்காசோலை உடனடியாக தேற வேண்டுமெனில் அதனை வைப்பு செய்தல் வேண்டும். மேலும் இது சிறந்த நிதி முகாமைக்கான எடுத்துக்காட்டாகும். இதன்படி ஒரு காசோலை வைப்பிலிட தாமதமாவது அந்நிறுவனத்தின் நிதிமுகாமை குறைபாட்டை எடுத்து காட்டுகின்றது. காசோலையொன்று வைப்பிலிட தாமதாகும் போது அந்நிறுவனத்தின் ஊழல் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் அதிகமாகும். இதன்படி நிறுவனத்தில் வினைத்திறனான நிதி முகாமைத்துவத்தை பேன வேண்டுமெனில் நிறுவனத்தின் கிடைப்பனவுகளை உடனடியாக வைப்பு செய்ய வேண்டும். ஆகவே கணக்கீட்டு கோட்பாடுகளுக்கிணங்க காசோலையொன்று வைப்பிலிட தாமதப்படுத்தக்கூடாது. கணக்கீடு ஒரு சமூகமயமான தகவல் வழங்கும் ஊடகம் என்ற வகையில் கிடைப்பனவுகளை உடனடியாக வைப்பு செய்ய வேண்டிய நிலையினை உறுதிப் படுத்த வேண்டும். காசோலையொன்று கிடைத்தவுடன் அதனை காசேட்டில் பதிவு செய்தல் வேண்டும். இதன்படி காசோலையொன்று தேறாத காசோலையென இணங்காண அதனை வைப்பிலிட வேண்டிய அவசியமில்லை.

**3. இலாபப்பங்கு, விற்பனை, வருமானத்தினை பெற்றுக்கொள்ளல் ஆகியன SLAS 29 இனை பிரயோகிக்காமல் எவ்வாறு தெளிவுபடுத்தலாம்?**

புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக (2009ம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வரும்) SLAS 29 நீக்கப்பட்டுள்ளது. எனினும், தேறல் எண்ணக்கருவுக்கு அமைவாக பின்வரும் விடயங்கள் கலந்துரையாடப்படுகின்றன.

1. பண்ட விற்பனை
2. சேவை வருமானம்
3. இலாபப் பங்கு போன்றவை இவற்றில் உள்ளடக்கப்படுகிறது.

தேறல் எண்ணக்கருவுக்கு அமைவாக பண்ட விற்பனை கலந்துரையாடப்பட்டாலும் இது SLAS 29 இற்கு அமைவாக அவதானிக்கப்படல் வேண்டும்.

- தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



I.L.A. சலாம்
B.B.A (Spl)
சிரேஷ்ட்ட கணக்கீட்டு ஆசிரியர்
மட்டு அம்பாறை மற்றும் மாவனல்லை

ecway

(01) வரையறுத்த பொதுக்கம்பனி 2012.03.31ல் ஆதனம் பொறி மற்றும் உபகரணம் பற்றிய பின்வரும் தகவல்களைத் தந்துள்ளது.

| உருப்படி | கொள்வனவு செய்த திகதி | பயனுடைய ஆயுட்காலம் | எஞ்சிய பெறுமானம் | 2011.03.31ல் முடிவடைந்த வருடத்திற்கான தேய்வு(ரூபா'000) |
|---|---|---|---|---|
| காணி | 2007.04.01 | - | - | - |
| கட்டடம் | 2007.04.01 | 30 | 150 | 35 |
| மோட்டார்வாகனம் | 2008.09.30 | 10 | 200 | 130 |
| தளபாடம்உபகரணம் | 2008.09.30 | 07 | 100 | 50 |

**மேலதிகத் தகவல்கள்**

1. காணி கிரயத்தில் ரூபா 900000
2. 2011.09.30இல் கம்பனி மோட்டார் வாகனம் ரூபா 1400000ஆக விற்கப்பட்டது. அன்றைய தினமே புதிய மோட்டார் வாகனம் கொள்வனவு செய்யப்பட்டது. அதன் கிரயம் ரூபா 2000000ஆகும் அதன் பயனுடைய ஆயுட்காலம் 10 வருடங்களாகும் கழிவுப் பெறுமானம் ரூபா 200000 ஆகும்.
3. கம்பனியால் 2011.04.01ல் கட்டடம் ரூபா 1450000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டது.
4. கம்பனியின் ஆதனம் பொறி மற்றும் உபகரணம் பயனுடைய ஆயுள்காலத்தை அடிப்படையாகக் கொண்டு நேர்கோட்டு முறையில் தேய்விடப்படுகின்றன.

**தேவையானவை**

1. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 18இன்படி 2012.03.31ல் ஐந்தொகையில் உள்ளடக்கவேண்டிய ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் துணை அட்டவணை
2. மேலே (3) இல் காட்டப்பட்டுள்ள நிகழ்வினால் உரிமையில் ஏற்படும தேறிய தாக்கம் எவ்வளவு?

(2) நுகனும் சுபுனும் பங்குடமையை நடாத்தி வருகிறார்கள். அவர்களுடைய பங்குடமை ஒப்பந்தம் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தது.

1. மூலதனத்துக்கு 3:2 விகிதத்தில் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
2. மூலதனத்துக்கு வருடாந்த வடடி 10%உரித்தாகும்.
3. நுகனுக்கும் சுபுனுக்கும் முறைே ரூபா 15000மும் ரூபா 10000 மாதாந்தச் சம்பளம் உரித்தாகும்.
4. இலாப நட்ட வீதம் சமனாகும்.

2012.03.31ல் புதிய பங்காளராக சமன் சேர்த்துக்கொள்ளப்படடார். அவர் வணிகத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்போது பணம் ரூபா 200000 கொண்டுவந்தார். அத்தோடு அவரிடம் இருந்த மோட்டார் வாகனத்தையும் வணிகத்துக்கு ஒப்படைத்தார். அந்த மோட்டார் வாகனத்தை அவர் ரூபா 800000த்துக்குக் கொள்வனவு செய்திருந்தார். 2012.03.31ல் அதன் சந்தைப் பெறுமானம் ரூபா 600000மாக இருந்தது.

புதிய இலாப நட்ட விகிதம் 3:2:1 ஆக உடன்பட்டுக்கொள்ளப்பட்டது.

சமன் சேர்த்துக்கொள்ளப்பட்ட தினத்தில் வணிகத்தின் நன்மதிப்பு ரூபா 600000ஆக மதிப்பீடு செய்யப்பட்டது. அதனை மூலதனக்கணக்கில் செம்மைசெய்ய உடன்பாடு ஏற்பட்டது.

2011.04.01ல் வணிகத்தில் இருந்த மீதிகள் பின்வருமாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | ரூபா '000' |
|---|---|---|
| இருப்பு | | 230 |
| கடன்பட்டோர் | | 350 |
| முற்பணக் காப்புறுதி | | 20 |
| காசு | | 100 |
| நடைமுறையல்லாச் சொத்து | | |
| | - காணி | 300 |
| | - ஏனைய நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 800 |
| வங்கிக் கடன் | | 270 |
| கடன்கொடுத்தோர் | | 200 |
| அட்டுறு செலவுகள் | | 10 |
| நடைமுறைக்கணக்கு | - நுவன் | 80 |
| | - சுபுன் | 40 |

ஏயை நடைமுறையல்லாச் சொத்துக்கள் வணிகத்துக்குரிய கட்டடமும் மோட்டார் வாகனமும் ஆகும்.

2012.03.31ல் முடிவடைந்த வருடத்துக்கு நிறுவனம் தயாரித்த காசுப்புத்தகத்தின் சுருக்கம் பின்வருமாறு

காசுப்புத்தகம் (ரூ.000)

| | | | |
|---|---|---|---|
| மீதிகீகொ.வ | 100 | உடன்காசுக் கொள்வனவு | 540 |
| உடன்காசு விற்பனை | 1000 | கடன்கொடுததோருக்குக் கொடுத்தது | 750 |
| கடன்பட்டோரிடம் பெற்றது | 1400 | காணி | 400 |
| வாடகை பெற்றது | 210 | செலவு | 360 |
| சமன் கொண்டுவந்த தொகை | 200 | சம்பளம் நுவன் | 150 |
| | | சுப்புன் | 100 |
| | | பற்று நுவன் | 70 |
| | | சுப்புன் | 40 |
| | | வங்கிக்கடன் செலுத்தல் | 60 |
| | | காப்புறுதி | 200 |
| | | மீதிகீகொசெ | 240 |
| | 2910 | | 2910 |
| மீதிகீகொவ | 240 | | |

**மேலதிகத் தகவல்கள்**

- காசுப்புத்தகத்தில் காப்புறுதியாகக் காட்டப்படுவது நுவன் சுபுன் பெற்றுக்கொண்ட தனிப்பட்ட ஆயுள்காப்புறுதிக்காகச் செலுத்தப்பட்ட தொகையாகும். இந்தக் காப்புறுதி 2010.04.01ல் பெற்றுக்கொள்ளப்பட்டவை. ஒருவருக்காக மாதம் ஒன்றுக்கு 10000 ரூபா வீதமாகச் செலுத்தப்பட வேண்டும். சென்ற வருடத்திற்கான காப்புறுதித்தவணைக்கட்டணம் சென்ற வருட வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டது.
- ஆதனம் பொறி மற்றும் உகரணத்திற்கு வருடததிற்கு 10 %ஆகத் தேய்விடப்படும்
- வங்கிக் கடன் தவணைக் கொடுப்பனவுக்குள் வட்டி ரூபா 10000 ஆகும்
- 2012.03.31ல் முடிவடைந்த வருடத்திற்கு நடைமுறைச் சொத்தும் நடைமுறைப் பொறுப்பும் தொடர்பில் ஏற்பட்ட மாற்றங்கள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| இருப்பு | (50) | (பௌதிக இருப்புக் கணிப்பு கருத்தில் கொள்ளப்பட்டபோது) |
| கடன்பட்டோர் | (100) | |
| கடன்கொடுத்தோர் | (150) | |
| அட்டுறு செலவு | 10 | |

- நுவன் வருடத்திற்குள்ளே ரூபா 2000 பெறுமதியான சரக்குகளைத தனது சொந்தப் பயன்பாட்டுக்காக எடுத்துச் சென்றுள்ளார். அது தொடர்பான எந்தப் பதிவுகளும் வைக்கப்படவில்லை.
- நிறுவனத்திற்குரிய கட்டடம் வருட ஆரம்பத்தில் வாடகைக்குக் கொடுக்கப்பட்டது. மாதாந்த வாடகை ரூபா 15000 ஆகும்.

**தேவையானவை**

1. நுவன் சுபுன் வணிகத்தில் 2012.03.31ல் முடிவடைந்த வருடத்தின் வருமானக் கூற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வருடத்திற்கான இலாபப் பகிர்வைக் காட்டும் கூற்று
3. 2012.03.31ல் வணிகத்தின் ஐந்தொகை

(3) அமல் பியல் சமன் 2:2:1 என்னும் விகிதத்தில் இலாபநட்டங்களைப் பகிரும் பங்குடமை வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். 2012 மார்ச் 31ல் பங்குடமை வணிகத்தின் பரீட்சை மீதி பின்வருமாறிருந்தது.

| விபரம் | வரவு(ரூபா '000') | செலவு (ரூபா '000' |
|---|---|---|
| காணி கட்டடம் | 20600 | |
| இயந்திரம் | 3250 | |
| களபாடம் பொருத்து | 2360 | |
| இருப்பு | 8440 | |
| கடன்பட்டோர் | 6150 | |
| வங்கி | 3980 | |
| கடன்கொடுத்தோர் | | 4470 |
| மூலதனக் கணக்கு (2011.04.01) | | |
| அமல் | | 8000 |
| பியல் | | 8000 |
| சமன் | | 4000 |
| நடைமுறைக்கணக்கு (2011.04.01) | | |
| அமல் | | 4130 |
| பியல் | | 3280 |
| சமன் | | 2910 |
| விற்பனை | | 27840 |
| விற்னைக்கிரயம் | 14370 | |
| செலவுகள் | 3480 | |
| | 62630 | 62630 |

பின்வரும் தகவல்களும் உமக்களிக்கப்படுகின்றன.
பியல் 2012 மார்ச் 31ல் பங்குடமையில் இருந்து ஓய்வு பெற்றார். உடன்பாடு பின்வருமாறு அமைந்தது.

1. வருட ஆரம்பத்தில் உள்ள மூலதனக் கணக்கு மீதிகளுக்கு 10% வருடாந்த வட்டி செலவுவைக்கப்பட வேண்டும். 2009/2010ஆம் ஆண்டுக்கு வட்டி இதுவரை ஒதுக்கப்பட வில்லை
2. 2012.03.31ல் நன்மதிப்பு ரூபா 1000000ஆகும். நன்மதிப்பை ஒரு சொத்தாகப் பேணுவதில்லை அது தொடர்பான செம்மையாக்கம் மூலதனக்கணக்குகள் ஊடாகச் செய்யப்பட வேண்டும்.
3. சமன் 2012.03.31ல் புதிய மூலதனமாக ரூபா 10538000 பணத்தைக் கொண்டுவர உடன்பட்டார்
4. பியல் ஓய்வு பெற்ற தினத்தில் இருந்து அமலும் சமனும் இலாபநட்டங்களைச் சமமாகப் பகிர்ந்துகொள்ளத் தீர்மானித்தனர்.
5. ஓய்வு பெறும் தினத்தில் பியலுக்கு மில்லியன் 10 பணம் செலுத்துவதுடன் மீதி வருடத்திற்கு 15% வட்டி செலுத்தும் கடன் கணக்குக்கு மாற்றப்பட்டது

**தேவையானவை**

1. பங்காளர்களுடைய மூலதனக் கணக்கு
2. பங்காளர்களுடைய நடைமுறைக்கணக்கு
3. 2012ஏப்ரல் 01ல் ஐந்தொகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிவுத் தேடல் இதழ் 20ற்கான சிரேஷ்ட்ட கணக்கீட்டு ஆசிரியர் I.L.A. சலாம் அவர்களின் ecway தொகுப்பின் விடைகள்**

(01) 01. அமல் - கமல் ப-மையின் 31-03-2011ல் மு. ஆண்டிற்கான வருமானக் கூற்று (ரூபா 000)

| | | |
|---|---|---|
| | விற்பனை | 4000 |
| (-) | விற்பனை கிரயம் (2525 - 8) | (2517) |
| | மொத்த இலாபம் | 1483 |
| (-) | விநியோக செலவு (800 + 20) | (820) |
| | நிர்வாக செலவு (121 + 500 + 100) | (721) |
| | நிதி செலவு (1 + 10 + 6) | (17) |
| | | (80) |

02. 31-03-2011ல் மு-ஆண்டிற்கான இலாப பகிர்வு (ரூபா 000)

| | | | |
|---|---|---|---|
| | நட்டம் | | (80) |
| (-) | சம்பளம் - கமல் | 150 | |
| | மூலதன வட்டி - அமல் | 58 | |
| | - கமல் | 42 | (220) |
| | | | (300) |
| (-) | நட்டம் - அமல் | 180 | |
| | - கமல் | 120 | 300 |
| | | | 0 |

03. பங்காளர் ந. மு. க/கு (ரூபா 000)

| விபரம் | A | K | விபரம் | A | K |
|---|---|---|---|---|---|
| பற்று | 8 | - | மீ/வ | 250 | - |
| நட்டம் | 180 | 120 | சம்பளம் | - | 120 |
| | | | மூலதன வட்டி | 58 | 42 |
| | | | வாடகை | 90 | - |
| மீ/செ | 216 | 42 | கடன் வட்டி | 6 | - |
| | 404 | 162 | | 404 | 162 |
| | | | மீ/வு | 216 | 42 |

04. பங்காளர் மூலதனக் க/கு (ரூபா 000)

| விபரம் | A | V | K | விபரம் | A | V | K |
|---|---|---|---|---|---|---|---|
| ந. மு. க/கு | | 100 | | மீ/வ | 600 | 500 | |
| நன்மதிப்பு | 120 | | 80 | நன்மதிப்பு | 100 | 100 | |
| கமல் | | 300 | | விமல் கடன் | | | 300 |
| காசு | | 100 | | தளபாடம் | | | 200 |
| கடன் | | 100 | | | | | |
| மீ/செ | 580 | | 420 | | | | |
| | 700 | 600 | 500 | | 700 | 600 | 500 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. அமல் கமல் ப-மையின் 31-03-2011ல் உள்ளபடியான ஐந்தொகை (ரூபா 000)

| சொத்துக்கள் | | |
|---|---|---|
| <u>ந. மு. அ. சொத்து</u> | | |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணம் (1000 + 200 - 120) | 1080 | |
| <u>ந. மு. சொத்து</u> | | |
| முற்பண வாடகை | 144 | |
| <u>உரிமையும் பொறுப்பும்</u> | | |
| மூலதனக் க/கு - A | 580 | |
| - K | 420 | |
| ந. மு. க/கு - A | 216 | |
| - K | 42 | |
| <u>ந. மு. அ. பொறுப்பு</u> | | |
| அமல் கடன் | | 80 |
| <u>ந. மு. பெறுப்பு</u> | | |
| க/கொ | | |
| விமல் கடன் | 100 | |
| செ. வே. கமல் கடன் வட்டி | 10 | |
| செ. வே. அமல் கடன் வட்டி | 6 | |

(12) 01. அனில், சிசில், டேவிட் ப-மையின் 31-03-11ல் மு.ஆண்டிற்கான வருமானக்கூற்று

(ரூபா 000)

| | | |
|---|---|---|
| | விற்பனை | 800 |
| (-) | வி-பனை கிரயம் (200 + 400 - 150) | (450) |
| | மொ. இலாபம் | 350 |
| (-) | செலவீடுகள் (6.4 + 166 + 3 + 2 + 80) | (257.4) |
| | இலாபம் | 92.5 |

02. அனில், சிசில், டேவிட் ப-மையின் 31-03-11ல் உள்ளபடியான ஐந்தொகை (ரூபா 000)

| சொத்துக்கள் | | |
|---|---|---|
| <u>ந. மு. அ. சொத்து</u> | | |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணம் (350 - 100 - 80) | | 170 |
| <u>ந. மு. சொத்து</u> | | |
| இருப்பு | 150 | |
| க.்.ப | 50 | |
| வங்கி (90 - 819 + 1150) | 421 | 621 |
| மொ. சொத்துக்கள் | | 791 |
| <u>உரிமையும் பொறுப்பும்</u> | | |
| மூலதனக் க/கு - A (250+20) | 270 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | - S (125 - 20 + 50) | 155 | |
| | - D (200 - 40) | 160 | 585 |
| ந. மு. க/கு | - A (10 - 10 + 30.87) | 30.87 | |
| | - S (16 - 8 + 30.87) | 38.87 | |
| | - D (-5 + 30.86) | 25.86 | 95.6 |
| | | | 68.6 |
| <u>ந. மு. அ. பொறுப்பு</u> | | | |
| பசில் கடன் | | | 64 |
| <u>ந. மு. பெறுப்பு</u> | | | |
| க/கொ | | 20 | |
| செ. வே. பசில் கடன் வட்டி | | 6.4 | |
| நிலுவை தொலைபேசி | | 8 | |
| நிலுவை மின்சாரம் | | 12 | 46.4 |
| மொ. உரிமையும் பொறுப்பும் | | | 791 |

| | மு | ந.மு | வி/னை | கொ/வு |
|---|---|---|---|---|
| பசில் | 250 | 24 | 900 | 480 |
| | 40 | | (100) | (80) |
| | (150) | | 800 | 400 |
| | (100) | | | |

## Current Affairs Cafe

- by Editor -

**உலகின் முதன்மையான பள்கலைக்கழகங்களின் பட்டியல் (2011-2012)**

| | | |
|---|---|---|
| 1 | University of Cambridge | United Kingdom |
| 2 | Harvard University | United States |
| 3 | Yale University | United States |
| 4 | UCL (University College London) | United Kingdom |
| 5 | Massachusetts Institute of Technology (MIT) | United States |
| 6 | University of Oxford | United Kingdom |
| 7 | Imperial College London | United Kingdom |
| 8 | University of Chicago | United States |
| 9 | California Institute of Technology (Caltech) | United States |
| 10 | Princeton University | United States |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



I.L.A. சலாம்
B.B.A (Spl)
சிரேஷ்ட்ட கணக்கீட்டு ஆசிரியர்
மட்டு அம்பாறை மற்றும் மாவனல்லை

## The MCQ Quiz Bank

(01) கயான் தனி வியாபாரியாகும். 2011/2012 நிதி வருடத்திற்கு அவருடைய வணிகத்தல் பின்வரும் விபரங்கள் கிடைத்துள்ளன.

| | | |
|---|---|---|
| உரிமை | 2011 ஏப்ரல் 1ல் | ரூபா 5300660 |
| | 2012 மார்ச 31ல் | ரூபா 7154320 |

வருடத்திற்குள்ளே கொண்டுவரப்பட்ட மூலதனம் ரூபா 550000ஆகும். தனிப்பட்ட பாவனைக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பொருள்களின் பெறுமதி ரூபா 34180 வணிகத்தின் வங்கிக் கணக்கின் மூலமாகச் செலுத்தப்பட்ட கயானுடைய வருமான வரி ரூபா 50000 ஆகும். 2007/2008ஆம் ஆண்டுக்கு கயானுடைய வணிகத்தின் இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு

(1) ரூபா 1337840 (2) ரூபா 1853660 3) ரூபா 1387840
(4) ரூபா 1303660 (5) மேலே குறிப்பிட்ட எதுவுமில்லை

(..........)

(02) வரையறுத்த திரு வியாபாரக் கம்பனி பரிசுப் பொருள்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளது 2012 ஏப்ரல் 01ல் கம்பனியின் வங்கி மீதி ரூபா 250000 ஆக இருந்தது. ஏப்ரல் மாதத்தில் ரூபா 12000 பட்டியலுக்கு 10% காசுக்கழிவுக்கு உட்பட கடன்பட்ட ஒருவரிடமிருந்து காசோலை கிடைத்திருந்தது. மேலும் 15% வியாபாரக் கழிவும் 7.5% காசுக்கழிவுக்கும் உட்பட ரூபா 40000 பட்டியலிடப்பட்ட கொள்வனவுக்கு காசோலை கம்பனியால் செலுததப்பட்டது.

ஏப்ரல் மாதத்தில் வங்கி மீதி

(1) ரூபா 230550 (2) ரூபா 229350 3) ரூபா 226800
(4) ரூபா 2221800 (5) ரூபா 320800

(..........)

(03) கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்காக பொது நாளேடு பின்வருவனவற்றில் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது

(1) கடனுக்குப் பொருள்களை விற்பனை செய்யும்போது
(2) வழுக்களைத் திருத்தும்போது
(3) நடைமுறையல்லாச் சொத்துக்களைக் கடனுக்குக் கொள்வனவு செய்யும்போது
(4) தேய்வுக்கு ஏற்பாடு செய்யும்போது
(5) மேலுள்ள எதற்கும் இல்லை (..........)

(04) பின்வருவனவற்றில் மூல ஏடல்லாதது எதுவாகும்?

(1) விற்பனை நாளேடு
(2) பரீட்சை மீதி
(3) சில்லறைக் காசேடு
(4) பொது நாளேடு
(5) காசேடு (..........)

(05) வரையறுத்த நிசிசி கம்பனி ஜப்பானில் உற்பத்தி செய்யப்பட்ட பிரசித்தி பெற்ற மோட்டார் வாகனத்தின் முகவராவார் கம்பனியின் நடைமுறையல்லாச் சொத்து அட்டவணையைத் தயாரித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணமாக்கப்பட்டுள்ளது. ரூபா 10000த்தை விடக் குறைவான கிரயமுடைய எல்லா நடைமுறையல்லாச் சொத்து உருப்படிகளும் நடைமுறையல்லாச் சொத்து உருப்படிகளாக மூலதனமாக்கப்படுவதற்குப் பதிலாக செலவுக்கணக்கில் தாக்கல் செய்ய கொள்கையாக வகுத்துக்கொள்ளப்பட்டது. இது எந்த எண்ணக்கருப் பயன்பாட்டின் செயலாகும்?

(1) தொடர்ந்தியங்கு (2) பாதுகாப்பு 3) அளவுரீதியான
(4) அட்டுறு (5) பொருந்தச் செய்
(..........)

(06) என்னும் இருப்புப்பொருள் 2012 ஜனவரி மாதத்தில் பெற்றதும் விற்றதும் தொடர்பான பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன.

| திகதி | பெற்றது | விற்றது |
|---|---|---|
| 01.01.2011 | ஒன்று ரூபா 10 வீதமாக அலகுகள் 500 | இல்லை |
| 05.01.2011 | ஒன்று ரூபா 11 வீதமாக அலகுகள் 1200 | இல்லை |
| 14.01.2011 | இல்லை | 600 |
| 17.01.2011 | ஒன்று ரூபா 12/20 வீதமாக அலகுகள் 980 | இலலை |
| 19.01.2011 | ஒன்று ரூபா 12/70 வீதமாக அலகுகள் 570 | இல்லை |
| 29.01.2011 | இல்லை | 500 |

முதல் வந்தது முதல் சென்றது (FIFO) முறையில் இருப்புப் பெறுமதியிடப்படுமானால் ஜனவரி மாதத்தல் விற்பனைக் கிரயம்

(1) ரூபா 25106 (2) ரூபா 23080 (3) ரூபா 25126 4) ரூபா 24626
(5) ரூபா 25000 (..........)

(07) நிதிக் கூற்றுக்களின் தேய்வுக்கு ஏற்பாடு செய்யும்போது கருத்தில் கொள்ளப்படும அடிப்படையான கணக்கீட்டுக் கருதுகோள்/எண்ணக்கரு எதுவாகும்?

(1) தேறல் (2) அட்டுறு (3) தொடர்ந்தியங்கு 4) பாதுகாப்பு
(5) இணைந்த (..........)

(08) கண்டி கிறிக்கற் கழகம் அங்கத்துவப் பண வருமானத்தை அட்டுறு அடிப்படையில் இனங் காண்கிறது. 2011/2012 நிதிவருடத்தில் கழகத்துக்கு அங்கத்துவக் கட்டணமாக ரூபா 5420000 கிடைத்திருந்தது அதில் ரூபா 280000 2010/2011 நிதிவருடத்திற்கு உரியதாகும். ரூபா 585000 2012/2013 நிதிவருடத்துக்குரியதாகும். 2011/2012 வருடத்திற்குக் கிடைக்கவேண்டிய நிலுவைப்பணம் ரூபா 211750ஆக இருந்தது. 2012 மார்ச் 31ல் முடிவடைந்த வருடத்துக்கு வருமானச் செலவுக்கணக்குக்குரிய அங்கத்துவப் பணமாகக் காட்டவேண்டிய தொகை என்ன?

(1) ரூபா 5046750 (2) ரூபா 4766750 (3) ரூபா 5351750 4) ரூபா 5631750
(5) ரூபா 5355750 (..........)

(09) வரையறுத்த சமாதி கம்பனியின் வங்கிக்கூற்று 2012 மார்ச் 31ல் ரூபா 383000 செலவு மீதியைக் காட்டியது. 2012 மார்ச் வங்கிக் கூற்றில் காசேட்டை ஒப்பிட்டபோது பின்வருவனவற்றைக் குறித்துக்கொண்டார்.

- வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூபா 237000
- ஒரு வாடிக்கையாளரிடமிருந்து கிடைத்த ரூபா 50000 காசோலை காசேட்டில் செலவுப்பக்கத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது
- தேறாத காசோலைகள் ரூபா 124750
- வாடிக்கையாளர் ஒருவருடைய ரூபா 55000 காசோலை வங்கியால் மறுக்கப்பட்டு அதற்காக ரூபா 1000 வங்கிக் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது. இது காசேட்டில் பதிவிடப்படவில்லை
- வங்கிக் கூற்றில் ரூபா 3500 வங்கிக் கட்டணமாக வசூல் செய்யப்பட்டுள்ளது. இது காசேட்டில் பதிவிடப்படவில்லை.

மேற்படி விடயங்களைச் செம்மை செய்யமுன் வரையறுத்த சமாதி கம்பனியில் 2012மார்ச் 31ல் காசேட்டின் மீதி என்னவாகும்.

(1) ரூபா 535750 (2) ரூபா 280250 (3) ரூபா 230250 4) ரூபா 485750
(5) ரூபா 480000 (..........)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(10) வரையறுத்த றக்சற கம்பனியின் 2012 மார்ச் 31ல் முடிவடைந்த வருடத்திற்கு பின்வரும் விபரங்கள் உமக்குத் தரப்பட்டுள்ளன.

| | ரூபா |
|---|---|
| மூலப்பொருள் இருப்பில் குறைவு | 75000 |
| மூலப்பொருள் கொள்வனவு | 810000 |
| கொள்வனவுத் திருப்பம் -மூலப்பொருள் | 40000 |
| வெளிச்சென்ற கூலி | 64000 |
| உள்வந்த கூலி | 37500 |
| நேர் சம்பளம் | 371500 |
| உற்பத்தி பொது மேந்தலைக் கிரயம் | 214600 |
| முடிவுறாத பொருள்களின் அதிகரிப்பு | 29400 |
| கிடைத்த கழிவு | 16000 |

உற்பத்தி செய்தபொருள்களின் தொழிற்சாலைக் கிரயம் என்ன?

(1) ரூபா 1348000 (2) ரூபா 1439200 (3) ரூபா 1503200 4) ரூபா 1487200

(5) ரூபா 1501000 (..........)

(11) காலீஸ் ஒரு அற நிலையமாகும்

2011/2012 நிதி வருடத்திற்குள்ளே நிறுவனத்துக்குப் பணமாகவும் பொருள்களாகவும் நன்கொடை கிடைத்திருந்தது. பணமும் காசும் பெறப்பட்டதுதொடர்பான குறிப்புகளுக்கான மூல ஏடுகள்

(1) காசேடு

(2) காசேடு கொள்வனவேடு விற்பனைநாளேடு

(3) காசேடும் பொது நாளேடும்

(4) காசேடும உதவி பெறல் கணக்கும்

(5) காசேடும் சில்லறைக்காசேடும் (..........)

(12) வரையறுத்த HB கம்பனி பெறுமதி சேர் வரி (VAT) க்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது. பொருள் போக்குவரத்துக்கு 2011/2012 நிதி வருடத்திற்குள்ளே கம்பனி மோடார் வாகனம் றுவன் மோட்டர் வியாபாரக் கம்பனியில் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது. அதன் கிரயம் ரூபா 2000000 ஆகும். வற் வரி 15% ஆகும் வரையறுத்த HB கம்பனியின் புத்தகங்களில் மேற்படி கொடுக்கல் வாங்கல் பதிவு செய்யப்படும் சரியான முறை

| | | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|---|
| 01 | மோட்டார் வாகனக் கணக்கு றுவன் மோட்டார் கம்பனிகணக்கு<br>செலுத்தவேண்டிய வற்வரிக்கணக்கு | 2300000 | 2000000<br>300000 |
| 02 | மோட்டார் வாகனக் கணக்கு<br>றுவன் மோடார் வியாபாரக்கம்பனி கணக்கு | 2300000 | <br>2300000 |
| 03 | மோட்டார் வாகனக் கணக்கு<br>வற்வரிக் கட்டுப்பாட்டுக்கணக்கு<br>றுவன் மோடார் வியாபாரக்கம்பனி கணக்கு | 2000000<br>300000 | <br><br>2300000 |
| 04 | மோட்டார் வாகனக் கணக்கு<br>வற்வரிக் கட்டுப்பாட்டுக்கணக்கு<br>றுவன் மோடார் வியாபாரக்கம்பனி கணக்கு<br>செலுத்தவேண்டிய வற்வரிக்கணக்கு | 2000000<br>300000 | <br><br>2000000<br>300000 |
| 05 | மேலுள்ள எதுவும் இல்லை | | |

(..........)

(13) வரையறுத்த சம்பத் கம்பனி XYZ என்னும் மூன்று உற்பத்திகளை விற்பனை செய்கிறது 2012 மார்ச் 31ல் உமக்குப் பின்வரும் தகவல்கள் தரப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | Xஉற்பத்தி | Yஉற்பத்தி | Zஉற்பத்தி |
|---|---|---|---|
| 2012 மார்ச் 31ல் பௌதிக இருப்பு | அலகு 1500 | அலகுகள் 750 | அலகுகள் 500 |
| விற்பனை விலை ரூபா | 20 | 32 | 60 |
| மதிப்பிடப்பட்ட விற்பனைச் செலவுகள் | 5 | 9 | 14 |
| கிரயம் | 12 | 12 | 35 |

2012 மார்ச் 31ல் இருப்பின் பெறுமானம் என்ன?
(ஒவ்வொரு பொருளுக்கும் வேறு வேறாக மதிப்பீட்டு அடிப்படையைப் பயன்படுத்துவதாகக் கருதுகோள் வைக்கப்பட்டது)
(1) ரூபா 54250 (2) ரூபா 52750 (3) ரூபா 62750 4) ரூபா 58250
(5) ரூபா 58000 (..........)

(14) பின்வரும் தகவல்கள் மாலி வினியோகக் கம்பனிக்கு உரியதாகும். கம்பனியும் ஊழியர்களும் ஊழியர் சேமலாபநிதிக்கு 12%, மும் 8% மும் பங்களிக்கின்றனர். ஊழியர் நம்பிக்கை நிதிக்கு 3% ஆகும். 2012ஜூன் மாதத்தில் செலுத்தப்பட்ட ஊழியர் நம்பிக்கைநிதிப் பங்களிப்பு ரூபா 37500 ஆகும். விழா முற்பணத்துக்கு ரூபா 50000 கம்பனியால் வசூல் செய்யப்பட்டுள்ளது.
2012 ஜூன் மாதத்திற்குச் செலுத்தப்பட்ட தேறிய சம்பளம்
(1) ரூபா 280000 (2) ரூபா 110000 (3) ரூபா 104000 4) ரூபா 1177600
(5) ரூபா 1177000 (..........)

(15) வணிகமும் ஊழியர்களும் ஊழியர் சேமலாபநிதிக்கு 12%, மும் 8% மும் பங்களிக்கின்றனர். புத்தகங்களில் ஊழியர் சேமலாப நிதிக்குரிய சரியான பதிவு எதுவாகும்

| | | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|---|
| 01 | ஊழியர் சேமலாபநிதிக்கணக்கு வரவு<br>சம்பளக கட்டுப்பாட்டுக்கணக்கு | 250000 | <br>250000 |
| 02 | ஊழியர் சேமலாபநிதிக்கணக்கு வரவு<br>செலுத்தவேண்டிய ஊழியர் சேமலாபநிதிக் கணக்கு | 250000 | <br>250000 |
| 03 | ஊழியர் சேமலாபநிதிக்கணக்கு வரவு<br>சம்பளக்கணக்கு வரவு<br>சம்பளக் கட்டுப்பாட்டுக்கணக்கு | 150000<br>100000 | <br><br>250000 |
| 04 | ஊழியர் சேமலாபநிதிக்கணக்கு வரவு<br>சம்பளக்கணக்கு வரவு<br>செலுத்தவேண்டிய ஊழியர் சேமலாபநிதிக் கணக்கு | 150000<br>100000 | <br><br>250000 |
| 05 | மேலுள்ள எதுவும் இல்லை | | |

(..........)

இலக்கம 16,17,18 வினாக்கள் தொடர்பின் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

2011 நிதி ஆண்டில் சேமினி வியாபாரிகள் அவர்களுடைய வியாபாரக் கருமங்களை கண்டிவரையும் விரிவாக்கினர். 2011 ஜனவரி 01ல் இருந்து 4 வருட காலத்திற்கு ரூபா 30000 மாதாந்த வாடகைக்கு ஒரு கட்டடம் பெறப்பட்டது. ரூபா 480000 அடிப்படை வைப்பாகச் செலுத்தப்பட்டது. மாதாந்த வாடகையில் பங்கு இந்தவைப்புக்கணக்கில் தாக்கல் செய்யப்பட்டது. 2011ஆம் ஆண்டுக்காக கடட்ட உரிமையாளருக்கு ரூபா 200000 செலுத்தப்பட்டுள்ளது. மேலும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் திருத்த வேலைகளுக்காக 2011 ஜனவரி மாதத்துக்கு வாடகை நீக்கிக் கொள்ளுவதற்கு கட்டட உரிமையாளர் உடன்பட்டுக்கொண்டார்.

(16) 2011 டிசெம்பர் 31ல் முடிவடைந்த வருடத்துக்கான வருமானக் கூற்றில் தாக்கல் செய்யவேண்டிய வாடகை
(1) ரூபா 360000 (2) ரூபா 240000 (3) ரூபா 200000 4) ரூபா 350000
(5) ரூபா 300000 (..........)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(17) மாதாந்த வாடகையை மட்டும் 30.09.2007இல் இருந்து மாதத்துக்கு 30000த்தில் இருந்து ரூபா 42000 மாக மாற்றுவதற்கு இருதரப்பினரும் உடன்பட்டுக்கொண்டனர் எனக் கற்பனை செய்துகொள்ளுக. அவ்வாறு செய்தபின்னர் ஐந்தொகையில் காட்டப்படவேண்டிய உருப்படியாவது

| | அட்டுறு வாடகை ரூபா | வாடகை வைப்பு (நடைமுறையல்லாதபகுதி) ரூபா | வாடகை வைப்பு (நடைமுறைப்பகுதி) ரூபா |
|---|---|---|---|
| (1) | 64000 | 180000 | 168000 |
| (2) | 64000 | 210000 | 168000 |
| (3) | 44000 | 190000 | 168000 |
| (4) | 44000 | 146000 | 168000 |
| (5) | மேலுள்ள எதுவுமில்லை | | |

(..........)

(18) 31.12.2011ல் ஆரம்ப வாடகை வைப்புக் கணக்கு ரூபா 386000கும் எனில் (இலக்கம் 17ஆம் வினாவின் திருத்தின்படி) ஆரம்ப வைப்புக்குப் பதிலாக வசூலப்பு பற்றி முதல் ஒப்பந்தத்தில் திருத்தம் செய்யப்பட்டது எவ்வாறு

1) 30.09.2011ல் இருந்து ஆரம்பவைப்பில் வசூலிக்கப்பட்ட ⅓ க்குப் பதிலாக ¼ ஆக இருக்க வேண்டுமென இரு தரப்பினரும் உடன்பட்டனர்

(2) 01.01.2011ல் இருந்து ஆரம்பவைப்பில் வசூலிக்கப்பட்ட ⅓ க்குப் பதிலாக ¼ ஆக இருக்க வேண்டுமென இரு தரப்பினரும் உடன்பட்டனர்

(3) 2011 டிசெம்பர் 30ல் இருந்து சேமினி வியாபாரிகள் ரூபா 280000த்தை கட்டட உரிமையாளருக்குச் செலுத்துதல்

(4) 2011ஆம் ஆண்டுக்கு அட்டுறு வாடகைப் பகுதியை ஆரம்ப வைப்பில் கழித்துக்கொள்ள இரு தரப்பினரும் உடன்பட்டனர்

(5) மேலுள்ள எதுவுமில்லை. (..........)

(19) செனெமி தனி வியாபாரியாகும். 2012 ஏப்ரல் 30ஆந்திகதி பின்வரும் மீதிகள் இருந்தன. மொத்தச் சொத்து ரூபா 2500000 மொத்தப் பொறுப்பு ரூபா 500000 2012 மே மாதத்தில் பின்வரும கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்ந்தன.

(1) கடன் விற்பனை ரூபா 625000. அதன் விற்பனைக் கிரயம் ரூபா 375000

(2) பொருள்களில் உரிமையாளர் பற்றிய கொள்வனவு ரூபா 150000 அவற்றில் குறிக்கப்பட்டிருந்த விலை ரூபா 200000 ஆகும்.

(3) மாதத்திற்குள் விற்பனை செய்யப்பட்ட பொருள்களில் ஒரு பகுதி வாடிக்கையாளரால் திருப்பியனுப்பப்பட்டது. (கடன் விற்பனை திருப்பி அனுப்பப்பட்டது) அவற்றின் கிரயம் ரூபா 30000

(4) ரூபா 100000 செலுத்தவேண்டியிருந்த ஒரு கடன்பட்டவர் ரூபா 90000 மட்டும் செலுத்தினார். மீதியை அறவிடமுடியாக்கடனாகக் கருதுதல் வேண்டும்.

2012 மே 31ல் இறுதி மூலதனமாக இருப்பது

(1) ரூபா 2078000 (2) ரூபா 2070000 (3) ரூபா 1570000 4) ரூபா 1578000

(5) ரூபா 2000000 (..........)

(20) பரீட்சைமீதியின் வித்தியாசம் தொங்கல் கணக்குக்கு மாற்றப்பட்டது. பின்னர் பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

1. விற்பனை நாளேடு தயாரிக்கப்படும்போது சில்வா அவர்களுக்குச் செய்த கடன்விற்பனைரூபா 9000த்தால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது
2. ஒரு வாடிக்கையாளரிடமிருந்து கிடைத்த ரூபா 89000 அவருடைய கணக்கில் தவறுதலாக ரூபா 98000 எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வழுக்களைத் திருத்தம் செய்வதற்கான நாட்குறிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| (1) | பதிவுகள் அவசியமில்லை | | |
| (2) | விற்பனைக் கணக்கு வரவு | 9000 | |
| | தொங்கல் கணக்கு வரவு | 9000 | |
| | வியாபாரக் கடன்பட்டோன் கணக்கு | | 9000 |
| | வியாபாரக் கடன்பட்டோன் கணக்கு | | 9000 |
| (3) | வியாபாரக் கடன்பட்டோன் கணக்கு வரவு | 9000 | |
| | வியாபாரக் கடன்பட்டோன கணக்கு வரவு | 9000 | |
| | தொங்கல்கணக்கு கணக்கு | | 9000 |
| | விற்பனைக்கணக்கு கணக்கு | | 9000 |
| (4) | விற்பனைக் கணக்கு வரவு | 9000 | |
| | வியாபாரக் கடன்பட்டோர் கணக்கு வரவு | 9000 | |
| | தொங்கல் கணக்கு | | 9000 |
| | வியாபாரக் கடன்பட்டோன் கணக்கு | | 9000 |
| (5) | விற்பனைக் கணக்கு வரவு | 9000 | |
| | வியாபாரக் கடன்பட்டோன் கணக்கு வரவு | 9000 | |
| | தொங்கல்கணக்கு கணக்கு | | 9000 |

(..........)

**அறிவுத் தேடல் இதழ் 20ற்கான சிரேஷ்ட்ட கணக்கீட்டு ஆசிரியர் I.L.A. சலாம் அவர்களின் MCQ தொகுப்பின் விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 1 | 06 | 2 | 11 | 3 | 16 | 4 |
| 02 | 2 | 07 | 3 | 12 | 3 | 17 | 3 |
| 03 | 1 | 08 | 2 | 13 | 2 | 18 | 3 |
| 04 | 2 | 09 | 3 | 14 | 2 | 19 | 2 |
| 05 | 3 | 10 | 2 | 15 | 4 | 20 | 4 |

# தேடல் @ உலா

**நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை**



இலங்கையில் இடம்பெற்ற போருக்குப் பின்னர் அதன் அனுபவங்களையும் பரிந்துரைகள் மற்றும் விதப்புரைகளையும் உள்ளடக்கும் வகையிலான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு அரசாங்கத்தினால் ஒரு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு எனப் பெயரிடப்பட்ட இக்குழுவானது முன்னனி சட்ட நிபுனரான சி.ஆர்.டி சில்வா தலைமையில் நாடு முழுதும் பல அமர்வுகளை நடத்தி மக்களிடம் நேரடியாகக் கேட்டறிந்தது. அது தனது அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளது. கடந்த டிசம்பர் 16ம் திகதி அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா சுமார் 400 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Z.A. Zanhir
Subject Coordinator IT & So.Sc
Zonal Education Office - Puttalam




## மஹேல - பத்தாயிரம் ஓட்டங்கள்



டெஸ்ட் போட்டிகளில் பத்தாயிரம் ரன்கள் குவித்த முதல் இலங்கை வீரர் என்ற பெருமையை மஹேல ஜயவர்த்தன தட்டிக்கொண்டுள்ளார். சர்வதேச ரீதியில் இச்சாதனையை நிலை நிறுத்திய ஒன்பதாவது வீரராகவும் இவர் விளங்குகிரார். டர்பனில் நடந்த இலங்கை–தென்னாபிர்க்க டெஸ்ட் போட்டியின் முதல் நாள் இச்சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. 34 வயதான இவர் 127 டெஸ்ட்களில் 29 சதங்களையும, 40 அரைச் சதங்களையும் குவித்துள்ளார். ஒரு நாள் போட்டிகளில் சனத் ஜயசூரிவுக்கு அடுத்து அதிக ஓட்டங்கள் பெற்று வருவது மஹேல என்பது குறிப்பிடத்தக்கது. 356 ஒரு நாள் சர்வதேச போட்டிகளில் அவர் 15 சதங்களுடன் 10 ஆயிரத்து 59 ரன்களை குவித்துள்ளார்.



## ஒரு நாள் போட்டியில் ஷேவாக் உலக சாதனை

கிரிக்கட் உலக போட்டிகளில் அதிக ரன்களை எடுத்தவர் என்ற பெருமைக்கு இந்திய வீரர் வீரேந்திர ஷேவாக் உரிமையாகியுள்ளார். மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக மத்திய பிரதேச மாநிலத்தின் இந்தோர் நகரில் ஷோல்கர் மைதானத்தில் 219 ரண்களைக் குவித்ததன் மூலம் சச்சினின் சாதனை முறியடிக்கப் பட்டு புதிய சாதனை நிகழ்த்தப் பட்டுள்ளது. முன்னர் சச்சின் ஆட்டமிழக்காமல் 200 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். ஒரு நாள் கிரிக்கட் போட்டிகளில் ஷேவாக், சச்சின் ஆகிய இருவர் மட்டுமே இரட்டைச்சதங்கள் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## Kim Jong Il காலமானார்



1994 முதல் வட கொரியாவின் தலைவராக இருந்த கிம் ஜாங் இல் கடந்த டிசம்பர் மாதம் தனது 69வது வயதில் இரயிலில் பயணித்துக் கொண்டிருக்கும் போது மாரடைப்பினால் காலமானார். கடவுளுக்கு இணையானவராக மதிக்கப்பட்ட இவரின் இறுதி ஊர்வலத்தை அதி கூடிய அரச மரியாதையுடன் அந்நாடு நடத்தியது.

கிம் ஜாங்கின் மரணத்தைத் தொடர்ந்து அவரின் இளைய மகனான Jim Jong Un நாட்டின் அதி உயர் தலைவராகவும் தேசம், இராணுவம் மற்றும் ஆளும் தொழிலாளர் கட்சியின் புதிய தலைவராகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார். முப்பது வயதைக் கூட அடையாத இவ்வாரான ஒரு மகன் இருப்பது கடந்த இரண்டு, மூன்று வருடங்களுக்குள்ளாகவே அந்நாட்டு மக்களுக்குத் தெரிய வந்தது. அவருடைய தகுதியில் சந்தேகங்கள் இருந்த போதும் தனது வாரிசாக ஏற்கனவே இவர் தனது தந்தையால் அறிவிக்கப்பட்டிருந்தார். தொடர்ந்தும் சோசலிசக் கோள்கைகளைப் பின்பற்றிவரும் வட கொரியாவானது ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போதும் கொள்கை மாற்றங்கள் இடம்பெற மாட்டாது என அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடல் @ உலா

## ஜன கன மன - நூறு வயது





வங்காள மகாகவி ரவீந்திரநாத் இயற்றிய இந்திய தேசிய கீதம் முதன் முதலாக கொல்கத்தாவில் பாடப்பட்டு கடந்த டிசம்பர் மாதம் 27ம் திகதியுடன் 100 வருடங்களாகின்றது. இந்தியா சுதந்திரம் பெற்று 65 வருடங்கள் என்ற போதிலும் கூட அதன் தேசிய கீதத்தின் வயது அதனை விட அதிகமானதாகும். ஜன கன மன என்ற பாடலை தேசிய கீதமாக ஏற்றுக்கொள்வதிலும் அதனைப் பாடுவதிலும் அன்று முதல் இன்று வரை சர்ச்சைகளும் நிலவுகின்றன. இந்தியாவின் வடக்கு கிழக்கு பகுதிகள் பற்றி இப்பாடலில் இருந்து விடப்பட்டுள்ளதாகவும் அது சேர்க்கப்பட வேண்டும் என சுட்டிக்காட்டப்படுகின்றது. பாடல் வரிகளில் சிந்து நீக்கப்பட வேண்டும் காஷ்மீர் சேர்க்கப்பட வேண்டும் என வழக்கும் தொடரப்பட்டிருந்தது. இக்கீதத்துக்கு பதிலாக பக்கிம் சந்திர சாட்டர் ஜி எழுதிய **"வந்தே மாதரம்"** தேசிய கீதமாக அறிவிக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கைகளும் எழுப்பப்பட்டன. மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு போன்றோரின் ஆதரவினால் ஜன கன மன தேசிய கீதமாகவும் வந்தே மாதரம் தேசியப் பாடலாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.



## சோடா வரி Sugary Drink Tax

2010 ஜனவரி முதலாம் திகதி முதல் பிரான்ஸில் மென்பானங்கள் மீது புதிய வரி விதிக்கப்படுகின்றது. ஐரோப்பாவிலேயே இத்தகைய ஒரு வரி விதிக்கப்படுவது இது முதன் முறையாகும். இவ்வரி விதிப்பு மூலம் ஒரு லீட்டருக்கு 25-35 சதங்கள் விலையேறும். அதனால் வருடாந்தம் சுமார் 28 கோடி யூரோ வருவாய் நாட்டுக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கடன் சுமையை ஈடு செய்வதற்காக இவ்வரி அறிமுகப்படுத்தப்பட்டபோது அதனை எதிர்த்து மென் பான உற்பத்தி நிறுவனங்கள் வழக்குத் தொடர்ந்தபோதும் அது வெற்றியளிக்கவில்லை.

## வேங்கட்ராமன் ராமகிருஷ்னனுக்கு 'சேர்' பட்டம்



இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட 58 வயதான வேங்கட்ராமன் ராமகிருஷ்னனுக்கு பிரித்தானிய அரசின் அரிய அதி உயர் சிவில் விருதான Knightood எனப்படும் சேர் பட்டம் இவ்வாண்டு வழங்கப்படுகின்றது. அமெரிக்காவில் குடியுரிமை பெற்று பிரித்தானியாவில் ஆய்வுகளை மேற்கொண்டு வரும் இவருக்கு 2009 இல் இரசாயனவியல் துறையில் நோபல் பரிசும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆப்பிள் நிறுவனத்தின் iphone மற்றும் ipad என்பவற்றை வடிவமைத்தவரான Jonathan Ive க்கும் இப்பட்டம் இம்முறை வழங்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CIMA
LEARNING QUALITY PARTNER

# Stand out from the rest
## Lead with Imperial College!

**CIMA Certificate Level Commencing:**
Colombo : Part Time & Full Time June/September
Kandy : Part Time & Full Time June/September

CIMA
Chartered Institute of Management Accountants
EXCLUSIVE

ImperialCollege

- FREE Business English programme
- FREE Customised course material
- FREE Accounting based IT programme
- A seasoned panel of CIMA Gurus with 25 years of International Excellence
- Entitled to a FREE Pass Guarantee
- Coverage of syllabus ahead of time, intensive revision and FREE mock exam CD
- Speed reading programme

CIMA teaches you Strategic Business and Management skills. With the CIMA qualification, you'll be a true business leader.

At Imperial College we have only one focus. To nurture a perfect foundation that will make you stand out from the rest. Should we say more!

*Your Talent. Your College. Your Future.*

**Create Your Own Success Story**

17 WORLD PRIZES | 54 SRI LANKAN PRIZES | YOUNGEST WORLD PRIZE WINNER AT THE AGE OF 17 | YOUNGEST CIMA PASSED FINALIST

ImperialCollege
NURTURING TOMORROW'S LEADERS

www.icbsgroup.com

**Colombo**
No. 320 1/1, Galle Road,
Colombo 03
Phone : 011 451 52 53 / 011 225 77 70
077 237 60 60
Fax : 011 2 501 978
Email : info@icbsgroup.com

**Kandy**
No. 15 George E. De. Silva Mawatha,
Kandy
Phone : 081 4 950 950 / 0773 919 777
Fax : 081 4 950 000
Email : info.kandy@icbsgroup.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CIMA

Chartered Institute of
Management Accountants

'The next generation qualification for

ME



CIMA opens doors to jobs globally, across sectors and industries, helping people build businesses and drive growth.

T. 2503880
www.cimaglobal.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org